09

சக்தி



பொருள் அடக்கம்

மலர் 16 : இதழ் 5

ஆசிரியர் குறிப்பு	...	ஆசிரியர்	1
தமிழகத்தில் தேசிய வரலாறு	...	எஸ். வையாபுரிப் பிள்ளை	2
ஆணும் பெண்ணும்	...	ஜேம்ஸ் எப். பெண்டர்	14
குட்டிக் கதைகள்	...	ஆஸ்கார் ஒயில்டு	16
காலம் கடந்துவிடும்	...	ஐன்ஸ்டைன்	21
கண்மணி	...	செகாவ்	26
படங்கள்	...	....	41—48
"கண்மணி"க்குப் பின்னுரை	...	லியோ டால்ஸ்டாய்	49
'டைபிஸ்டு' வரவில்லை	...	கி. ரா.	55
93 வயது ஷா	...	ஜி. செல்லையா	59
பாபுவும் குழந்தைகளும்	...	தாண்டன்	65
சிறை இல்லாத நாடு	...	"சரித்திராசிரியன"	70
கம்பவர்மன்	...	தி. நா. சுப்பிரமணியன்	74
அஸர்பைஜன்	...	... ...	79
கப்பல் போக்குவரத்து	...	பி. இ. பி.	81
ஏழனை	...	'துறவ	82
கல்வி அபிவிருத்தி	...	பி. இ.	88

விரோதி சக்தி ஆவணி

கடிகாரத்தை அதன் புகழைக் கொண்டு மதிப்பிடுங்கள்

கடிகாரத்தைப் பொறுத்தவரை புகழ் என்பது கவனத்துக்குரிய விஷயம். கடிகாரம் வாங்கும்போது சபல புத்தி கூடாது. ஆகவேதான் புத்தி சாதுர்யமுள்ள, ஜட்ஜ் எடுத்தஎடுப்பிலேயே'வெஸ்ட்எண்ட்'கடிகாரத்தை, அதன் உற்பத்தியாளரின் புகழைக்கொண்டு தேர்ந்தெடுக்கிருர்.

சென்ற முக்கால் நூற்ருண்டுக்காலத்துக்கு மேலாக, நாங்கள் நேர்த்தியான நம்பகமான கடிகாரங்களை விநியோகித்து நல்ல பெயர் சம்பாதித்திருப்பதில் பெருமையடைகிருேம். மேலும், ஒரு "வெஸ்ட் எண்ட்" கடிகாரத்தை வாங்கும்போது, நீங்கள் கொடுக்கும் விலை எதுவாயினும், கடிகாரத்தின் சிறப்பை மட்டும் உறுதியாய் நம்பலாம்.



பிஜோ ரெக்ஸ்—எவர் பிரைட் ஸ்டீல் ரூ. 200/-
18 காரட் தங்கக் கேஸ் ரூ. 420/-

வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி, பம்பாய் & கல்கத்தா

West End Watch Co.

BOMBAY
CALCUTTA



நவீன வீடு, ஆபீஸுக்குத் தேவையான

எஃகு சாமான்கள்

பத்திரமானவை, உபயோகமுள்ளவை, அழகானவை.
எஃகு சாமான்கள் தயாரிப்பதில் பெயர் பெற்ற
அஜாக்ஸ் கம்பெனியார் பலவகையான எஃகு
சாமான்களை திட்டமிட்டு தயாரிப்பதில்
விசேஷ அனுபவம் பெற்றிருக்கிறார்
கள். பூரா பத்திரமளிக்க அஜாக்ஸ் இரும்புப்
பெட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்
றன. தீ, திருடர்களிடமிருந்து காக்க
அவைகளை நம்பலாம்.

Ajax

அஜாக்ஸ் ப்ராடக்ட்ஸ் லிட்.

106, அரமனைக்காரத் தெரு, சென்னை.

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: முருகப்பா & சன்ஸ்.

AJ-3.TM.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 1949
MADRAS

விரோதி
மலர் 16

சக்தி

ஆவணி
இதழ் 5

மெய்ப் பொருள் காண்பது அறிவு

o

ஆசிரியர் குறிப்பு

"மக்களின் தேவைகளை அனுசரித்து, தேசிய வாழ்க்கை உருவாக்கப் பட்டால்தான், சுயராஜ்யம் கிடைத்துள்ளது என்று சொல்லமுடியும். கடந்த இரண்டு வருஷகாலமாக, இந்தியா அந்நியத் தளையிலிருந்து விடுபட்டிருக்கிறது. ஆனால், இது காந்திஜி சுயராஜ்யம் என்று கூறிய சுதந்திரம் ஆகாது. ஏனென்றால், பிரிட்டிஷ்காரர்கள் வகுத்த வழியிலேயே தேசத்தின் வாழ்க்கை இன்னும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்நிய நாணயமாற்றை இச்சிப்பதும், அந்நிய மூலதனத்தை வேண்டிக் கதறுவதும், அந்நிய நாட்டு நிபுணர்களை இறக்குமதி செய்வதும், அந்நிய நாடுகளுக்கு ஸ்தானிகர்களை அனுப்புவதும், உணவு, உடை, வீட்டு வசதி முதலியவை போதாமல் கஷ்டப்பட வேண்டியிருக்கும் மக்களின் வாழ்க்கையில் அணுவளவு மாறுதலும் உண்டாக்கிவிடாது. இந்தத் தேவைகளை மக்களின் முயற்சியைக் கொண்டே சமாளிப்பதற்கேற்ப நம்மை நாமே தயார் செய்துகொண்டாலொழிய, சுயராஜ்யம் என்றும் சுதந்திரம் என்றும் பேசுவது வீணான காரியங்களாகும். வரக்கூடிய வருஷத்திலேனும், இன்றைய நிலைமை நல்ல முறையில் மாறும் என்று நான் நம்புகிறேன்."

மேற்கண்டவாறு தம் சுதந்திர தினச் செய்தியில் தெரிவித்துள்ளார், காந்திஜியின் சீடர் ஸ்ரீ ஜே. சி. குமரப்பா. அவருடைய கூற்றை, தேசநலத்தில் கருத்துடைய யாரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏழை மக்களின் கஷ்டங்கள் இன்னும் தீரவில்லை. இன்றைய நிலையோ காங்கிரஸ்காரர்கள் மீது புகார்களும், காங்கிரஸ் மந்திரிகள் மீது விசாரணையுமாக இருக்கிறது. இது காங்கிரஸின் நற்பெயருக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் பொருந்தாத காரியங்களாகும். தேசத்தின் நன்மைக்காகத் தியாக புத்தியோடு முன்வந்து, காந்திஜி கனவு கண்ட சுயராஜ்யத்தை நிலைநாட்ட காங்கிரஸ்காரர்களும் பிறரும் பாடுபடவேண்டியது அவசியம் என்பதை இந்த சுதந்திரத் திருநாளில் கூற விரும்புகிறோம்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

தமிழகத்தில் எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தேசீய உணர்ச்சியானது தோன்றியது? அது எப்படியெல்லாம் படிப்படியாக வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது? இந்த விபரங்களைத் தெரிவிக்கிறது இக்கட்டுரை.

தமிழகத்தில் தேசீய வரலாறு

○

எஸ். வையாபுரிப் பிள்ளை

இன்று சுதந்திரத்திருநாள். நமது பாரததேசம் அடிமைத்தளை நீங்கி விடுதலை பெற்ற நன்னாள்; பல ஆண்டுகளாக நமது தலைவர்கள் சுயநலமற்று அரிய தியாகங்களைச் செய்து வந்ததன் பலனாக நாம் விடுதலை பெற்றுள்ளோம். அவர்கள் நமது உள்ளத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பாக விதைத்த தேசிய வுணர்ச்சி யென்னும் வித்து காலக் கிரமத்தில் முளைத்துச் செழித்துப் பெரியதோர் விருட்சமாகி வளர்ந்து நமது தேச முழுமைக்கும் நிழல் தந்து அதன் நறுங்கனியாகிய விடுதலையையும் தந்துள்ளது. இந்நாளை நமது தேச முழுவதும் கொண்டாடுகிறது. நமது தமிழ் நாடும் இந்த நாளைக் கொண்டாடுவதில் மிக்க குதூகலத்தோடிருக்கிறது.

இப்பொழுது நமது முயற்சிகளையெல்லாம் பல துறைகளிலும் இயக்கி வரும் தேசிய வுணர்ச்சி நமது தற்கால இலக்கியங்களில் பிரதிபலித்து வருவதும் நாம் பிரத்தியக்ஷமாகக் காண்பதுதான். நமது மூதாதையர் களிடத்து இத் தேசிய வுணர்ச்சி தோன்றியதுண்டா? அவர்கள் காலத்தி லெழுந்த இலக்கியங்கள் இவ்வுணர்ச்சியைப் பிரதி பலித்துக் காட்டுகின்றனவா? அவர்களிடத்தும் இவ்வுணர்ச்சி காணப்பட்டதாயின், தற்காலத்துள்ள நமது உணர்ச்சி மிகவும் உரம் பெற்றுவிடும். எனவே இக் கேள்விக்குரிய விடையைத் தெரிந்து கொள்வது பெரிதும் பயன் தருவதாகும்.

மக்கள் வரலாற்றில் ஆதிகாலத்தில் ஒவ்வொருவனும் தன்னை எதிர்ப்பட்ட மற்றொருவன் தனக்குத் துன்பம் விளைப்பவன் என்றும் தனது பகைவனாகவே கொள்ளத் தக்கவன் என்றும் கருதி வந்தான். இதனால் தற்காப்பு விஷயத்தில் மிகக் கவனமாக இருந்தான். ஆயுதங்கள் விசேஷமாக இல்லாமையாலே, தனக்கு இடுக்கண் நேர்ந்தால் தனது தைரியத்தினாலும் உடல் வலிமையினாலும் அதனைப் போக்க வேண்டியவனாயிருந்தான். இந்தச் சூழ்நிலையிலே அவனது மனத்தில் தைரியம் ஒரு பக்கம் வளர்ந்தது; மற்றொரு பக்கம் அவனது உடல் வலிமை மிகவும் பாதுகாக்கப் பட்டது. கால அடைவில்

ஒருவகையான சமுதாய வாழ்வு ஏற்பட்டது. இவ்வாழ்க்கையிலும் தைரியமும் உடல்வலிமையும் சிறப்பாகக் கணிக்கப்பட்டன. இவ்விரண்டும் அற்றவர்கள் சமுதாய வாழ்வில் கீழ்ப்படியில் இருந்தார்கள். உடைமை யென்ற கருத்தும் இனத்தவர் என்ற கருத்தும் சமுதாய வுள்ளத்தில் வேரூன்றத் தொடங்கின. உடைமையையும் இனத்தையும் இடையூறு அணுகாமற் பாது காத்தற்குச் சிலரது தைரியமும் உடல் வலிமையும் அறிவுவன்மையும் பயன்பட்டன. பின்னர் இவர்களில் ஒரு சிலர் தலைவர்கள், அரசர்கள் என்ற பதவியைப் பெற்றார்கள். இதன் காரணமாக, அரசியல் வாழ்க்கையும் ஏற்படுவதாயிற்று. இங்கேயும் தைரியம் உடல் வலிமை முதலியன மிகுதியும் போற்றப் பட்டன. சுமார் 2000 ஆண்டுகட்கு முன்புள்ள தமிழகத்தில் இத்தகைய வீரவாழ்க்கை புலவர்கள் பாடும் சிறப்புடையதாய், பொது மக்களால் பெரிதும் கௌரவிக்கப்பட்டதாய் விளங்கியது. இது

மறப்புலி உடலின்
மான்கணம் உளவோ?
இருளும் உண்டோ
ஞாயிறு சினவின்?
பண்டச் சாகாட்டு
ஆழ்ச்சி சொல்லிய
அரிமணல் ஞெமிரக்
கல்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்கு
துறையும் உண்டோ?
பொருநரும் உளரோ
நீகளம் புகினே (புறம், 90)

[மறப்புலி - வலிமை மிக்க புலி; உடலின்-சீறினால்; ஞாயிறு-சூரியன்; சினவின்-கொதித்தெழுந்தால்; பண்டச் சாகாடு-பண்டங்களை மிகுதியாக ஏற்றின வண்டி; ஆழ்ச்சி - சக்கரம் புதைந்து ஆழ்ந்து விடுதல்; சொல்லிய-நீக்குதற்கு; ஞெமிர-சிதறிப்பரவ; பக - பிளந்து போக; பெருமிதம் - செருக்கு; பகடு-எருது; பொருநர்-போர்புரியும் வீரர்; களம் - போர்க்களம்.]

என்ற செய்யுளால் விளங்கும். வீரவாழ்க்கையாகிய பண்ணை நிலத்திலே விளைந்ததுதான் தேசிய வுணர்ச்சி. இவ்வுணர்ச்சி படிப்படியாக வளர்ந்து ஓங்கித் தனது பூரண ஆகிருதியை அடைந்த வரலாற்றை நோக்குவோம்.

மேலே குறித்த வீரவாழ்க்கையிலே, ஒரு வீரன் ஆண்மையோடு போர்புரிதலையே ஒரு கடமையாகக் கருதிவந்தனன். இது

எஃகு உளங் கிழிய
இருநில மருங்கின்
அருங்கடன் இறுத்த
பெருஞ்செ யாளனை
யாண்டு உளனோ வென
வினவுதி யாயின்...
சேண் விளங்கு
நல்லிசை நிறீஇ
நாநவில் புலவர்
வாயு ளானே (புறம், 282)

[எஃகு-வேல்; இருநிலமருங்கின்-பெரிய பூமியிலே; இறுத்த-செய்து முடித்த; பெருஞ்செயாளனை-போராண்மைச் செயல் செய்தவனை; சேண்-வெகுதூரத்திலும்; இசை-புகழ்; நிறீஇ-நிறுத்தி; வாயுளான்-வாயினின்றும் பிறக்கும் பாடல்களில் உள்ளான்]

என்ற செய்யுளில் புலப்படுகிறது. இக்கடமை தனது கௌரவத்தையும் புகழையும் காத்தற் பொருட்டாக இருக்கலாம். இது முதற்படி. இங்கே தன் பொருட்டாக ஆண்

மை காட்டப்படுகின்றது. இதற்கு உதாரணமாக, ஒருபுறநானூற்றுச் செய்யுளைக் (80) கூறலாம். சோழ வம்சத்தவனொருவன் ஆமூர்மல்லன் ஒருவனை மற்போரில் வெற்றி கொண்ட செய்தி இச் செய்யுளில் உணர்த்தப்படுகின்றது. இதற்கு மேற்படியாக, தன் பொருட்டாக அன்றி, தன் உடைமையின் பொருட்டுப் போர்புரிதலைச் சொல்லலாம். முற்காலத்திலே ஒருவனுக்குரிய உடைமைகளுள், அவனது பசுநிரை சிறந்ததாகக் கருதப்பட்டது. பசுநிரைகள் அடிக்கடி பகைவர்களால் கவரப்பட்டன. இங்ஙனம் கவரப்பட்ட பசுநிரைகளை மீட்டற்குப் போர்கள் அடிக்கடி நிகழ்ந்தன. இவ்வகைப்பட்ட போரைச் 'செருமலைதல்' என்று இலக்கண ஆசிரியர்கள் பெயரிட்டழைத்தனர். புறநானூற்றில் ஒரு செய்யுள் (259) இப்போரைக் குறிப்பிடுகின்றது. இதனை இவ் இரண்டாம் படிக்கு உதாரணமாகக் கொள்ளலாம். இதற்கு மேற்பட்ட மூன்றாம்படியாக உடைமைகளிற் சிறந்த பிறிதொன்றாகிய நாடுபற்றி, அதற்குரிய அரசன் போர்புரிதலைக் கூறுதல் வேண்டும். இம்மூன்றாம் படியில் தான் நாட்டிற்கும் ஒருவனது ஆண்மைக்கும் தொடர்பு ஏற்படுகிறது. நாடு என்ற அளவிலே 'இராச்சியம்' என்ற கருத்தும் பிறந்துவிடுகிறது. வள்ளுவர் அரசின் அங்கங்களுள் ஒன்றாகிய 'நாடு' குறித்து ஓர் அதிகாரம் வகுத்திருத்தலையும், கௌடில்யர் முதலானோர் 'ஸ்வாம்ய மாத்ய ஜனபத துர்க்ககோச தண்ட மித்ராணி ப்ருக்ருதய:' என அரசாங்களுள் ஒன்றாக ஜனபதம் அல்லது நாடு என்பதனைக் கூறியிருத்தலையும் நாம் கவனித்தல் வேண்டும். மேலை நாட்டு அரசியல்—அறிஞர்கள் இராச்சியம் அல்லது ஸ்டேட் (State) என்ற கருத்தில் குறிப்பிட்ட எல்லையுடைய நாடு (Territory) என்பது அடங்கியுள்ளது என்று கூறுதலையும் நாம் மனங் கொள்ளுதல் வேண்டும். எனவே, இந்தப் படியில்தான் அரசியலுணர்ச்சியென்பது முதன் முதலாக மக்களிடத்துத் தலைக் காட்டுகின்றது. இராச்சியத்தைப் பாதுகாத்தற்கு அரசன் ஆண்மையும் வலிமையும் உடையனாக இருத்தல் வேண்டும்:

மூத்தோர் மூத்தோர்க்
கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த
பழவிறற் றாயம்
எய்தின மாயின்
எய்தினம் சிறப்பெனக்
குடிபுரவு இரக்குங்
கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின், அது
சிறந்தன்று மன்னே ;
மண்டமர்ப் பரிக்கு
மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவ
னாயின், ஆழ்நீர்
அறுகய மருங்கிற்
சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல்
போல நன்றும்
நொய்தால் அம்ம
தானே : மையற்று
விசும்புற ஓங்கிய
வெண்குடை
முரசுகெழு வேந்தர்
அரசுகெழு திருவே

(புறம். 75)

[உய்த்தென-கொண்டு போனபடியால்; பால்-விதி; விறல்-வெற்றி; தாயம் - அரசுரிமை; புரவு - இறை;

சிறந்தன்று - கனத்தது; பரிக்கும் - பொறுக்கும்; மதன் - மனவெழுச்சி; நோன்தாள்-வலிய முயற்சி; மருங்கில்-இடத்தில்; கிடை - கிடைச்சு; என்றூழ்-கோடை; கெழு - பொருந்திய; அரசு-அரசாட்சி]

என்ற செய்யுள் இதனைப் புலப்படுத்தும். இங்குக் குறித்த மூன்றும் படிக்கு உரியதாகப் புறநானூற்றுச் செய்யுள் யாதும் காணுதற்கரிதாயுள்ளது. பொருள் வேண்டியும் புகழ்வேண்டியும் பிற நாடுகளை அழித்த செய்திகளே மிகுதியாய்க் காணப்படுவன. மூன்றும் படியைக் குறிப்பதாக ஒருவாறு கொள்ளற்குரியது பாரியின் பறம்பை மூவேந்தரும் முற்றுகை யிட்டதனையும் (புறம். 110) தன் பறம்பைக் காத்தற்குப் பாரி பேராண்மையோடு போர் புரிந்த அருஞ் செயலினையும், அப் போரில் அவன் மடிந்ததையும், பறம்பு வென்று அழிக்கப் பட்டதனையும் கூறலாம். ஒரு செய்யுள் முக்கியமாகக் கவனித்தற் குரியது.

அற்றைத்திங்கள்
அவ்வெண்ணிலவின்
எந்தையும்உடையேம்எங்
குன்றும்பிறர்கொளார்
இற்றைத்திங்கள்
இவ்வெண்ணிலவின்
வென்றெறிமுரசின்
வேந்தர்எங்
குன்றும்கொண்டார்யாம்
எந்தையும் இலமே

(புறம், 112)

இச்செய்யுள் பாரியின் மகளிர் கூறியதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. அவர்கள் தந்தை மரணம் எய்தியதையும் அவர்களது பறம்பினை அவர்கள் இழந்து விட்டதனையும் இச்செய்யுள் இதயத்தை உருக்குஞ் சோகச் சுவையுடன் எடுத்துரைக்கின்றது. அவர்கள் தங்களது பறம்பின் மீது வைத்திருந்த ஆழ்ந்த பற்றும் இங்கே புலப்படுகிறது.

பறம்பு என்ற அளவில் பாரி இழந்தது ஒரு சிறு குன்று என நினைத்தல் தவறு. இக் குன்றினை அடுத்துள்ள முந்நூறு ஊர்களைக் கொண்ட பறம்புநாடு முழுவதும் அவனுக்கு உரியதாயிருந்து பின் பிறர் வசப்பட்டது. இது

முந்நூறூர்த்தே தண்
பறம்பு நன்னாடு (புறம். 110)

என்ற அடியினால் விளங்கும். இவ்வூர்கள் அனைத்தையும் பரிசிலர்க்கு வழங்கி விட்டு, பாரி இப் பறம்பில் வாழ்ந்து வந்ததாக இச் செய்யுள் அறிவிக்கின்றது. மூவேந்தரும்இப் பறம்பினை முற்றுகை யிட்டனர் என்பது வரலாறு. புறநானூற்றில் வரும் பிற செய்யுட்களையும் நோக்கினால், அவைதோன்றிய காலத்தில் மூவேந்தரும் குறு நில மன்னர்களும் ஒருவரோடொருவர் அடிக்கடி போர் புரிந்து வந்தனரென்பது விளங்கும்.

கொண்டி மிகைபடத்
தண்டமிழ்செறித்துக்
குன்றுநிலைதளர்க்கும்
உருமிற்சீறி
ஒருமுற்றிருவ
ரோட்டிய ஒள்வாட்
செருமிகுதானை
வெல்போரோயே

என்னும் பதிற்றுப் பத்தும் (63) இதனையே வலியுறுத்தும். ஒருசில அரசர்கள் பெருநோக்கு உடையராயினர். அவர்கள் தமிழ் நாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டு அரசாட்சி புரிதல்

வேண்டு என்னும் கருத்தும் உடையரா யிருந்தார்கள். இதற்கு

தண்டமிழ் பொதுவெனப்
பொரூஅன் போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ
ஞயின் கொள்கெனக்
கொடுத்த மன்னர்
நடுக்கற் றனரே
அளியரோ அளியர் அவன்
அளியிழந்தோரே

(புறம், 51)

என்ற செய்யுள் சான்று. முதலடிக்கு 'குளிர்ந்த தமிழ் நாடு மூவேந்தர்க்கும் பொது என்று கூறப் பொருஞய்ப் போரை யேற்று' என்பது பொருள்.

இங்ஙனமாகத் தமிழ்நாடு முழுதும் ஒன்று என்னும் கருத்துப் பிறந்ததும், அதன் தனிமையையும் பெருமையையும் நிலை நாட்டுதற்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. தெற்கேயுள்ள தமிழ்நாட்டாரோடு யாதொரு தொடர்பும் அற்றவர்கள் வடநாட்டிலுள்ளவர்கள். இவ் வடநாட்டினரோடு போர்புரிந்து தமது ஆண்மையைப் புலப்படுத்த வேண்டுமென்று தமிழ் அரசர்கள் கருதினர்கள். இதனை

வடபுல மன்னர்
வாட அடல் குறித்து
இன்ன வெம்போர்
இயல்தேர் வழுதி
இதுநீ கண்ணிய
தாயின், இருநிலத்து
யார் கொல் அளியர் தாமே?

(புறம். 52)

என்ற செய்யுள் புலப்படுத்தும். இவ்வாறு கருதிப் போர்புரிந்த ஆண்மையை நான்காவதுபடியாகக் கொள்ளலாம். தமிழ்நாடு என்பது போன்ற பொதுக் கருத்தும் அதன் பெருமையை நாட்டுதற்குப் புரிந்த போரும் இந்தப் படிக்குரிய சிறப்பியல்புகளாம். இத்தமிழ்நாடு,

வடவேங்கடம் தென்குமரி, ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து

(தொல். பாயிரம்)

எனப் பெருமையுடன் புகழ்ப்பட்டது. இது மூன்று பேரரசர்களுக்கு உரியதாயினும் தனிப் பட்ட எல்லையுடையதாய் ஒற்றுமைப்பட்ட வழக்குடையதாய் மொழி பெயர் தேயத்தினின்றும் பிரித்துத் தமிழகம் என வரையறுத்துக் கூறத் தக்கதாய் விளங்கிற்று எனக் கொண்டனர்.

வண்புகழ்மூவர்
தண்பொழில்வரைப்பின்
நாற்பெயரெல்லை
யகத்தவர் வழங்கும்

(தொல். பொருளதி. 385)

என்ற தொல்காப்பியமும்

கைவன் ஸீகைக்
கடுமான் கொற்ற
வையக வரைப்பிற்
றமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா
நெளிய ஏத்திப்
பாடுப என்ப
பரிசிலர் நாளும்
ஈயா மன்னர்
நாண
வீயாது பரந்த நின்
வசையில் வான்புகழே

(புறம். 168)

என்ற புறநானூறும் இதற்குச் சான்றும்.

இப் படியிலேயே, தமிழகம் என்ற நாட்டின் ஒற்றுமையோடு 'தமிழ்மக்கள்' என்ற மக்களொற்றுமையும் நாம் அடக்கிக் கொள்ளுதல் வேண்டும். தமிழ் என்ற

சொல்லினையே தமிழ் நாடு (புறம், 51) என்ற பொருளிலும் தமிழ் மக்கள் என்ற பொருளிலும் வழங்கலாயினர்.

தமிழ் மக்கள் என்ற பொருளை உட்கொண்டு தொல்காப்பியர்,

தமிழென் கிளவியும் அதனோற்றே
(எழுத்ததி. 386)

என்றொரு சூத்திரம் அமைத்தனர். 'கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்து' (பதிற்றுப் பத்து,63) என்ற அடியில் தமிழ் என்பதைத் தமிழ் மக்களால் ஆகிய படை என்ற பொருளில் கபிலர் வழங்கினர். இதனால் நாட்டொற்றுமையும் மக்களொற்றுமையும் மிகப் பூர்வகாலத்திலேயே நம் மூதாதையரது கருத்துலகில் வந்து விட்டமை அறியலாம்.

ஆனால் இவ்வொற்றுமை கருத்துலகின் அடிப்பரப்பிலே ஆழ்ந்து கிடந்தது. அந்நிய நாட்டாரோடு போர் நிகழ்ந்த சமயங்களில்தான் இது வெளிப்பட்டது. உதாரணமாக, செங்குட்டுவன் ஆரிய மன்னரோடு போர் புரிந்தது தமிழ் மக்களது ஆற்றலை அவர்கள் இகழ்ந்தமையால் என்று சிலப்பதிகாரம் பல இடங்களிலும் கூறுகின்றது.

செறிகழல் வேந்தன்
தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த
ஆரிய மன்னரைச்
செயிர்த் தொழில் முதியோன்
செய் தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட
ஒன்பதிற் றிரட்டி யென்று
யாண்டும் மதியும்
நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலம்
கூட்டி யெண்கொள
வருபெருந் தானை
மறக்கள மருங்கின்
ஒருபக லெல்லை
யுயிர்த்தொகை யுண்ட
செங்குட்டுவன்
(27,நீர்ப்படை 5—13)

என்பது ஓரிடம். இங்கே 'தென் தமிழ் ஆற்றல்' எனப் பெருமிதத்தோடு சுட்டுவது அறியத்தக்கது. 11-ம் நூற்றுண்டின் இறுதியில் அல்லது 12-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தோன்றிய கலிங்கத்துப் பரணி தமிழர் என்ற அளவிலே கலிங்கர் நடுங்கிப் பணிந்தனரெனக் கூறுகின்றது.

ஒருவ ரொருவரி
னேடை முந்தினர்
உடலி னிழலினை
ஓட அஞ்சினர்
அருவர் அருவர்
என இறைஞ்சியே
அபயம் அபயம்
என நடுங்கியே (438)

இத்தாழிசை சான்று. இங்கே அருவர் என்றால் தமிழர். சிலப்பதிகாரமும் பரணியும் வடநாட்டின் மீது தமிழர் படையெடுத்துச் சென்றதனைக் குறித்தல் ஊன்றிக் கவனித்தற் குரியது.

மேலே குறித்தவாறு ஒற்றுமையுணர்ச்சி உள்ளத்தின் அடிப்பரப்பிலே அமிழ்ந்து மறைந்து கிடந்த போதிலும், வேறோர் உணர்ச்சியானது ஆண்மையை ஒரு படி மேலுயர்த்தி நம்மை ஐந்தாம் படியில் ஏற்றுகின்றது. நற்குண நற்செய்கைகளிற் சிறந்த அரசன் இராச்சியத்தின் (State) உத்தமாங்கம்; தேசத்தின் உயிர்; குடிகளின் பிரதிநிதி. ஒரு புற நானூற்றுச் செய்யுள்,

கால்பார் கோத்து
ஞாலத் தியக்கும்
காவற் சாகாடு
உகைப்போன் மாணின்,
ஊறின் ருகி
ஆறு இனிது படுமே;
உயத்தல் தேற்ரு
ஞயின், வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பல் தீ நோய்
தலைத்தலை வருமே (185)

என்று கூறுகின்றது. பிறிதொரு செய்யுள்

நெல்லும் உயிரன்றே
நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே
மலர்தலை யுலகம்
(புறம், 186)

என அரசனை நாட்டிற்கு உயிரா கவே கொள்ளுகின்றது. இதனுல், இராச்சியம் (State) என்ற கருத்து மிகவும் வலிமையுற்றது.

இங்ஙனம் நாட்டின் உயிர் போன்ற அரசன் என்ற கருத்தை அரசியலோடு யாதொரு தொடர் பும் அற்ற துறவியாகிய திருத்தக்க தேவர் புற நானூற்றிலிருந்து எடுத்துத் தமது சீவக சிந்தாமணி யில் உணர்ச்சியற்ற நீதியாக வைத் துள்ளார்.

நெல்லுயிர் மாந்தர்க்கெல்லாம்
நீருயிர் இரண்டும் செப்பில்
புல்லுயிர்; புகைந்து பொங்கும்
முழங்கழல் இலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை
வெண்குடை மன்னர்கண்டாய்
நல்லுயிர்; ஞாலந் தன்னுள்:
நாமவேல் நம்பி, என்ருன் (2908)

என்ற செய்யுளைக் காண்க. அரசின ரோடு தொடர்பு பூண்ட கம்பன் உணர்ச்சி ததும்ப, தனது பெருங் கவித்வம் தோன்ற, இக்கருத்தைக் கூறும் சந்தர்ப்பமும் முறையும் நம்மைப் பெரிதும் வசீகரிக்கின் றது:

திருமணி மகுடஞ் சூடச்
சேவகன் செல்கின்ருனென்று
ஒருவரின் ஒருவர் முந்தக்
காதலோ டுவகை யுந்த
இருகையும் இரைத்துமொய்த்தார்
இன்னுயிர் யார்க்கும் ஒன்ருய்ப்
பொருவருந் தேரிற் செல்லப்
புறத்திடைக் கண்டார்போல்
[வார்
(கைகேசி சூழ்வினை. 83)

இச் செய்யுளிலே இராமன் மகு டஞ்சூடச் செல்லுகின்றது உணர்த் தப் படுகிறது. இராமனைப் போன்று லட்சியமாய் அமைந்த ஓர் அரசகுமாரன் அரசைப் பெற்ற பொழுது நாட்டு மக்கள் ஒவ்வொரு வரும் தங்கள் தங்களுக்கு அரசு கிடைத்ததுபோன்ற உணர்ச்சி யெய்தி மகிழ்ந்தனர்:

ஒத்த சிந்தையர் உவகையர்
ஒருவர்க்கங் கொருவர்
தத்தமக்குற்ற அரசெனத்
தழைக்கின்ற மனத்தர்
(மந்திரப். 76)

அவன் மௌலி கவித்தது ஒவ் வொருவர் சென்னிமீதும் மௌலி கவித்தது போன்றது.

உத்தமத் தொருவன் சென்னி
விளங்கிய உயர்பொன் மௌலி
ஒத்துமெய்க் குவமை கூர
ஓங்குமு லகத்தோர்க்கும்
தத்தமுச் சியின்மேல் வைத்த
தொத்தெனத் தளர்வு தீர்ந்தார்
(திருமுடி சூட்டு. 40)

அவன் போரில் துன்பமுற நேர்ந் தால், சேனைக்குப் பாதுகாவலாய் நின்று துன்பம் அவனை அணுகாத படி செய்வர்:

இன்னும் ஒரு சினிமா நட்சத்திரத்தை
வசியப்படுத்திவிட்டது—இந்த லக்ஸ்
டாய்லட்
சோப்பின்
புதிய பரிமளம்!
"மகிழ்ச்சியுடன் அதிக மலர்ச்சியைத்
தருவது லக்ஸ் டாய்லட் சோப்பின்
இந்த புதிய பரிமளம் தான்"
... என்கிறார் கே. ஆர். செல்லம்
LUX
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 203-50 TM

நீங்கள் இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்வதற்கும்,
லைப் இன்ஷ்யூரன்ஸ் பிரதிநிதியாவதற்கும்
ஓர் அரிய ஸ்தாபனம்

ஹிந்துஸ்தான் கோ - ஆபரேடிவ்

இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்,

கல்கத்தா.

மிகவும் முன்னேற்றமான
லைப் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம்.

★

"முன்னேற்றத்தின் ஒளி."

புதிய வியாபாரம்	ரூ.	13,18,57,258
நடப்பிலுள்ள இன்ஷ்யூரன்ஸ்கள்	ரூ.	63,42,26,959
பிரீமியம் வரவு	ரூ.	2,95,80,454
ஆயுள் நிதி	ரூ.	12,07,20,461
மொத்த ஆஸ்திகள்	ரூ.	13,41,51,007
1948, கொடுக்கப்பட்ட க்ளெயிம்களும், அறிவிக்கப்பட்டவையும்	ரூ.	67,71,446

★

ஏஜண்டுகள் இல்லாத பிரதேசங்களிலிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறோம். விபரங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

★

டிவிஷனல் மானேஜர்,
ஹிந்துஸ்தான் கோ-ஆபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்,
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரண்மனைக்காரத் தெருவு,
ஜி. டி. சென்னை-1.

மனைக்குவிளக் காகிய
வாணுதல் கணவன்
முனைக்குவரம் பாகிய
வென்வேல் நெடுந்தகை...
குடியுமன்னுந் தானே
கொடியெடுத்து
நிறையழிந் தெழுதருதானைக்குச்
சிறையும் தானே தன்
இறை விழுமுறினே

(புறம். 314)

இவன் போர்க்களத்தில் புண்பட்ட படை வீரர்களை நள்ளிரவிலும் சென்று கண்டு, தன் கவலையையும் அன்பையும் காட்டி, அவர்களது அரச பக்தியை மேன்மேலும் மிகுவித்த திறம் நெடுநல் வாடையில் உளங்கனியக் கூறப்பட்டுள்ளது:

களிறு களம்படுத்த
பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண்
காணிய புறம்போந்து...
வேம்புதலை யாத்த
நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை
காட்டப் பின்னர்...
புடைவீழ் அந்துகில்
இடவயின் தழீஇ
வாள்தோட் கோத்த
வன்கட் காளை
சுவல்மிசை அமைத்த
கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த
மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத்
தா துளி மறைப்ப
நள்ளென் யாமத்தும்
பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய
பாசறைத் தொழிலே

(171—188)

[செய்-செயல்; ஒளிறு-விளங்கும்; விழுப்புண்-மார்பிற் புண்; வேம்பு-வேப்பமாலை; யாத்த—கட்டின; நோன் காழ்எஃகம்—வலிய காம்பினையுடைய வேல்; சுவல்-தோள்; கால்—சட்டம். தவ்வென்று - தவ்வென்னும் ஓசைபட்டு; தா துளி-பாக்கின்ற நீர்த்துளி; முரணிய-மாறுபட்டுப் பொருகின்ற; தொழில்-போர்த்தொழில்.]

இந்த உத்தம அரசனைக் குறித்து,

குடிதழீஇக் கோலோச்சு
மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும்
உலகு (குறள். 544)

என்றனர் வள்ளுவரும். இத்தகைய அரசன் இராச்சியத்தைத் தன் குழந்தை போலப் பாவித்துத் துன்பம் அணுகவொட்டாமற் பாதுகாப்பான்.

... ... காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானே அது
பெறலருங் குரைத்தே (புறம்,5)

ஓர் ஏழைக் குடியானவன் தானும் தன் குடும்பத்தினரும் உயிர் வாழ்வதற்குத் தாரகமாயுள்ள ஒரு சிறு வயலை எவ்வளவு அன்போடு, எவ்வளவு கவலையோடு, எவ்வளவு கருத்தோடு பாதுகாத்து வருவானோ, அவ்வளவு அன்போடும் கவலையோடும் கருத்தோடும் அரசன் தன் தேசத்தைப் பாதுகாப்பான்:

எய்யென எழுபகை
எங்கும் இன்மையால்
மொய்பொரு தினவுறு
முழவுத் தோளினன்
வய்யகம் முழுவதும்
வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்தினிது
அரசு செய்கின்றுன்

(அரசியற். 12)

இவ்வாறுமட்டுமா? தன்னை உடலாகக் கருதி, இராச்சியத்தைத் தனது உயிராகவே கொண்டு பாதுகாத்து வருவனென்று கூறி, அந்நியோந்நிய நிலை கற்பித்து, அழியும் உடலினும் அழியாத உயிரின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதன் மூலமாக அரசின் அதிகாரம் அல்லது இறைமை (Sovereignty) முடிவாக மக்களிடத்தே அமைந்துள்ளதென்ற சிறந்த கருத்தினையும் கம்பன் உய்த்துணரவைக்கிறான்.

வைய மன்னுயிராக
அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன
மன்னனுக்கு
(மந்தரை சூழ்ச்சி. 17)

அரசன் இக்கருத்தின் பெருமையை நன்குணர வேண்டும். மக்களது சுதந்திரத்திற்கு எவ்வகையிலும் கேடு சூழாது, அதனைக் கௌரவிக்க வேண்டும். இங்ஙனம் கௌரவியாமற்போனால், குடிகள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளுதற்கு உரிமை யுண்டென்பதை நாவுக்கரசர் தமது அருமைத் திருவாக்கால் உணர்த்துகின்றார்.

நாமார்க்கும் குடியல்லோம்,
நமனை அஞ்சோம்,
நரகத்தில் இடர்ப்படோம்,
நடலை இல்லோம்,
ஏமாப்போம், பிணியறியோம்,
பணிவோ மல்லோம்,
இன்பமே எந்நாளும்,
துன்பம் இல்லை;
தாமார்க்கும் குடியல்லாத்
தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண்
குழை ஓர்காதிற்
கோமாற்கே நாம் என்றும்
மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே
குறுகினோமே (vi 98, 1)

என்ற ஆண்மைப் பெருமொழியை அறியாத தமிழ்மக்கள் இல்லை.

இங்ஙனமாக, ஆண்மை படிப்படியாய் உயர்ந்து ஓங்கி, தேசவொற்றுமையையும் மக்களொற்றுமையையும் இடமாகக் கொண்டு வளர்ந்து, பணைத்து தமிழக முழுதும் கவடுகள் போக்கித் தழைத்து நிழலிட்டு அரசபக்தி காய்த்து, கனி தருதற்குரிய பருவமாய் நின்றது. ஆனால் கனியாய் முதிர்தற்கு வேண்டும் வெப்பம் ஆங்கிலேயர் நமது தமிழ் நாட்டையும் வடநாட்டையும் ஒருங்கு கைப்பற்றி ஆளத் தொடங்கியதன் காரணமாகவே ஏற்பட்டது. அந்நியாது எதிர்ப்பிலேதான் சுதந்திர வுணர்ச்சி பெருகுவது என்ற உண்மை மீண்டும் நிதர்சனமாயிற்று.

நாம் பெற்றுக் கொண்ட ஆங்கிலக் கல்வி மூலமாகச் சுதந்திர வுணர்ச்சி பெருகத் தொடங்கிற்று ஆங்கிலங் கற்றுச் சிறந்த நமது பெரியோர்கள் ஆங்கில இலக்கியத்திலும் ஆங்கிலேய சரித்திரத்திலும் பிற மேனாட்டுச் சரித்திரங்களிலும் மிக்கு விளங்குகின்ற சுதந்திர வுணர்ச்சியை அறிந்து தாமும் அவ்வுணர்ச்சியில் ஈடுபட்டு அவ்வுணர்ச்சியைத் தாம் இயற்றிய நூல்களின் வாயிலாகத் தமிழ் மக்களுக்குப் போதிப்பாராயினர். இவ்வாறு போதித்தவர்களில் தலைசிறந்தவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இவர் தமது மனோன்மணீய நாடகத்தில் சுதந்திர வுணர்ச்சியைப் பல படப் பாராட்

டிக் கூறியுள்ளார். நாட்டுப் பற்று இல்லாதவர் மூச்சு நடைப் பிணத்தின் மூச்சேயன்றி வேறில்லை.

கோட்டமில் உயிர்ப்போ
கூறீர், அன்ன
நாட்டபிமானமில்
நடைப் பிணமூச்சும் (121—2)

என்கிறார். நமது நாட்டின் உரிமைக்குக் கேடு விளையும் போதும் நாம் சாந்தமாயிருக்க வேண்டும் என்பவரை நோக்கி

உரிமைமேல் ஆண்மை
பாராட்டார் சாந்தம்
பெருமையில் பிணத்திற்
பிறந்ததோர் சீதம் (134—5)

என இகழ்கிறார். இங்ஙனம் கேடு விளையுங்காலத்து நாம் கொள்ளும் நேர்மையான சினத்தீ வேள்வித் தீயினும் சிறந்தது.

அந்தணர் வளர்க்கும்
செந்தழல் தன்னினும்
நாட்டபிமானம் உள்
மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க்கு
என்றுமே உவப்பு (136—8)

என முழங்குகிறார். ஆண்மையும் சுதந்திர வுணர்ச்சியும் இடையில் வந்து நம்மோடு ஒன்றாது மறைந்துவிடும் அற்ப விஷயங்களே என்பாரைக்குறித்து

தாய்முலைப் பாலுடன்
வாய் மடுத்துண்டநல்
ஆண்மையும் சுதந்திரக்
கேண்மையும் (128—9)

என அறிவுறுத்துகிறார். யாக்கையின் பயன் இறைவனைப் போற்ற வேண்டியதாயிருக்க, வீணாக நாட்டின் பொருட்டு உயிர் கொடுத்தல் அறிவன்று என்பாரை விளித்து

யாக்கையின் அரும்பயன்
வாய்த்ததிங் குமக்கே
தாயினுஞ் சிறந்த
தயைபூண் டிருந்தநும்
தேயமாம் தேவிக்கு (82-84)

என நன்மொழி வகுக்கிறார். நமது சுதந்திரத்தைப் பேணாமற் போனால், தமிழ் மொழியைப்பற்றிப் பேசுதற்கே உரிமையில்லை.

விந்தம் அடக்கினேன்
தந்தநல் தமிழ்மொழி
தற்சுதந்திரமதும்
அற்பர்வாய்ப்படுமோ (106-7)

என்று வினவுகிறார். நமது புண்ணிய நதியாகிய தாம்பிரவன்னி கூறும் கட்டுரையை மனத்திற் போற்றுதல் வேண்டும்.

ஒருதுளி யேனும்நீர்
உண்டுளீ ராயின்
கருதுவீர் தாம்பிர
வன்னியின் கட்டுரை:
'மக்காள், அருந்தி
வளர்மின்! நுமக்கு
மிக்கோ ரில்லா
வீரமாய்ப் பரந்து
முது சுதந்திரத்தின்
முத்திரையாகி
இது பரிணமித்துஉம்
இதயத்து உறைக!
அன்னியன் கைப்படா
இந்நீர் கற்பிற்கு
இழிவுறின் மார்பினின்று
இதுவே சோரியாய்ப்
பொழிக! நீர் பொன்றிடு
மளவும்' என்றன்றோ
வாழ்த்தி நுந்தமை
வளர்த்தினள் (94-103)

என்று வற்புறுத்துகிறார். பொதிய மலையினின்றும் பிறந்த தென்றற் காற்று அடிமைகள் உயிர்ப்பதற்கு இயற்கையன்னை அளித்ததன்று.

பொதியமா மலையிற்
புறப்பட் டிங்குதன்

படியே யுலாவும் இச்
சிறுகால் பணிந்துமற்று
'அடியேம்' எனத் திரி
பவர்க்கோ உயிர்ப்பு?
(118—120)

எனக் காற்றின் சுதந்திர கதியை நாம் உபதேசமாகக் கொள்ள வேண்டு மென்கிறார்.

ஆனால் இவ்வுபதேசங்க ளெல்லாம் கருத்துலகின் அளவில் அமைந்து விட்டதே யன்றி, செயலுலகில் செயல்களாக இப் பேராசிரியர் காலத்தில் பரிணமிக்க வில்லை. சில ஆண்டுகள் பிற்பட்டு, செயலுலகிலும் இவை பரவின. அதற்கு அனுகூலமாய்த் துணைபுரிந்த சூழ்நிலைகளைச் சிறிது கவனிப்போம்.

முதலாவதாக, ஆங்கில அரசாட்சி நமது தமிழ் நாட்டில் மட்டு மன்றி பாரத தேச முழுமையும் பரவியிருந்தது. கனவிலும் நனவிலும் பாவனையிலும் உண்மையிலும் நம் மூதாதையர் கண்டு கொண்டிருந்த ஏக சக்ராதிபத்தியம் ஆங்கிலேயரால் நிலை நாட்டப் பட்டது. இவ் அந்நிய அரசாட்சியில் வட நாட்டிலுள்ள நமது ஸகோதரர்களுள் கல்வி கேள்விகளில் சிறந்தோர் பல பல குறைபாடுகள் கண்டனர் சுதந்திரவுணர்ச்சி மிக்க இவர்கள் இக் குறைபாடுகளை ஆட்சியதிகாரிகளுக்கு அறிவித்து, நேர்மையான பொறுப்பாட்சியை நிறுவக்கருதி, காங்கிரஸ் ஸ்தாபனம் ஒன்று அமைத்தனர். இந்தஸ்தாபனத்தின் மூலமாக அரசினர் குற்றங் குறைகள் பாரத தேசத்தில் பலர்க்கும் தெளிவாய் விளங்கின. சுதந்திர வுணர்ச்சியும் எங்கும் பரவி மக்கள் மனத்தில் ஆழ்ந்து நிலை பெறுவதாயிற்று. தமிழ் நாட்டிலும் பல பெரியோர்கள் இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து, இதன் வருஷாந்தரக் கூட்டத்திற்குச் சென்று இதன் ஆலோசனைகளிற் பங்கெடுத்து வரலாயினர். தமிழ் நாட்டிலும் அரசினரது குறைபாடுகள் குறித்த பிரசாரமும் சுதந்திரப் பிரசாரமும் நிகழ்ந்தன. பொதுமக்கள் அரசியல் விஷயங்களைக் கவனிக்கவும் சிந்திக்கவும் தொடங்கினர். அரசினர் செயல்கள் பொறுக்க முடியாத கொடுமை நிரம்பி யிருந்தால், அவற்றைக் கண்டித்துக் கூறவும் அவைபற்றிக் கிளர்ச்சி செய்யவும் மக்கள் தயாராகி விட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தீவிர சுதந்திரவுணர்ச்சியும் தேசபக்தியும் நெருப்புப்போல் எங்கும் பாவி விட்டன.

இரண்டாவதாக, ஆங்கில அரசினர் அடக்கு முறையைத் தீவிரமாகக் கையாளத் தொடங்கினர். இது சுதந்திர வுணர்ச்சியையும் தேச பக்தியையும் மிக மிக வளர்த்ததோடு, அங்கங்கே உதாசீன புத்தியோடிருந்த மக்களையும் தேசியக் கிளர்ச்சியில் ஈடுபடும்படி செய்தது. மிதவாதிகளா யிருந்தவர்களைத் தீவிரதேச பக்தர்களாக இவ் அடக்குமுறை செய்துவிட்டது. தேச பக்தனு யில்லாதவனை மக்கள் புறக்கணித்து இகழத் தொடங்கினர். அரசினர் இந் நிலைமையை யுணராது குருட்டுத்தனமாய்த் தங்கள் அடக்குமுறையைப் பகிரங்க தாண்டவம் புரியும்படி செய்தனர். பல அநீதிகளையும் செய்வதற்கு இவர்கள் பின்வாங்கவில்லை. நாடெங்கும் இவர்கள் ஒற்றர்களை அனுப்பி, உளவு காண முயன்றார்கள். விசாரணையின்றிக் கொடுந் தண்டனை விதித்தார்கள். தாங்களே கலகத்தைக் கிளப்பி,

மக்களை ஈனஇரக்கமின்றிச் சுட்டுக் கொலை செய்தார்கள். ஓட்வையர் செய்த பஞ்சாப் படுகொலை மக்கள் உள்ளத்தில் என்றும் ஆருத சினத் தீயை உண்டுபண்ணிவிட்டது.

இவ்விரண்டு காரணங்களாலும் தேசபக்தி கருத்தளவில் நில்லாது செயலிலே புகுந்துவிட்டது. இவற்றையெல்லாம் நன்குணர்ந்து சுதந்திரக் கிளர்ச்சியில் முற்றும் ஈடுபட்டவர் தேசீய கவி சுப்பிரமணிய பாரதி. இவரது உணர்ச்சி நிரம்பிய பாடல்களால்தான் தமிழ் நாட்டில் சுதந்திர வுணர்ச்சி பூரண வடிவு பெற்று முதிர்ந்து கனிவதாயிற்று.

இவர் கவிதையில், தமிழ் நாடு, தெலுங்கு நாடு முதலிய பிரதேசங்களின் அளவில் நின்ற சுதந்திர வுணர்ச்சி அகில இந்தியா முழுதும் பரவிப் பெருருக்கொண்டு பொலிந்து விளங்குவதாயிற்று. தமிழன்னை பாரதமாதாவின் அம்சமாய்க் காட்சியளித்தனள். இவரது கவிதைப் பூஞ்சோலையிலே பாரத தேவி தெய்விக மாமலர் சூடி நிர்த்தனம் புரிகின்ருள். நாமும் நம் முன்ைேர்களும் தொழுதுவந்த தெய்வங்களெல்லாம் பாரததேவியின் மூர்த்தங்களாயினர். இத் தெய்வங்களெல்லாம் சுதந்திரத்தின் பொருட்டாகவே புகழ்ந்து போற்றப்படுகின்றன. பாரதம், இராமாயணம் முதலிய வீரகாவிய சரித்திரங்களெல்லாம் பாரத தேவியின் பெரும் புகழை விரித்துக் கூறுவனவே. பாரததேவியும் பராசக்தியின் சொரூபமே. அவளுடைய உக்கிர மூர்த்தம் பகைவர்களை யெல்லாம் வேரோடு அழிக்க வல்ல போாற்றல் வாய்ந்தது. அவளை வணங்கும் வீர சுதந்திர மதமே பாரதியார் போற்றிவந்த மதம். ஆனல் இம்மதம் உலகப் பெரு மதங்களை யெல்லாம் தன்னுட் கொண்டது. கிறிஸ்து, முகம்மது நபி முதலிய மதஸ்தாபகர்களெல்லாம் இம்மதம் ஏற்றுக்கொண்ட பெருந் தெய்வங்கள்.

உண்மையான தேசபக்தர்கள் இச் சுதந்திர மதத்தின் பிரவர்த்தகர்கள். இவர்கள் என்றும் நம்மால் முடி தாழ்த்திப் போற்றற்குரியர். காந்தியடிகள், லஜபதிராய், திலகர் முதலியவர்கள் இவ்வகைப் பட்ட பெரியோர்கள். வேஷதாரிகளான தேச பக்தர்களைப் பாரதியார் முற்றும் வெறுக்கின்ருர். ஆங்கிலேயரின் அதிகார மனப்பான்மையை மிகவும் கடிந்துரைக்கின்ருர்.

வெளிநாட்டவரால் புகுத்தப் பட்ட அடிமைத்தனத்தைப்போல, நம் நாட்டினரால் பண்டைக்காலந் தொட்டு மேற்கொள்ளப்பட்ட அடிமைத்தனங்கள் யாவும் நம்மால் அறவே ஒதுக்கத் தக்கன. சாதி பற்றிய பிரிவினை ஒழிய வேண்டும். இங்ஙனமே பெண்களின் அடிமைத்தனமும் ஒழிய வேண்டும். பெண்களின் நிலைமையே நாகரிகத்தின் அளவுகோல்.

மேற்கூறியனவெல்லாம் விடுதலையின் பல்வகை அம்சங்கள். இவற்றைத் தெளிந்த மேதையோடும், ஆழ்ந்த வுணர்ச்சியோடும், பரந்துபட்ட கவித்வ—ஆற்றலோடும், அளவிடற்கரிய வேகத்தோடும் பாடியுள்ளார் இப் பெருங் கவிஞர். சுதந்திரத்தில் ஈடுபட்டு நமது உள்ளம் துடிக்குங் காலமளவும் இவர் வாழ்ந்திருப்பரென்பது கூறவும் வேண்டுமா?

ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் அநேக வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆனல் நமக்கு அவை தெரிவதில்லே. மனிதக் கூட்டுறவு ஸ்தாபனமொன்றின் டைரெக்டரான இக் கட்டுரையாசிரியர் எழுதியுள்ள கேள்வி பதில்களிலிருந்து, தொகுத்ததன் சுருக்கம், இது.

எல்லோரும் நினைப்பது போல ஆணுக்குப் பெண் களைத்ததில்லே.

ஆணும் பெண்ணும்

ஜேம்ஸ் எப். பெண்டர்

1. ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் ஆரோக்கியமானவையா?

ஆமாம். குழந்தைப் பருவத்தில் பெண் குழந்தைகளுக்கு நோய் நொடிகள் குறைச்சல். பிற்காலத்தில் கூட, பெண் குழந்தைகளை விட, ஆண் குழந்தைகளுக்கு 50 சதவீதம் அதிகப்படியான சிரத்தையும் கவனமும் செலுத்த வேண்டியிருக்கும்.

2. பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகள் அதி சீக்கிரம் மாணமெய்துகின்றனவா?

ஆமாம். குத்திருமலைத் தவிர, மற்ற நோய்களெல்லாம் பெண்ணை விட, ஆணின் உயிரை அதிகம் குடித்து விடுகின்றன. இது விஷயத்தில் உள்ள விகிதாசாரம் இதுதான். ஆண் : பெண் :: 125·8 : 100.

3. எந்தக் குழந்தை சீக்கிரம் நடக்கப் பழகுகிறது?

விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகளின் மூலம், பெண் குழந்தைகள் ஆண் குழந்தைக்கு இரண்டு வாரத்துக்கு முன்னதாகவே நடக்கப் பழகி விடுகின்றன.

4. யாருக்கு முதன் முதலில் வார்த்தைகள் புரிய ஆரம்பிக்கின்றன?

18 லிருந்து 24 மாத வயதுள்ள குழந்தைகளில் ஆணை விட பெண் தான் சீக்கிரம் வார்த்தைகளைப் புரிந்து கொள்கிறது.

5. யார் நன்ருகப் பேசுகிருர்கள்?

பெண்களுக்குத்தான் வார்த்தைகளை அக்ஷர சுத்தத்தோடு உச்சரிக்க முடிகிறது.

6. யார் அடிக்கடி சிரிக்கிருர்கள்?

பெண் குழந்தைதான் இதிலேயும் முன்னணியில் நிற்கிறது.

7. யார் துடியாகக் கோபப்படுகிருர்கள்?

மூன்று வயதிலிருந்தே ஆண் தான் கோபக்காரனுகிருன். தாயை உதைப்பதும், உதறுவதும், சாமான்களை எறிவதுமான குணம்

பெண் குழந்தையைவிட ஆணிடம் அதிகம்.

8. பொறுமைப் படுவது யார்?

ஆணைவிட, பெண்ணிடம்தான் பொறுமைக் குணம் சீக்கிரம் தலை தூக்குகிறது.

9. யார் வீட்டை விட்டு அதிகம் ஓடுகிறார்கள்?

பெண்ணை விட ஆண்தான் வீட்டை விட்டு ஓடிவிடுகிறான்.

10. எடுத்த காரியத்தை முடிக்கும் வைராக்கியம் யாரிடம் அதிகம்?

பெண்களிடம்தான்.

11. அவசியத்தை முன்னிட்டு யார் அதிகம் பொய் சொல்கிறார்கள்?

பெண் குழந்தைகள். 32 சத வீதம் பெண்கள் பிறரைக் காப்பாற்றுவதற்காகவும், துன்புறுமலிருப்பதற்காகவும் பொய்சொல்லுவார்கள். ஆனால், 82 சத வீதம் ஆண்பிள்ளைகள் வேறு காரணங்களுக்காகவும் பொய் சொல்லுவார்கள்.

12. பெண்களை விட ஆண்கள் அதிகமாக கேள்வி கேட்பார்களா?

ஆமாம். மூன்று வயதிலிருந்து 6 வயது வரை உள்ள குழந்தைகளில், ஆண்தான் கேள்வி கேட்டு நச்சரிப்பான்.

13. சினிமாப் படம் பார்க்கும் போது உணர்ச்சி வசப்பட்டு சிந்தையிழப்பது ஆணா, பெண்ணா?

ஆண்தான்.

14. ஆண்களை விட பெண்கள் படிப்பதில் சிறந்தவர்களா?

ஆமாம். பெண்கள்தான் சிரத்தையுடனும், திறமையுடனும் படிப்பார்கள்.

15. யாருக்கு புத்தி கூர்மை அதிகம்?

அனுபவ பூர்வமான ஆராய்ச்சிகளின் மூலம் பெண்கள்தான் இதிலும் சிறந்தவர்களாகத் தெரிகிறது.

16. யார் இன பந்துக்களிடம் அதிகப் பற்றுக் கொள்வார்கள்?

பெண்தான். பெண்களிடம் அவர்களுக்குப் பற்றுள்ள ஆட்களைக் குறிப்பிடச் சொன்னால், இன பந்துக்களைத்தான் குறிப்பிடுகிறார்கள். ஆணோ, சினிமாவிலும் ரேடியோவிலும் வரும் பாத்திரங்களைத்தான் குறிப்பிடுகிறான்.

17. யாருக்கு விரைவில் பல் முளைக்கிறது?

பெண்ணுக்குத்தான்.

18. வயது ஏற ஏற பெண்கள் அதிகப் பாசம் கொள்கிறார்களா?

ஆமாம். சிறு குழந்தைகள் சரீர ஒட்டுறவின் மூலம் ஆசா பாசத்தை வெளி யிடுகிறார்கள்; வயது வந்த சிறுமிகள் வார்த்தைகளின் மூலம் வெளியிடுவார்கள்.

✲

ஒரு பயம்

ஆங்கில நாட்டில் நாடக ஒத்திகையின்போது, நாடகத்தின் கடைசி வரியை வாசிக்காமலே விட்டு விடுவார்களாம். அதைப் பேசி ஒத்திகை பார்ப்பதில்லை. அப்படிச் செய்தால், அந்த நாடகத்திற்குத் தூதிர்ஷ்டம் பிடித்துவிடுமாம்.

—ஸ்ட்ராண்டு.

ஆஸ்கார் ஒயில்டு (1854—1900) சமத்காரமுமாகவும் சூத்தலாகவும், ஹாஸ்யமாகவும் எழுதும் ஆற்றல்படைத்த ஐரிஷ் எழுத்தாளர். இவரது வசன நடை படிப்பதற்கு மோகன சக்தியும் அழுத்தமும் தருவதாகும். பல நாடகங்களும், கதைகளும் எழுதியிருக்கிறார். ஓரிரு விமர்சன நூல்களும் எழுதியிருக்கிறார். இவரது சலோமி, டோரியன்கிரே சித்திரம் முதலியன பிரசித்தி பெற்ற நூல்கள். இங்கு ஒயில்டின் குட்டிக் கதைகள் சில தரப்பட்டிருக்கின்றன.

குட்டிக்கதைகள்

ஆஸ்கார் ஒயில்டு

சிற்பி

"க்ஷண நேர இன்பம் என்ற கருத்தைத் தெரிவிக்கும் படியான ஒரு சிலையைச் செய்ய வேண்டும் என்ற ஆசை ஒரு சிற்பியின் மனசில் முளைவிட்டது. அதனால் அவன் அந்தச் சிலையை வடிப்பதற்காக, வெண்கலத்தைத் தேடி உலகெங்கும் சென்றான். அவனுக்கு வெண்கலத்தில்தான் சிலை செய்யத் தெரியும்.

ஆனால், உலகத்திலுள்ள வெண்கலமெல்லாம் எங்கோ மறைந்து போய்விட்டது. அந்த வெண்கலமெல்லாம் எங்கு போயிற்று என்பதே தெரியவில்லை. ஆனால், ஒரே ஒரு இடத்தில் மட்டும் வெண்கலம் காணப்பட்டது. அதுவும் ஒரு சிலையில். அந்தச் சிலையின் பெயர் "நிரந்தர துன்பம்!"

அந்தச் சிலையையும் அவன் தான், தன் கைகளாலேயே செய்தவன். அந்தச் சிலை ஒரு சமாதி மேல்—அவன் உயிருக்குயிராக நேசித்த ஒரு ஆன்மாவின் சமாதி மேல்—நின்றது. அந்த ஆத்மா அவனுக்கு உயிருக்குயிராக இருந்ததால், ஒரு மனிதனின் ஆசை சாவதில்லை என்பதற்கும், ஒரு மனிதனின் துன்பத்தின் சின்னமும் நிரந்தரமானது என்பதற்கும் அறிகுறியாக அந்தச் சிலையைச் செய்து வைத்திருந்தான். உலகம் எங்கும் சுற்றினும், அந்தச் சிலையைத் தவிர வேறிடத்தில் வெண்கலத்தையே காண முடியவில்லை. எனவே தான் செய்த அதே சிலையைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு வீடு சேர்ந்தான்; உலையிலிட்டு உருக்கினான்.

"நிரந்தர துன்பம்" என்ற அந்தச் சிலையை அழித்து "க்ஷணநேர இன்பம்" என்ற சிலையைச் சமைத்தான்.

பாபரக்ஷகன்

இரவு நேரம். அவன் (கிறிஸ்து) தனியாகத்தானிருந்தான். தூரத்தில் ஒரு நகரத்தின் மதில் சுவர்கள் தெரிந்தன. அதைக் கண்ட

டீ வருமானத்தைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட நகரங்கள்.

டீ-வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு-சர்க்கார் கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு ரூ. 13 கோடி யளிக்கிறது. உங்கள் டீ அளிக்கும் வருமானத்தைக்கொண்டு அநேக நிர்மாண திட்டங்களுக்கு பண உதவி செய்யலாம். உதாரணமாக தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தை 10 வருஷங்களில் பூர்த்தி செய்ய ரூ. 55 கோடி செலவாகுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதே பத்து வருஷங்களில் டீயிலிருந்து மட்டும் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் அத்திட்டத்திற்கான செலவைப் போல இரண்டத்தனைக்கு மேலாகும். ஆகவே டீ உங்களகத்தில் சுகமும் சந்தோஷமுமளிக்கும் பானம் மட்டுமல்ல, நாட்டின் ஐசுவரியத்தை விருத்திசெய்யும் ஓர் சாதனமுமாகும்.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்.

- 1945–47ம் வருஷங்களில் மொத்த டீ ஏற்றுமதி ரூ. 120 கோடி பெறுமானமுள்ள அயல்நாட்டு நாணயச் செலாவணி யளித்திருக்கிறது.
- இத்தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும்பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.
- உள்நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும் ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்கு கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்திய கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

Lipton's Flowery Orange Pekoe
LIPTON'S
HIMALAYAN BLEND
CHOICE DARJEELING TEA
லிப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான டீ
LTX-152 TM.

வுடன் அந்த நகரத்தை நோக்கி அவன் நடந்தான்.

நகரை நெருங்கியதும் அவன் காதில் பற்பல ஓசைகள் ஒலிக்க ஆரம்பித்தன; ஆனந்த நடனம், சந்தோஷ ஆரவாரம், வீணைகளின் நாதம் எல்லாம் ஒலித்தன. அவன் நகரத்தின் கோட்டை வாசற் கதவைத் தட்டினான்; காவல்காரர்கள் கதவைத் திறந்தனர்.

திறந்தவுடன் அவன் கண் முன் ஒரு சலவைக்கல் வீடு தெரிந்தது; அந்த வீட்டின் தூண்கள் கூட சலவைக் கல்லால் செதுக்கப்பட்டிருந்தன. தூண்களில் மலர் மாலைகள் தொங்கின; தேவதாரு மரத்தால் செய்த தீபாலங்காரங்கள் உள்ளும் புறமும் ஒளி செய்தன. அவன் வீட்டுக்குள் சென்றான். வைர வைடூரியங்கள் பதித்த ஹாலையும், சூரிய காந்தக் கல்மண்டபத்தையும் கடந்து அவன் விருந்து மாளிகைக்கு வந்து சேர்ந்தான். அங்கு செக்கச் சிவந்த ஒரு ஆசனத்திலே, தலையிலே சிவந்த ரோஜாக்களால் அலங்கரித்த, ஒயினைப் போல் சிவந்த உதடுகளுடைய ஒருவன் படுத்திருந்தான்.

அவன் அந்த மனிதனுக்குப் பின்னாகச் சென்று அவன் தோளைத் தொட்டான்.

“நீ ஏன் இப்படி வாழ்கிறாய்?” என்று கேட்டான்.

அந்த இளைஞன் திரும்பி, வந்தவனை அடையாளம் கண்டுகொண்டான். பிறகு பதில் சொன்னான். “நான் ஒரு குஷ்டரோகியாயிருந்தேன். நீ என்னைக் குணப்படுத்தினாய். அதன்பின் நான் எப்படித்தான் வாழ்வது?” என்றான்.

வந்தவன் அந்த வீட்டைவிட்டுக் கிளம்பி தெருவுக்கு வந்தான். சிறிது நோத்தில் அவன் தெருவில் ஒரு பெண்ணைப் பார்த்தான். அவளது கால்களில் முத்துக்கள் மினுங்கின; முகத்திலும், ஆடையணிகளின் வர்ணஜாலம் மின்னின. அவளுக்குப் பின்னாலேயே, ஒரு வேடுவனைப்போல, ஒரு இளைஞன் பின் தொடர்ந்து வந்தான். அந்தப் பெண்ணின் முகம் ஒரு சிலையின் முகத்தைப் போல அழகாக இருந்தது. அந்த இளைஞனின் கண்களில் காம ஒளி வீசிற்று.

அவன் அந்த இளைஞனைப் பின் தொடர்ந்து சென்று அவனைப் பார்த்து, “நீ ஏன் அவளை அப்படிப் பார்க்கிறாய்?” என்று கேட்டான்.

அந்த இளைஞன் திரும்பிப் பார்த்து வந்தவனை அடையாளம் கண்டுகொண்டான். பிறகு, “நான் குருடாயிருந்தேன்; நீர் கண்களைக் கொடுத்தீர். நான் வேறு எதைப் பார்ப்பது?” என்று பதில் சொன்னான்.

பிறகு அவன் அந்தப் பெண்ணின் முன்னால் சென்று அவள் ஆடையைப் பற்றிக் கொண்டு, “பாபத்தின் வழியைத் தவிர, உனக்கு நடப்பதற்கு வேறு பாதையே இல்லையா?” என்றான்.

அவள் திரும்பிப் பார்த்தாள்; அடையாளம் புரிந்து கொண்டாள். சிரித்தாள். “நீர்தான் எனது பாபங்களை யெல்லாம் ரக்ஷித்து விட்டீரே. எனவே இதுவும் நல்ல வழிதானே!” என்றாள்.

அவன் அங்கரத்தை விட்டு வெளி வந்தான்.

நகரத்தைக் கடந்து வெளியே வந்தவுடன், ரோட்டுப் புறமாக ஒரு இளைஞன் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான். அவன் அவனை நெருங்கி, தலையைத் தடவி "ஏனப்பா அழுகிறாய் ?" என்று கேட்டான்.

அதற்கு அந்த இளைஞன் சொன்னான்: "நானோ செத்துப் போனேன்; நீரோ எனக்கு உயிர் கொடுத்தீர்! நான் அழாமல் வேறு என்ன பண்ணுவதாம்!'

சீடப்பிள்ளை !

நார்ஸிஸஸ் இறந்துபோன பின்னர் அவன் நேசித்து வந்த குளத்துத் தண்ணீர் தனது இனிமையை இழந்து உப்புக்கரிக்கும் தண்ணீர்க் குளமாக மாறிவிட்டது. தேவதைகள் அந்த வனப்பிரதேசம் வழியாகக் கண்ணீர் வடித்துக் கொண்டே வந்தார்கள்; சிறிது நேரம் ஏதாவது பாடி, அந்தக் குளத்துக்கு ஆறுதல் அளிக்கலாம் என எண்ணினார்கள்.

குளத்து நீர் தேனாக இருந்தது போய், உப்புநீராக மாறிவிட்டதை அறிந்து அவர்கள் தமது தலைமயிரை அவிழ்த்துப் போட்டு, அழுதார்கள். பிறகு குளத்தைப் பார்த்து, "நார்ஸிஸசுக்காக நீ இப்படிக் கண்ணீர் வடிப்பதைக் கண்டு நாங்கள் ஆச்சரியப் படவில்லை. அவன் அத்தனை அழகன் தான்" என்றார்கள்.

"அவன் அத்தனை அழகனா?" என்றது குளம்.

"உன்னைவிட வேறு யாருக்கு அவன் அழகு தெரியும்? நாங்களும் அவனைப் பார்த்திருக்கத் தான் செய்கிறோம். என்றாலும் உன்னிடம்தானே அவன் வந்து கிடந்தான். உனது கரையிலேயே கிடந்து, உன்னையே பார்த்து, உன் மீது தெரியும் தனது பிரதிபிம்பத்தைக் கண்டு கொண்டிருந்தானே!" என்றார்கள் தேவதைகள்.

"அப்படியா? நானும் தான் நார்ஸிஸை விரும்பினேன். அவன் என் கரைமீது இருந்து என்னைப் பார்த்தபோது, அவனது கண்களில் நானும் எனது பிரதிபிம்பத்தைத் தான் கண்டு கொண்டிருந்தேன்" என்றது குளம்!

அவன் கவலை

உலகத்தில் இருள் படர்ந்தது. யோசேப்பு கையில் ஒரு சவுக்குக் கட்டைத் தீப்பந்தத்தை ஏந்திக் கொண்டு, மலையடிவாரத்தில் இறங்கி வந்தான்.

வரும் வழியில் ஒரு இளைஞன் நிர்வாணமாக நின்று அழுதுகொண் டிருப்பதைக் கண்டான். அவனது தலைமயிர் தேனைப் போல் நிறம் படைத்திருந்தது. தேகம் வெண்மையாக இருந்தது. அவன் தன் உடம்பை யெல்லாம் முட்களால் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவனது தலையில் சாம்பல் சிகரமாக குவிந்திருந்தது.

யோசேப்பு அவனை நெருங்கிச் சொன்னான்: "நீ வருத்தப் படுவதில் அர்த்தம் உண்டு. அவர் (ஏசு கிறிஸ்து) அவ்வளவு நல்ல மனிதர்!"

"நான் அவருக்காக அழவில்லை. எனக்காகத் தான் அழுகிறேன். நானும் தண்ணீரை ஒயினாக மாற்றினேன். நானும் குஷ்டரோகியைக்

குணப் படுத்தினேன். நானும் குருடனுக்குக் கண் கொடுத்தேன். நானும் நீர் மேல் நடந்திருக்கிறேன். சமாதிக் குழிகளிலிருந்தே பிசாசுகளை நானும் விரட்டியிருக்கிறேன். உணவற்ற பாலைவனத்து மத்தியிலும் பசித்தவருக்கு உணவு அளித்திருக்கிறேன். செத்தவரைப் பிழைக்கவும் வைத்திருக்கிறேன். பெரிய ஜனத்திரளுக்கு முன்பாக எனது ஒரே சொல்லால் ஒரு மரத்தைப் பட்டுப் போகச் செய்திருக்கிறேன். அந்த மனிதர் செய்த அனைத்தையும் நானும்தான் செய்திருக்கிறேன். ஆனாலும் அவர்கள் என்னைச் சிலுவையில் அறையவில்லையே!'' என்று அங்கலாய்த்தான் இளைஞன்.

நியாயத் தீர்ப்பு நாளில்

நியாயத் தீர்ப்பு மண்டபத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. மனிதன் ஆண்டவன் முன்னால் நிர்வாணமாய் வந்தான்.

கடவுள் அந்த மனிதனின் வாழ்க்கைக் குறிப்பைப் புரட்டிப் பார்த்தார். பிறகு அந்த மனிதனைப் பார்த்து, உன் "வாழ்க்கை தீமை நிறைந்தது. உதவி நாடியவருக்கு நீ கொடூரம் செய்தாய். ஈரமற்ற நெஞ்சுடன், கசப்புடன், நடந்து கொண்டாய். ஏழைகள் உன்னிடம் இரங்கியபோது, உனது காதுகள் அதனைக் கேட்கவில்லை. நீ பக்கத்து வீட்டுக்காரன் தோட்டத்துக்குள் நரிகளை விரட்டி விட்டாய். குழந்தைகளுக்கென்றிருந்த ரொட்டிகளை நாய்களுக்கு விட்டெறிந்தாய். ஊருக்குள் திரிந்து என் புகழ் பாடிய குஷ்டரோகிகளை நீ வெளியே துரத்தியடித்தாய். நான் படைத்த எனது பூமியில், நீ பச்சை ரத்தத்தை சிந்தினாய்!'' என்று குற்றம் சாட்டினார்.

"ஆமாம், செய்யத்தான் செய்தேன்'' என்றான் மனிதன்.

கடவுள் மேலும் வாசித்தார்: "உன் வாழ்வு தீமை மயமானது. நான் காட்டிய அழகை நீ அடைய விரும்பினாய். நான் மறைத்து வைத்த நல்ல பொருட்களை நீ காணவே இல்லை. உனது வீட்டில் சித்திரங்கள் தீட்டினாய். எழுந்திருக்கும் போது வீணா நாதம் காதில் கேட்க, எழுந்திருந்தாய். நான் கஷ்டப்பட்டு ஒதுக்கி வைத்த பாவங்களுக்கு நீ ஏழடுக்கு மாளிகை கட்டினாய். தின்னக் கூடாததைத் தின்றாய். உனது ஆடைகளில் அவமானச் சின்னத்தைக் குறித்துக் கொண்டாய். உனது விக்ரஹங்கள் பொன்னாலோ வெள்ளியாலோ ஆனவையல்ல. ஆனால், அழிந்துபோகும் சதையினால் ஆனவை. அவர்களது தலைமயிரை நீ களப கஸ்தூரிகளால் மணம் ஊட்டினாய்; கைகளுக்கு மருதோன்றி நீட்டினாய். அவர்கள் கால்களுக்கு குங்குமம் பூசினாய்; நடைபாவாடையாக, ஜமுக்காளம் விரித்தாய். அவர்கள் கண்ணிமைக்கு அஞ்சனம் தீட்டி, உடம்பு முழுவதும் ரத்னமணிகள் அணிவித்தாய். அவர்களுக்கு முன்னால் நீ தலை வணங்கினாய். உன் விக்ரஹங்களில் சிம்மாசனங்கள் சூரிய ஒளி செய்தன. உனது மான ஈனத்தைச் சூரியனுக்கும், பைத்தியத்தைச் சந்திரனுக்கும் காட்டினாய்!'' என்றார், கடவுள்.

"ஆமாம்—செய்யத்தான் செய்தேன்'' என்றான் மனிதன்.

மூன்றாவது தடவையாக கடவுள் அவனது குறிப்பைப் புரட்டினார். பிறகு சொன்னார்: "உனது வாழ்வு தீமை மயமானது. நன்மை செய்தவருக்கு தீமையும், அன்பு காட்டியவருக்கு அநீதியும் செய்திருக்கிறாய். உனக்கு அன்ன மூட்டிய கைகளை நீ காயப் படுத்தினாய். பாலூட்டிய மார்பை நீ இகழ்ந்து பேசினாய். தாகத்துக்குத் தண்ணீர் கேட்டுவந்தவனுக்கு நீ தண்ணீர் அளிக்கவில்லை. பிரஷ்டர்களுக்கு உன் கூடாரத்தில் தங்க இடம் கொடுத்தாய். பிறகு காலையிலே அவர்களைக் காட்டியும் கொடுத்தாய். உன்னை மன்னித்த உன் எதிரியை நீ விட்டுவைக்கவில்லை. உன்னைத் தொடர்ந்து வந்த நண்பனையும் நீ விலை சாட்டி விட்டாய். உன்னிடம் காதல் கொண்டவரிடம் நீ காமத்தையே பதிலாக அளித்தாய்!" என்று குற்றம் சாட்டினார்.

"ஆமாம்—செய்யத்தான் செய்தேன்" என்றான் மனிதன்.

கடவுள் புத்தகத்தை மூடி வைத்து விட்டு, "பிறகு உன்னை நிச்சயம் நரகத்துக்கு அனுப்ப வேண்டியதுதான்!"

"அது உம்மால் முடியாது!" என்றான் மனிதன்.

"ஏன் உன்னை அனுப்ப முடியாது?" என்றார் கடவுள்.

"ஏனெனில் நான் நரகத்தில் தானே எப்போதும் வசித்து வந்திருக்கிறேன்!" என்றான் மனிதன்.

நியாய சபையில் ஒரு கணம் அமைதி நிலவியது.

சிறிது நேரம் கழித்து கடவுள் சொன்னார், "அப்படி யானால், நான் உன்னை சுவர்க்கத்திற்கு அனுப்பி விடுகிறேன்."

"அதுவும் உம்மால் முடியாது!" என்றான் மனிதன்!

"ஏன்?" என்றார் கடவுள்.

"ஏனெனில், நான் எங்கும் எப்போதும், அதைக் கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை!" என்றான் மனிதன்.

நியாய சபையில் மீண்டும் அமைதி நிலவியது.

✲

கடவுள் அருள்தான்!

கடவுள் அருளால் ஸ்ரீமான் கார்லைலும் ஸ்ரீமதி கார்லைலும் கல்யாணம் செய்துகொண்டது நல்லதாகப் போயிற்று. இல்லை என்றால், இந்த இரண்டுபேர் கஷ்டப்படுவதுபோய் நான்கு பேர் கஷ்டப்பட நேர்ந்திருக்கும்.

—ஸாமுவேல் பட்லர் (ஒரு கடிதத்தில்)

மூன்று மோசங்கள்

குதிரைமேலேறி பந்து விளையாடும்போது குதிரையிலிருந்து கீழே விழுவதும், காலில் செருப்பு மாட்டிக்கொண்டு படுத்து உறங்கப் போவதும், மாமியார் இருக்கும்பொழுது காதல் பாட்டுக்களைப் பாடுவதும் மோசமானவை.

—சீனக்கவி லீ ஈ—ஷான்.

சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் ஜேர்மன் தேசத்தில் வ்ரோக்லாவில் (ப்ரேஸ்லா) கூடிய அறிஞர்கள் காங்கிரசுக்கு பேரறிஞர் ஐன்ஸ்டைன் அனுப்பிய செய்தி இது. இன்றைய உலகப் போக்கைப்பற்றி ஐன்ஸ்டைன் என்ன கருதுகிறார்? விமோசனத்துக்குஎன்னமார்க்கத்தைக் காண்பிக்கிறார்?

காலம் கடந்துவிடும்

ஆல்பேர்ட் ஐன்ஸ்டைன்

இன்று பற்பல நாடுகளையும் சேர்ந்த அறிஞர்களும், பண்டிதர்களுமாகிய நாம் கூடியிருக்கிறோம். இப்போது சரித்திர பூர்வமான ஒரு பெரிய பொறுப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு அவசரமான காரியத்தைச் செய்து முடிப்பதற்காக நாம் கூடியிருக்கிறோம். உலகமெங்கும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்காக அறிஞர்களின் செல்வாக்கையெல்லாம் இன்று பிரயோகிக்க வேண்டும். பரம்பரை வியாதியைப் போல இருந்து வரும் குறைகுணங்களுக்கும், உணர்ச்சி வெறிகளுக்கும் தலைகுனிந்து கொடுத்துவிடாமல், பகுத்தறிவைப் பிரயோகித்து மனிதனுடைய பிரச்னைகளுக்கு விமோசனம் தேடவேண்டும். இந்தக் காரியத்தைச் சாதிக்க முதல் முதலில் அரும்பாடு பட்டவர்களில் பிளேட்டோவும் ஒருவர். ஆகவே இது மிகவும் நீண்ட காலமாக இருந்து வரும் ஒரு சமாச்சாரமாகும்.

வேதனை மிக்க அனுபவங்களின் மூலம் ஒரு உண்மையை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். அதாவது நம் சமுதாய வாழ்வின் பிரச்னைகளைத் தீர்க்க பகுத்

தறிவுள்ள சிந்தனை மட்டும் போதாது. நுணுகிய ஆராய்ச்சியும், அபூர்வமான விஞ்ஞான சாதனைகளும் மனித சமுதாயத்தை பல முறையும் ஆபத்தில் சிக்க வைத்திருக்கின்றன. ஒருபுறம் புதுப் புது சாதனங்களை விஞ்ஞானம் சிருஷ்டித்திருக்கிறது. அதன் மூலம் மிகக் கஷ்டமான சரீர உழைப்பிலிருந்து மனிதனுக்கு விடுதலை அளித்து, அவனுடைய வாழ்க்கையை இலகுவாக்கி, வளமாக்கியும் இருக்கிறது. அதே சமயத்தில் மறுபுறம் அவனுடைய வாழ்க்கையில், பயங்கரமான முறையில் அமைதியின்மையை உண்டாக்கி, அவனை யந்திரச் சூழ்நிலைக்கு அடிமையாக்கியும் வந்திருக்கிறது. எல்லாவற்றையும் விடப் பெரிய அபாயமாக மனித குலத்தைக் கூட்டம் கூட்டமாக நாசமாக்கக் கூடிய சாதனங்களையும் விஞ்ஞானம் சிருஷ்டித்துக் கொண்டு வருகிறது. உண்மையில் இது கண்ணை உறுத்தக் கூடிய பரிதாபகரமான விஷயம்.

இது எவ்வளவு பரிதாபகரமாக இருந்த போதிலும், இதைவிட அதிகப் பரிதாபகரமான விஷயம் ஒன்று இருக்கிறது. அது என்ன? விஞ்ஞானத்திலும் யந்திரத்துறையிலும் அபரிமிதமான வெற்றி பெற்ற பலரை மனிதவர்க்கம் பெற்றுக் கொடுத்திருந்தும், அவர்களுக்கு (நமக்கு) நம்மை முடக்கிக் கட்டிப்போட்டிருக்கும் பல அரசியல் போராட்டங்களுக்கும் பொருளாதார மந்தங்களுக்கும் நிவர்த்தி தேடும் ஆற்றல் இல்லாமல் போய்விட்டது. உலகத்தில் இன்று நிலவியுள்ள அபாயகரமான நிலைக்குப் பெரும்பாலும் காரணமாக இருப்பது பற்பல நாடுகளின் பொருளாதார ஆசைகளின் மோதல்கள்தான் என்பதில் சந்தேகமே இல்லை. உலக நாடுகள் ஒற்றுமையுடன் அமைதியாக வாழ்ந்து வருவதற்கு உத்தரவாதம் அளிக்கும் அரசியல் கட்டுக் கோப்பையோ பொருளாதாரக் கட்டுக் கோப்பையோ கிருஷ்டிப்பதில் மனிதன் வெற்றி பெறவில்லை. யுத்தம் ஏற்படுவதற்கு வழியில்லாமல் செய்வதும், மனிதக் கூட்டத்தை கும்பல் கும்பலாகக் கொன்று தீர்க்கும் கொலைக் கருவிகளை நிரந்தரமாக ஒழித்து விடுவதுமான ஒருவகைத் திட்டத்தை உருவாக்குவதில் மனிதன் இன்னும் வெற்றி பெறவில்லை.

நாச காரியங்களைப் பயங்கரமான முறையில் வெற்றிகரமாகச் செய்வதற்குரிய சாதனங்களை உண்டாக்குவதில் உதவிபுரிவதே விஞ்ஞானிகளாகிய நம்முடைய தலைவிதி என்று ஆகிவிட்டது. இந்த நிலையில் இந்தக் கொலைக் கருவிகள் எந்தக் காரியத்திற்காகச் செய்யப் பட்டனவோ அந்தக் காரியத்தை அவை செய்யாமல் தடுக்க நம்மால் முடிந்த அளவு பாடுபடுவது நம்முடைய புனிதமான கடமையாகும் என்பதை உணரவேண்டும். இதைவிட நமக்கு வேறு என்ன முக்கியமான வேலை இருக்க முடியும்? நம் மனதுக்கு இதைவிடப் பிடித்ததாக வேறு என்ன சமூக பூர்வமான லட்சியம் இருக்க முடியும்? உலக நாடுகளை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் ஆத்மீகப் பாலங்களையும் விஞ்ஞானப் பாலங்களையும் நாம் நிர்மாணிக்க வேண்டும். நாடு

களைப் பிரிக்கும் எல்லைகள் என்ற பயங்கரத் தடங்களையும் நாம் ஒதுக்கித்தள்ள வேண்டும்.

சிறு சிறு சமுதாயங்களாகக் கூடி வாழ்க்கை நடத்தும்போது, சமூக விரோதமான அரசுகளை உடைத்தெறிவதில் மனிதன் சற்று முன்னேறியிருக்கிறான். உதாரணமாக நகர வாழ்க்கையைப் பொறுத்த மட்டிலும், ஓரளவுக்கு தனித்தனியாக உள்ள நாடுகளின் சமுதாய விஷயத்திலும் இது உண்மையாக இருக்கிறது. இப்படிப்பட்ட சமுதாயங்களில் மரபுக்கும்,கல்விக்கும், பண்பையும், பொறுமையையும் கொடுக்கும் சக்தி உண்டு. அவை, மக்களிடையே சகிப்புத்தன்மை நிறைந்த உறவுகளையும் நிலைநாட்டியிருக்கின்றன. ஆனால் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையே உள்ள உறவு விஷயத்தில் இன்னும் அராஜகம்தான் நிலவிவருகிறது. இந்த விஷயத்தில், கடந்த சில ஆயிரக்கணக்கான வருஷ காலத்திலும் கூட நாம் உண்மையில் முன்னேறியிருக்கிறோம் என்று என்னால் நம்ப முடியவில்லை. இன்னும் தேசங்களுக்கிடையே அடிக்கடி தோன்றும் எல்லா முரண்பாடுகளும்கூட, மிருக பலத்தினால், யுத்தத்தினால் தான் தீர்க்கப்பட்டு வருகின்றன. மேலும் மேலும் கட்டுக்கடங்காமல் அதிகமான அதிகார ஆசை ஏற்பட்டுக் கொண்டிருப்பதால், தக்க சந்தர்ப்பமும், பலமும் கிடைக்கும் போதெல்லாம் ஆக்கிரமிப்பில் குதிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

சர்வதேசிய விஷயங்களில், இப்படிப்பட்ட அராஜகநிலை, இவ்வளவு காலமும் மனிதவர்க்கத்துக்கு வருணிக்கமுடியாத அளவுக்குத் துன்பங்களையும் நாசங்களையும், இழைத்திருக்கிறது; மறுபடியும் மறுபடியும் அது மனித வளர்ச்சியையும், மனித ஆத்மாவின்வளர்ச்சியையும், மனிதனுடைய சுகவாழ்க்கையையும் குலைத்துக் குந்தகமாக்கியிருக்கிறது; சில சந்தர்ப்பங்களில், சில இடங்களில் வசித்த மனிதக் கூட்டத்தையே இருந்த இடம் தெரியாமல் அறவே ஒழித்து நாசமாக்கியுமிருக்கிறது.

யுத்தத்துக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று நாடுகள் அடிக்கடி விரும்புவதால், அதன் எதிரொலி மனித உயிர்களையும் மோசமான நிலையில் பாதிக்கிறது. யுத்தத்துக்குத் தயாராக இருக்க விரும்பியதன் காரணமாக கடந்த சில நூற்றாண்டுகளாக ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் மக்கள் மீது உள்ள அதிகாரம் மிகவும் அதிகமாகிவிட்டது. இந்த விஷயம் அரசாங்க அதிகாரத்தைக் கொடுமைப்படுத்த உபயோகித்து வந்த நாடுகளில் மட்டுமல்லாமல், அரசாங்க அதிகாரத்தை புத்திசாலித்தனமான முறையில் கையாண்டு வந்த நாடுகளிலும்கூட உண்மையாக இருக்கிறது. தேசப் பிரஜைகளிடையே சமாதானமான, ஒழுங்கு முறையுள்ள உறவை நிலைநாட்டிக் காப்பாற்றுவதற்காக அரசாங்கம் செய்துவரும் காரியத்தில் நாளுக்குநாள் சிக்கல்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன; அரசாங்கம் செய்யும் காரியம் அனுவசியமாக விரிவாகிக்கொண்டும் வருகிறது. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், நவீன யந்திர சாதனங்கள் யாவும் ஒரு

குறிப்பிட்ட இடத்தில் மொத்த மாகக் குவிந்து கிடப்பதுதான்.

வெளியிலிருந்து வரும் படையெடுப்பையோ, தாக்குதலையோ எதிர்த்து நின்று, தன் பிரஜைகளைக் காப்பாற்றுவதற்காக, நவீன அரசாங்கத்துக்கு, நாளுக்குநாள் பெருகிக்கொண்டுவரும் ராணுவ வசதிகள் தேவைப் படுகின்றன. மேலும், தன் பிரஜைகளுக்கு யுத்தம் வரும்போது செய்ய வேண்டிய காரியங்கள் சம்பந்தமாகப்புதுப்பாடங்களைச் சொல்லிக் கொடுக்கவேண்டியது அவசியம் என்று அரசாங்கம் கருதுகிறது. இந்தப் பாட போதனை வாலிபர்களின் மனதையும், ஆத்மாவையும் பாழாக்குவதுடன், பெரியவர்களின் மனப்போக்கையும் நேருக்குமாறான முறையில் பாதித்து விடுகிறது இப்படிப் பாழாகப் போவதைத் தடுத்து நிறுத்த எந்தத் தேசத்தினாலும் முடியாது. யுத்தத்துக்குத் தயாராக உள்ள நாட்டு மக்களை மட்டுமல்லாமல், வெளிப்படையாக ஆக்கிரமிப்பு நோக்கங்களைத் தெரியப்படுத்திக்கொள்ளாதிருக்கும் நாடுகளில் வாழும் மக்களையும் கூட இந்த "யுதத போதனை" போய்ப்பாதிக்கிறது. இந்த முறையில், அரசாங்கம் இப்போது நவீன கடவுளாக மாறியிருக்கிறது. இந்த மூர்த்தியின் சங்கேதமான சக்தியிலிருந்து தப்புவது கூட சிரமமாக இருக்கிறது.

யுத்தத்துக்காக நடக்கும் போதனை என்பது இன்று வெறும் ஆகாயக் கோட்டையே ஒழிய வேறில்லை. ஏனென்றால், கடந்த சில வருஷங்களில் ஏற்பட்ட யந்திர வளர்ச்சி, ராணுவ நிலையில் முற்றிலும் புதிய மாறுதலைப் புகுத்திவிட்டது. மகா பயங்கரமான ஆயுதங்களெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எண்ணற்ற ஜனக்கூட்டத்தையும், மிகப் பரந்த நிலப்பரப்பையும் அந்த ஆயுதங்கள் ஒரு சில கணங்களுக்குள்ளாக நாசமாக்கி விடமுடியும். இந்த ஆயுதங்களினின்றும் பாதுகாப்புத் தேடிக் கொள்ளுவதற்குரிய மார்க்கத்தை விஞ்ஞானம் இன்னும் கண்டு பிடிக்கவில்லை. அப்படியிருக்க தன் பிரஜைகளின் பாதுகாப்புக்காக நவீன அரசாங்கம் தக்க முறையில் தன்னைத் தயார் செய்துகொள்ளுவதென்பது அர்த்தமில்லாத விஷயம்.

ஆகவே நம்மைக் காப்பாற்றிக் சொள்ளுவது எப்படி?

சகல நாடுகளுக்கும் மேலதிகாரம் வகிக்கும் ஒரு ஸ்தாபனத்துக்கு மட்டும் மேற்கூறியவை போன்ற ஆயுதங்களை வைத்துக்கொள்ளும் உரிமை இருந்தால்தான், கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியாத நிலையிலிருக்கும் அபாயத்திலிருந்தும் நாசத்திலிருந்தும், மனித வர்க்கம் பாதுகாப்புத் தேடிக் கொள்ளமுடியும். ஆனால், அப்படிப்பட்ட ஒரு மேல் ஸ்தாபனத்தினிடம், தற்சமயம் உள்ள நிலையில் தேசங்கள் உரிமையை ஒப்படைக்கும் என எதிர்பார்க்க முடியாது. அப்படி ஒப்படைக்க வேண்டுமென்றால், இதுவரையிலும் யுத்தத்துக்குக் காரணமாக இருந்த முரண்பாடுகளைத் தீர்த்துவைக்கும் கடமை உணர்ச்சியையும், சட்டரீதியான உரிமையையும் அந்த ஸ்தாபனம் பெற்றிருக்க வேண்

டால்டாவில் செய்த
குலாப் ஜாமுன்கள்
1 பவுண்டு சர்க்கரையில் நீர்க்க பாகு தயாரித்து அதில் சிலதுளிகள் பன்னீர் ஊற்றி சூடாகவைத்திருக்கவும். 1 அகப்பை மைதாமாவில் 1 தேக்கரண்டி டால்டாவை தேய்க்கவும். ½ பவுண்டு திரட்டுப்பாலை பொடி செய்து அரித்து மைதாமாவுடன் நன்ருய் கலக்கவும். சிறிதளவே ஜலம் சேர்த்து கலவையை நன்ருக பிசைந்து கெட்டியாகச் செய்துகொள்ளவும். பிசைந்தமாவை சிறிய நீண்ட உருளைகளாக பிடிக்கவும். டால்டாவை சூடாக்கி மிதமான சூட்டில் பொரிக்கவும். குலாப் ஜாமுன்கள் சுற்றிவர சிறுசிவப்பானதும் தனியாக எடுத்து, வடித்து, பிறகு சூடான பாகில் ஊறவைக்கவும்.
குடும்பத்திற்கு
ஊட்டமளிக்கின்றன!
மூளைக்கு விசேஷமான உணவுகள் எவை?
இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானுலும்—எழுதுங்கள்!
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1
HYM. 98-50 TM
DALDA
VANASPATI

கேசரியின்
மூன்று பிரசித்த மருந்துகள்

★

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

மலடு, சங்காதோஷம், கீல்வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச் சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச் சிக்கல், மந்தமான மூளை, பல வீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலிய வற்றை குணப்படுத்தும்.

★

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டி களும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

கேசரி குடீரம் லிட்,

ராயப்பேட்டை, மதருஸ் 14.

சிறந்த தமிழ் நூல்கள்

✱

மகாத்மா காந்தி —வெ. சாமிநாத சர்மா	10	0
அமெரிக்கா —S. S. மாரிசாமி	6	8
தமிழர் பண்பாடு —எஸ். வையாபுரிப்பிள்ளை	3	0
இலக்கிய விமர்சனம் —ரகுநாதன்	2	0
ஆன்டன் செஹாவ் —புரசுபாலகிருஷ்ணன்	3	8
காந்திபாமாலை —ராய. சொ.	3	0
ஆண்மை —புதுமைப்பித்தன்	1	0
காதலா...? —சு. ரா.	2	8
வால்காவிலிருந்து கங்கைவரை —ராகுல சாங்கிருத்தியாயன்	5	0

✱

தமிழ்ப் புத்தகாலயம்

மயிலாப்பூர் :: சென்னை 4

டும். தனித் தனி நாடுகளின் வேலை, உள் நாட்டு விவகாரங்களில் பிரதானமாகக் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்; பிறநாடுகளுடன் உறவு வைத்துக்கொள்ளுவதென்றால், அந்த உறவு சர்வ தேசீய பாதுகாப்புக்கு யாதொரு அபாயத்தையும் விளைவிக்காத பிரச்னைகளை மட்டும் கையாளக்கூடிய உறவாக இருக்கவேண்டும்.

புரட்சிகரமான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும் என்பது மனிதவர்க்கத்தை நிர்ப்பந்திக்கும் அவசியமாகிவிட்டது என்ற உண்மையை அரசாங்கங்கள் துரதிர்ஷ்டவசமாக இன்னும்கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை. அதற்குரிய அறிகுறிகள் கூடத் தென்படவில்லை. தற்போதுள்ள நம் நிலையைப்போல, முன்பு எக்காலத்திலும் இருந்தது கிடையாது. அதனால், முன்பு திருப்திகரமாக இருந்த நடவடிக்கைகளையும், நடைமுறைகளையும் இப்போது திரும்பவும் கையாளமுடியாது. நாம் நம் சிந்தனையைப் புரட்சிகரமாக மாற்றி அமைக்கவேண்டும்; நம் செயல்களை எல்லாம் புரட்சிகரமாக மாற்றி அமைக்கவேண்டும்; அத்துடன் உலகநாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளையும் புரட்சிகரமாக மாற்றியமைக்கும் தைரியமும் நமக்கு இருக்கவேண்டும். நேற்று கோஷித்த சுலோகங்கள் இன்று பயன்படாது; நாளையோ அவை எல்லாம் கர்நாடகமாகப் போய் விடும். இதில் சந்தேகமே இல்லை. இந்த உண்மையை உலகெங்கும் உள்ள மனிதர்கள் உணரும்படி செய்வதுதான் அறிவாளிகளின் மிக முக்கியமான சமுதாய வேலை. அவர்கள் இதுவரை செய்துள்ள வேலைகளை எல்லாம்விட இது மிக முக்கியமானதாகும். ஆணிவேர் போட்டிருக்கும் பழைய தேசீய மரபுகளை எல்லாம் அதிதீவிரமான புது முறைப்படி மாற்றி அமைக்க உலக மக்களைத் தூண்டும் அளவுக்கு, தங்கள் தேசீய உறவுகளை எல்லாம் பொருட்படுத்தாமல் ஆண்மையுடன் அறிவாளிகள் முன்வருவார்களா?

பிரமாதமான முயற்சியும் சாதனையும் இன்று இன்றியமையாதவையாகிவிட்டன. இந்த முயற்சி தோற்றுப்போனாலும், பிற்காலத்தில் தேசங்களுக்கெல்லாம் மேலதிகாரம் வகிக்கும் ஸ்தாபனம் ஒன்று ஏற்படத்தான் போகிறது. ஆனால், அப்போது அந்த ஸ்தாபனம் எங்கே கட்டப்படும்? இன்றைய உலகத்தின் பெரும் பகுதிப் பிரதேசமும் பாழாகி, அந்தப் பாழான நாசங்களின் மீதுதான் அந்த ஸ்தாபனம் கட்டப்படும். இன்றைய சர்வதேசீய அராஜகத்தை ஒழிப்பதற்கு, உலக நாசங்கள் வருவதோ, உலக நாசங்களை வருவிப்பதோ அவசியமல்ல என்று நம்புவோமாக! அப்படி வரக்கூடிய நாசத்தின் அளவை நம்மில் யாருமே கற்பனை பண்ணிக்கூடப் பார்த்தறிய முடியாது.

கால அவகாசம் மிகக் கொஞ்சமாகவே இருக்கிறது. அதனால், காலம் கடந்துவிடுவதற்கு முன்பாக, நாம் இப்போதே செயலில் இறங்குவோமாக!

உலகத்திலேயே மிக மிகச் சிறந்த கதைகள் என்று ஒரு பத்துக் கதைகளைப் பொறுக்கினாலும் அவற்றில் இந்தக் கதையும் இடம் பெறுவது நிச்சயம். ஈடு இணையில்லாத முறையில் இக்கதையை எழுதியுள்ளார் ருஷ்ய ஆசிரியர். விண்ணுக்கும் மண்ணுக்குமாக வளர்ந்த கலைச்செல்வர் டால்ஸ்டாய் இக்கதையை வானளாவப் புகழும்போது நாம் என்ன சொல்ல இருக்கிறது! இந்தக் கதையைப் படித்த பிறகு டால்ஸ்டாயின் பின்னுரையைப் படியுங்கள்.

கண்மணி

○

சேகாவ்

வேலையிலிருந்து நீங்கி ஓய்வு பெற்றிருக்கும் 'அஸ்ஸஸர்' ஒருவருடைய மகள்தான் ஒலங்கா. ஒரு நாள் சிந்தனையில் ஆழ்ந்தவண்ணம் அவள் தன் வீட்டுப் புறவாசலில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். வெயில் கடுமையாக அடித்துக் கொண்டிருந்தது. ஈக்கள் விரட்டியடித்தாலும் போகாதபடி வந்து வந்து மொய்த்துக்கொண்டிருந்தன. சீக்கிரமே சாயங்காலமாகிவிடும் என்று நினைக்கும்போது மனதுக்குச் சந்தோஷமாக இருந்தது. கிழக்கே கருக்கட்டிய மழை மேகங்கள் திரண்டு கொண்டிருந்தன. அதனால் அப்போதைக்கப்போது காற்று 'ஜில்' லென்று வீசிக்கொண்டிருந்தது.

'டிவோலி' என்ற நாடகக் கொட்டகைக்கு மானேஜரான கூகின் என்பவன் அதே இடத்தில் வசித்து வந்தான். அன்று அவன் தோட்டத்தின் நடுவே நின்று வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

"மறுபடியும் மழைபிடிக்க ஆரம்பித்துவிட்டதா? என்னைக் கெடுப்பதற்கென்றுதான் தினம்தோறும் இப்படி மழை கொட்டுகிறது போலிருக்கிறது! இதைவிட எனக்கு நானே தூக்குப் போட்டுக்கொள்ளலாம். தினந்தோறும் இந்த மழையினால் எவ்வளவு நஷ்டமாகிறது! இன்று காரியம் விளங்கினாற்போல்தான்" என்று சொல்லிவிட்டுக் கைகளை உதறினான் கூகின். அப்புறம் ஒலங்காவைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே போனான்:

"இதோ, நம்முடைய பிழைப்பு எப்படியிருக்கிறது என்று பார்த்தாயா? ஒருவன் அழவேண்டுமென்றால் இதைவிட வேறு என்ன வேண்டும்? என்னால் முடிந்தமட்டும் பாடுபட்டு உழைக்கிறேன். அலுத்துக் களைத்துப்போய், இராத்திரி யெல்லாம் தூக்கமில்லாமல் கிடந்து, நாடகத்தை நல்லமுறையில் நடத்த என்ன செய்யலாம் என்று யோசித்து யோசித்து மண்டையை உடைத்துக் கொள்ளுகிறேன்! ஆனால், பலன் என்ன? பொதுஜனங்கள் ஒன்றும் தெரியாத காட்டுமிராண்டிகளாக இருக்கிறார்கள். உயர்ந்த சங்கீதம்,

அருமையான நடிப்பு, முதல்தரமான வித்வான்கள் முதலிய பொருத்தங்களோடு நாம் நாடகத்தை நடத்துகிறோம். அவர்களோ நாடகத்தில் விதூஷகன் வருகிறானா என்றுதான் பார்க்கிறார்கள். அவன் வந்து ஆபாசமாகப் பேசினால்தான் அவர்களுக்குப் பிடிக்கும். அது அப்படியிருக்க, மழை என்னடா யென்றால் தினந்தோறும் தவறாமல் பெய்துகொண்டிருக்கிறது. மே மாதம் பத்தாம் தேதி பிடித்த மழை மே மாதமெல்லாம் பெய்து ஜூன் மாதம் முழுவதும் பெய்துகொண்டிருக்கிறது. இதனால் ஜனங்கள் நாடகத்துக்கு வருவதில்லை. ஆனால் நான் வழக்கம்போல அதே வாடகையையும் வித்வான்களுக்கு அதே சம்பளமும் கொடுக்கவேண்டி யிருக்கிறது.''

இதேமாதிரி அடுத்தநாள் சாயங்காலமும் மேகங்கள் கூடும். கூகின் பைத்தியக்காரனைப்போலச் சிரித்துக்கொண்டு,

''சரி, பெய்து தொலை. தோட்டத்தையும் என்னையும் வெள்ளத்தில் மூழ்கடித்துவிடு! நான் அதிர்ஷ்டம் கெட்ட பயலாகச் சீரழிகிறேன். வித்வான்கள் என்மேல் வழக்குப்போட்டு என்னை ஜெயிலுக்கும், ஸைபீரியாவுக்கும், அப்புறம் தூக்குமேடைக்கும் கூட அனுப்பட்டும்'' என்று சொல்லுவான்.

மறுநாளும் அதே கதைதான். ஒலங்க்கா சத்தம் போடாமல் மௌனமாக மிகுந்த வாட்டத்துடன் கூகின் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். இரண்டொரு தடவை அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வெளி வந்தது. அவளுடைய துரதிர்ஷ்டத்தைக் கண்டு அவள் அவன்மீது இரக்கம் கொண்டாள். கடைசியில் அவனைக் காதலிக்கத் தொடங்கினாள்.

கூகின் மிகவும் குட்டையாகவும் ஒல்லியாகவும் இருப்பான். அவன் முகம் மஞ்சள் நிறமாக இருக்கும் சுருண்ட தலை மயிர் நெற்றிக்கு மேலாக வாரிவிடப்பட்டிருக்கும். நெஞ்சின் ஆழத்திலிருந்து அவன் மெல்லிய குரலில் பேசுவான்; பேசும் போது அவனுடைய வாய் ஒரு பக்கமாகவே அசையும். முகத்தில் திக்குத் திசை தெரியாமல் தத்தளிப்பவனின் சோகமே காட்சியளிக்கும். இவையெல்லா மிருந்தாலும், ஒலங்க்காமீது மட்டும் மிகவும் ஆழ்ந்த பரிசுத்தமான காதலை வைத்திருந்தான்.

ஒலங்க்காவுக்கு எப்போதும் யாராவது ஒரு ஆள்மேல் அன்புவைத்துக்கொண்டே இருக்கவேண்டும். அன்பு காட்டாமல் அவளால் வாழவே முடியாது. தன் பால்யத்தில் அவள் தன்னுடைய அப்பாவிடம் மிகுந்த வாஞ்சையோடு இருந்தாள். அவர் இப்போது சுவாசிக்கக்கூட சிரமப்பட்டவராய் ஓர் இருண்ட மூலையில் போய் அடங்கி ஒடுங்கிக் கிடக்கிறார். வருஷம் விட்டு வருஷமாக பிரியான்ஸ்க்கிலிருந்து வரும் தன் அத்தையிடம் அன்பு காட்டிவந்தாள் ஒலங்க்கா. அதற்கு முன்னால், அவள் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, தன் பிரெஞ்சு வாத்தியாரிடம் மிகவும் அன்பாக இருந்தாள். மிகுந்த பெருந்தன்மையும், மிருதுவான உள்ளமும், இரக்க சித்தமும் உடைய பெண் அவள். அவளுடைய இளங் கண்களில் அமைதி குடிகொண்டிருந்தது. மிகவும் தேகாரோக்கியத்துடனிருந்தாள். ஆண்கள் அவளுடைய ரோஜா நிறக் கன்னங்களையும், கரு நிறமான சிறு மச்சம் விழுந்து மிருதுவாக இருக்கும் அவளுடைய வெண்மையான கழுத்தையும், அவள் ஏதாவது சந்தோஷகரமான விஷயத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது அவளுடைய முகத்தில் தோன்றும் இதமான கள்ளங் கபடமற்ற புன்னகையையும்

கண்டால் தங்களுக்குள்ளேயே அவளுடைய அழகை வியந்துவிட்டு புன்னகை புரிவார்கள். ஆனால் பெண்களாக இருந்தாலோ, பேச்சின் நடுவிலேயே அவளுடைய கையைப் பற்றிக்கொண்டு சந்தோஷம் பொறுக்காமல், "அடி கண்மணி!" என்று சொல்லிவிடுவார்கள்.

பிறந்ததிலிருந்து அவள் வசித்து வரும் வீடானது நகரத்தின் கடைகோடியிலிருந்தது; டிவோலிக் கொட்டகைக்கும் அதற்கும் வெகுதூரமில்லை. அந்த வீடு அவளுக்குத்தான் என்று அவளுடைய தகப்பனார், தம் உயிலில் எழுதிவைத்திருந்தார். சாயங்காலங்களிலும் இரவு நேரங்களிலும் அவள் தன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு டிவோலிக் கொட்டகையில் நடக்கும் பாண்டு வாத்தியக் கச்சேரியையும் தீ விளையாட்டுக்களின் போது பொரியும் நெருப்பின் சப்தத்தையும் கேட்டுக் கொண்டிருப்பாள். அதெல்லாம் கூகின் தன் விதியை எதிர்த்துப் போராடுவது போலவும், அவனுடைய பிரதான எதிரிகளான விஷயம் தெரியாத பொது ஜனங்கள் அவனுக்குக் குழி தோண்டுவதை அவன் தகர்த்துக் கொண்டிருப்பது போலவும் அவளுக்குப் படும். இந்தச் சந்தர்ப்பத்தில் அவளுடைய உள்ளத்தில் சுகமான ஒரு பரபரப்பு உண்டாகிவிடும். அதனால் அவளுக்குத் தூங்கவே மனசு வராது. ஆகவே, விடிந்ததும் கூகின் வீட்டுக்குத் திரும்பி வரும் போது அவள் தன் படுக்கையறை ஜன்னலை மிருதுவாகத் தட்டிவிட்டு, அவனுக்குத் தன் முகத்தையும் ஒரு தோளையும் மாத்திரமே திரைக்கு ஊடாகக் காட்டுவாள்; அப்போது அவனைப் பார்த்து மிகவும் அன்பு காட்டிப் புன்னகை செய்வாள்......

ஒலங்க்காவைக்கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற தன் விருப்பத்தைக் கூகின் தெரிவித்தான். இருவரும் கல்யாணம் செய்து கொண்டார்கள். அவன் அவளுடைய கழுத்தையும், மெழுமெழு வென்றிருக்கும் அழகான தோள்களையும் பக்கத்தில் நின்று பார்த்துவிட்டால் அவள் மீது கைகளைப் போட்டுக்கொண்டு, "கண்மணி" என்பான்.

கூகினுக்குப் பரம சந்தோஷம். ஆனால் அவன் கலியாணம் செய்து கொண்ட அன்று இரவும் பகலும் மழை பெய்தபடியால் அவன் முகத்தில் பழைய சோகக் குறி சிறிது தென்பட்டது.

இருவரும் ஒருவருக் கொருவர் மிகவும் பொருத்தமாக வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஒலங்க்கா கூகினுடைய காரியாலயத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு டிவோலித் தியேட்டர் சம்பந்தமான ஜோலிகளைக் கவனிப்பாள். கணக்குகளையெல்லாம் பதிவு செய்து சம்பளங்களைப் பட்டுவாடா செய்வாள். அவளுடைய ரோஜா நிறக் கன்னங்களும், சுமுகமான, கள்ளங் கபடற்ற, ஒளி சிந்தும் புன்னகையும் ஒரு சமயம் காரியாலய ஜன்னல் வழியாகவும், ஒரு சமயம் சிற்றுண்டி விடுதியிலும், ஒரு சமயம் கொட்டகையில் சீன்களுக்குப் பின்புறமாகவும் காட்சியளித்துக் கொண்டிருக்கும். கல்யாணம் ஆனதோ இல்லையோ, அவள் தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம், 'நாடக மேடைதான் வாழ்க்கையிலேயே, முக்கியமான ஸ்தானத்தைப் பெறும் தகுதியுடையது; நாடகத்திலேதான் உண்மையான இன்பானுபவத்தைப் பெறவும், விஷய ஞானம் பெற்று ஈவிரக்கம் நிறைந்தவர்களாக ஆகவும் முடியும்' என்று கூறத் தொடங்கி விட்டாள்.

"ஆனால் இது பொது ஜனங்களுக்குத் தெரிகிறதா? அவர்களுக்கு வேண்டியது ஒரு கோமாளி வேஷக்காரன்தான். நேற்று, "பாஸ்ட் இன்ஸைட் அவுட்" என்ற நாட

கத்தை நடித்துக் காட்டினோம். ஆனால் கொட்டகையில் முக்கால் வாசி இடம் காலியாகவே இருந்தது. கூகினும் நானும் சேர்ந்து ஏதாவது ஆபாசமான கதையை நடித்துக் காட்டத் தயாராயிருந்தால் கொட்டகையில் கூட்டம் நிரம்பிவிடும். நாளைக்கு வானிட்ச்காவும்* நானும் 'நரகத்தில் ஆர்பியஸ்' என்ற நாடகத்தை நடத்தப் போகிறோம். நீங்கள் வாருங்கள்!'' என்று சொல்வாள் ஒலங்க்கா.

கூகின் நாடக மேடையைப் பற்றியும் நடிகர்களைப் பற்றியும் எதைச் சொல்லி வந்தானோ அதையேதான் அவளும் சொல்லி வந்தாள். அவனைப் போலவே பொது ஜனங்களின் அறியாமையையும் கலை விஷயத்தில் அவர்களுடைய அக்கரையில்லாத் தனத்தையும் குறை கூறிக் கொண்டிருந்தாள். நாடக ஒத்திகையின்போது அவளும் பங்கெடுத்துக் கொண்டு நடிகர்களுக்குத் திருத்தங்களைக் கூறுவாள். சங்கீதக்காரர்களின் நடத்தையில் அவள் எப்போதும் ஒரு கண் வைத்திருப்பாள். எப்போதாவது உள்ளூர்ப் பத்திரிகையில் அவர்களைப் பற்றி ஏதாவது மோசமான செய்தி வந்து விட்டால், அவளுக்குக் கண்ணீர் வந்துவிடும். உடனே பத்திரிகை ஆசிரியரிடம் நேராகப் போய் விஷயத்தை ஒரு ஒழுங்கு செய்துவிட்டுத் திரும்புவாள்.

அவளிடத்தில் நடிகர்களுக்கு ரொம்பப் பிரியம். அவளை ''கூகினும் நானும்'' என்றும், ''கண்மணி'' என்றும் கூப்பிடுவார்கள். ஒலங்க்கா அவர்களைக் கண்டு வருத்தப்படுவாள். அவர்களுக்கு அவள் ஏகதேசமாகக் கொஞ்சம் பணம் கடன் கொடுப்பது வழக்கம். அவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டால், அவள் தனியாகப் போய்க் கண்ணீரை வடித்துவிட்டுப் பேசாமல் இருந்துவிடுவாள்; அதைத் தன் கணவனிடத்தில் போய் சொல்லுவதில்லை.

குளிர்காலத்திலும்கூட அவர்கள் சந்தோஷமாகக் காலங்கழித்தார்கள். குளிர்காலம் முழுவதுக்கும் தங்கள் தியேட்டரைநகரத்துக்கு மாற்றியிருந்தார்கள். அதைக்குறைந்த காலத் தவணைக்கு ஏதாவது ஒரு சின்ன நாடகக் கம்பெனி, ஜாலவித்தைக்காரன், உள்ளூர் நாடகசபா இப்படி ஏதாவது ஒன்றுக்கு வாடகைக்கு விட்டுவந்தார்கள். ஒலங்க்கா இப்போது சிறிது பருத்துவிட்டாள். முகத்திலே எப்போதும் திருப்தியே தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ஆனால், கூகினோ நாளுக்கு நாள் மெலிந்து மஞ்சள் பூத்துக்கொண்டு வந்தான். அந்தக் குளிர்காலத்தில் அவ்வளவாக வரும்படி மோசமாக இல்லையென்றாலும் 'நஷ்டம் நஷ்டம்' என்று சொல்லிக் கொண்டேயிருந்தான். இரவிலே அவனுக்கு இருமல் வந்துவிடும். அப்போது அவனுக்குத் தேநீரும் எலுமிச்சம் பூத்தண்ணீரும் கொண்டு போய்க் கொடுத்து ஒருவித வாசனைத் தைலத்தால் அவன் உடம்பைத் தேய்த்துவிட்டுக் கம்பளியால் மூடுவாள், ஒலங்க்கா.

''என் செல்வமடி நீ. என்ன அழகு! என்ன அன்பு!'' என்று அவள் கூந்தலைத் தடவிவிட்டுக் கொண்டே, மனம் கனிந்து சொல்லுவான் கூகின்.

ஈஸ்டர் திருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அவன் புது நடிகர்களைச் சேர்த்துக்கொண்டு வருவதற்காக மாஸ்கோவுக்குப் போயிருந்தான். அவனில்லாமல் அவளுக்குத் தூங்கவே முடியவில்லை. அதனால் ஜன்னலோரமாக வந்து உட்கார்ந்து கொண்டு இரவெல்லாம் நட்சத்திரங்

---

* வானிட்ச்கா என்பதும் கூகின்தான்:

ளைப் பார்த்தவண்ணம் இருந்தாள்; கோழிக்கூண்டில் சேவல் இல்லாத சமயத்தில் இரவு முழுவதும் தூங்காமல் சங்கடப்படுகிற கோழிகளோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டாள்.

மாஸ்கோவுக்குப் போன கூகின் அங்கேயே சிறிது காலம் தங்கும்படி நேரிட்டது. ஆகவே, தான் ஈஸ்டரின் போது திரும்பி வருவதாக அவளுக்குக்கடிதம் எழுதினான். அந்தக்கடிதத்தில் டிவோலித் தியேட்டர் சம்பந்தமாக இரண்டொரு விஷயங்களையும் குறிப்பிட்டு எழுதியிருந்தான். ஆனால் ஈஸ்டருக்கு முந்திய ஞாயிற்றுக் கிழமையன்று துர்ச்சகுனம் போல அவளுடைய வீட்டுக் கதவை யாரோ பீப்பாயைச் சம்மட்டி கொண்டு அடிப்பது போல ஓங்கித் தட்டினார்கள். 'பூம் பூம்' என்று தட்டும் ஓசையைக் கேட்டு, தூங்கி வழியும் சமையல்காரன் எழுந்து தண்ணீர் கொட்டிச் சேருகக் கிடக்கும் கூடத்தின் வழியாக 'டப் டப்' என்று சத்தம் கேட்கும்படியாக நடந்து அப்பால் சென்றுவிட்டான். ஒலங்க்கா கதவைத் திறக்க வாசலுக்கு ஓடினாள்.

"கொஞ்சம் கதவைத் திறவுங்கள்; தந்தி வந்திருக்கிறது" என்று யாரோ வெளியிலிருந்து கனமான தொண்டையில் பேசுவது கேட்டது.

ஒலங்க்கா இதற்கு முன்னால் தன் கணவன் அனுப்பிய தந்திகளை வாங்கியிருக்கிறாள். ஆனால் இந்தத் தடவை ஏனோ, அவள் பயத்தினால் கல்லாகச் சமைந்து விட்டாள். கைகள் 'கிடு கிடு' என்று நடுங்க, அவள் தந்தியை உடைத்துப் படித்தாள்:

"ஐவான் பெட்ரோவிச்* இன்று திடீரென்று மரணமடைந்தார். செவ்வாய்க்கிழமை ச,சவ அடக்கத்துக்கு உனே விபரங்கள் தெரிவிக்கவும்"

தந்தியில் இப்படியே எழுதப்பட்டிருந்தது—"ச,சவ அடக்கம்", அப்புறம் கொஞ்சமும் புரியாத "உனே" என்ற வார்த்தை. தந்தியில் ஒரு நாடகக் கம்பெனி மானேஜர் கையெழுத்திட்டிருந்தார்.

"அன்பே, என் கூகின்! என் அருமைக் கண்ணே! வாழ்விலே உன்னைச் சந்தித்து, உன்னோடு பழகி, உன்னைக் காதலித்தது இதற்குத் தானா? மனமுடைந்த உன் ஏழை ஒலங்க்கா நீயில்லாமல் நெடுகிலும் தன்னந்தனிமையில் கிடந்து வாடுகிறாளே!" என்று சொல்லி, விம்மிப் பொருமினாள்.

கூகினுடைய சவ அடக்கம் செவ்வாய்க்கிழமையன்று மாஸ்கோவில் நடந்தேறியது. ஒலங்க்கா புதன் கிழமை ஊர் திரும்பினாள். வீட்டுக்குள்ளே வந்ததும் படுக்கையின் மேலே போய் விழுந்து உரத்த குரலில் ஏங்கி ஏங்கிப் பொருமினாள். அது பக்கத்து வீட்டுக்கும் தெருவுக்கும் கூட கேட்டது.

பக்கத்து வீட்டுக்காரர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, "ஒலங்க்காக் கண்மணி, பாவம், எப்படி அவதிப்படுகிறாள்!" என்று சொல்லிக் கொண்டார்கள்.

மூன்று மாதங்கள் சென்றன. ஒரு நாள் ஒலங்க்கா கோவிலுக்குப் பிரார்த்தனைக்குப் போய் விட்டு வீடு திரும்பி வந்துகொண்டிருந்தாள். அழுது அழுது துக்கம் தாங்காமல் வந்து கொண்டிருக்கும் போது, அவளுடைய பக்கத்து வீட்டுக்காரனாகிய புஸ்டவாலோவ் சந்தர்ப்ப வசமாக கோவிலிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தான். வரும்போது அவளுக்குப் பக்கமாக பின்புறத்தில் நடந்து வந்தான். மர வியாபாரம் செய்து வரும் பாபாகயேவின் கடை

---

* ஐவான் பெட்ரோவிச் என்பதும் கூகின் தான்.

யில் அவன் மானேஜர். அப்பொழுது அவன், வைக்கோல் திணித்த தொப்பி, வெண்ணிறமான அரைக் கோட்டு, தங்கத்தில் செய்த கடிகாரச் சங்கிலி முதலியவை சகிதமாகக் காட்சி யளித்தது கிராமாந்தரத்துப் பெரிய தனக்காரன்போல இருந்ததே ஒழிய, வியாபாரத் துறையில் உள்ள ஆளைப்போல் தோன்றவில்லை,.

அவன் மிகவும் அனுதாபம் நிறைந்த தாழ்ந்த குரலில் "ஒலங்க்கா, எல்லாம் விதிப்படி நடக்கிறது. நமக்கு ரொம்பவும் வேண்டியவர்கள் யாரும் செத்துப் போகிறார்களென்றால் அது கடவுளின் இஷ்டப்படித்தான் நடக்கிறது என்று நினைத்துக்கொள். ஆகவே நாம் மனதைத் திடமாக்கிக் கொண்டு அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்" என்று சொன்னான்.

அவன் ஒலங்க்காவோடு அவள் வீட்டு வாசல் வரைக்கும் வந்து வழி யனுப்பிவிட்டு, அவளிடம் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டான். அதற்கப்புறம், நாளெல்லாம் கண்ணியமும் அந்தஸ்தும் நிறைந்த அவனுடைய குரல்தான் அவள் காதில் கேட்டுக்கொண்டே யிருந்தது. அவள் கண்ணை மூடும்போதெல்லாம், அவனுடைய கருநிறமான தாடி அவளுக்குத் தோற்றமளிக்கும். அவளுக்கு அவனை மிகவும் பிடித்திருந்தது. அதோடு அவனைப் பற்றி அவளுக்கு ஒரு நல்ல அபிப்பிராயமும் விழுந்து விட்டது.

அதற்கு இரண்டொரு நாட்களுக்குப் பின் ஒரு வயசான அம்மாள் வீட்டுக்கு வந்திருந்தாள். ஒலங்க்காவுக்கு அந்த அம்மாளுடன் இலேசான பழக்கம் தான். இரண்டு பேரும் காப்பி சாப்பிட உட்கார்ந்தனர். உட்கார்ந்ததும் ஒலங்க்கா, புஸ்டவாலோவைப் பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டாள். அவன் ரொம்பவும் நல்ல மனிதன் என்றும், அவனை நம்பி யாரும் ஒரு காரியத்தில் இறங்கலாம் என்றும், அவனைக் கல்யாணம் செய்து கொள்ள எந்தப் பெண்ணும் பிரியப்படுவாள் என்றும் சொன்னாள். இதற்கு மூன்று நாட்களுக்குப் பிறகு புஸ்டவாலோவ், தானாகவே அங்கே வந்தான். வந்து வெகு நேரம் தங்கியிருக்கவோ, அதிகமாகப் பேசவோ இல்லை. பத்து நிமிஷத்தில் புறப்பட்டுப் போய்விட்டான். அவன் போனதும், ஒலங்க்காவும் அவனைக் காதலிக்கத் தொடங்கினாள்—மிகவும் அதிகமாக காதலித்தாள். அதன் பயனாக அவளுக்கு இரவெல்லாம் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டிருந்தது. மறுநாள் காலையில், முன்னால் தன்னோடு காபி சாப்பிட்ட அந்த அம்மாளை வரவழைத்தாள். கல்யாணம் நிச்சயமானது; வெகு சீக்கிரமாகவே கல்யாணம் நடந்தேறியது. இருவரும் ஒருவருக்கொருவர் மிகவும் பொருத்தமாகவே இருந்தார்கள்.

புஸ்டவாலோவ் மத்தியானச் சாப்பாட்டு வேளைவரை ஆபீசிலேயே உட்கார்ந்திருப்பது வழக்கம். அப்புறம் காரியார்த்தமாக வெளியே போய் விடுவான். அப்போது ஒலங்க்கா அவனுடைய இடத்தில் வந்து அமர்ந்து கொள்வாள். சாயங்காலம் வரைக்கும் அங்கேயே இருப்பாள். கணக்கு எழுதுவதும், சரக்குகளை விற்று முதல் செய்வதும்தான் அவளுக்கு வேலை.

அவள் தன்னிடம் சரக்கு வாங்க வரும் வாடிக்கைக் காரர்களிடமும், நண்பர்களிடமும் பின் வருமாறு சொல்லுவாள்:

"மரங்களின் விலை வருஷத்துக்கு வருஷம் கிராக்கியாகிக் கொண்டே வருகிறது. விலை ஒன்று ஒன்றரை காலாகிறது. நாட்டு மரங்களை வியாபாரம் செய்வதெல்லாம் பேருக்குத் தான். இதோ, இப்போது புஸ்டவாலோவ் மரங்கள் வாங்க வேண்டு

மானால் மாகிலேவ் ஜில்லாவுக்குத் தான் போய் வருகிறார். அவற்றை இங்கே கொண்டுவர வண்டி வாடகை தான் எவ்வளவாகிறது!” இதைச் சொன்னதும், பயத்துடன் தன் கன்னங்களைக் கைகளால் மூடிக்கொண்டு. “அப்பா! எவ்வளவு வாடகை!” என்பாள்.

அவளுக்கு, தான் வருஷக் கணக்காக மர வியாபாரம் செய்துவருவதாகவே நினைப்பு. வாழ்க்கையிலேயே மிகவும் முக்கியமான அவசியமான பொருள் மரக்கட்டை தான் என்று அபிப்பிராயம். “தூண்”, “உத்திரம்”, “கம்பு”, “பலகை” முதலிய சொற்களின் சப்தத்திலே ஏதோ ஒரு உணர்ச்சி யிருப்பதாகவே அவளுக்குப் பட்டது.

ஒரு நாள் அவள் ஒரு கனவுகண்டாள். அதில் பலகைகள் மலைமலையாகக் குவிந்து கிடப்பதைப் பார்த்தாள். மிக நீளமான வண்டித் தொடர்கள் மரங்களை ஏற்றிக் கொண்டு எங்கோ தூரத்திலிருக்கும் ஓரிடத்திற்குச் செல்லுவதுபோல் அவளுக்குத் தோன்றியது. நாற்பதடி உயரமும் அரையடிக் குறுக்களவும் உள்ள உத்தரங்கள் நட்டுக்கு நின்று கடையின் முற்றத்தில் வரிசையாக நடந்து செல்லுவது போலவும், மரமுண்டங்கள், உத்தரங்கள், பலகைகள் முதலியன ஒன்றையொன்று ‘கட்டுக் ‘கட்’டென்று மோதியடித்துக் கொள்ளுவது போலவும், அவை கீழே விழுந்து விழுந்து பழையபடியும் எழுந்து நின்றுகொள்ளுவது போலவும், தம்மைத் தாமே ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கிக் கொள்ளுவது போலவும் அவள் கனவில் தோற்றமளித்தன. உடனே அவள் தூக்கத்திலேயே கூப்பாடு போட்டுவிட்டாள். புஸ்டவாலோவ் மிருதுவான குரலில், “ஒலங்க்கா, என்ன விஷயம்? கண்மணி, கடவுளை நினைத்துக்கொள” என்றான்.

அவளுடைய புருஷன் மனம் போலவே அவள் மனமும் இருந்தது. அறைக்குள் வெப்பம் அதிகமாக இருக்கிறது என்றோ, அல்லது வியாபாரம் மந்தமாக இருக்கிறதென்றோ அவன் நினைத்தால் அவள் மனசுக்கும் அவை அப்படியே படும். வேடிக்கை, கூத்து இவற்றிற்கு அவன் போவது கிடையாது. விடுமுறை தினங்களில் கூட வீட்டில் தான் இருப்பான். அவளும் அப்படியே வேடிக்கை விளையாட்டுகளுக்குப் போகாமல் வீட்டில்தான் இருப்பாள்.

அவளுடைய சிநேகிதிகள் அவளைப் பார்த்து “நீ எப்போதும் வீட்டிலேயே இருக்கிறாய்; இல்லை யென்றால் ஆபீசில் இருக்கிறாய். கண்மணி, நீ நாடகம், சர்க்கஸுக்கென்று போனால் என்ன?” என்பார்கள்.

அதற்கு, “புஸ்டவாலோவுக்கும் எனக்கும் நாடகம் பார்க்கப் போக நேரமில்லை.” என்று கண்ணியமாகச் சொல்லிவிட்டு, “இதுகளுக்கெல்லாம் போக எங்களுக்கு நேரம் ஏது? இந்த நாடகங்களுக்குப் போய்ப் பிரயோஜனம் என்ன?” என்று சொல்லுவாள்.

சனிக்கிழமைகளில் புஸ்டவாலோவும் அவளும் மாலைப் பிரார்த்தனைக்காக கோவிலுக்குப் போவது வழக்கம். லீவு நாட்களில் காலையிலேயே போய்விடுவார்கள். கோவிலிலிருந்து வீடு திரும்பும்போது, மிகவும் சாந்தி நிறைந்த முகத்துடன் ஒருவருக்கொருவர் பக்கம்பக்கமாக நடந்து வருவார்கள். அவர்களைச் சுற்றிலும் ‘கம்’ மென்று வாசம் பரிமளித்துக் கொண்டிருக்கும். நடக்கும்போது அவளுடைய பட்டுடைகளில் ‘சர சர’ வெனச் சத்தம் கேட்கும். வீட்டிலே, ரொட்டியையும் பல பழஊறுகாய்களையும் அவர்கள் தின்று விட்டுத் தேநீர் குடிப்பார்கள். அப்புறம் பட்டாணிக் கடலை சாப்பிடுவது வழக்கம். ஒவ்வொருநாளும் பன்னிரண்டு

மணிக்கு அவர்கள் வீட்டில், பீட்கிழங் கைக் கொண்டு தயார் செய்த காரக் குழம்பு, ஆட்டுக்கறி அல்லது அவர் கள் வீட்டிலே வளர்ந்த வாத்துக்கறி, மீன் கறி முதலியவற்றின் வாசம் பரி மளிக்கும். அந்த வீட்டு வாசல் வழி யே சென்றால் யாருக்கும் பசியெடுக் காமல் போகாது. ஆபீசில் சாமொ வார் பானம் எப்போதும் கொதித் துக்கொண்டிருக்கும். கடைக்கு வரும் வாடிக்கைக்காரர்கள் சீடை களை வேண்டியமட்டும் தின்றுவிட்டு, தேநீரை நிறையக் குடிப்பார்கள். வாரத்துக்கொரு நாள் இருவரும் ஸ்நான கட்டத்துக்குப் போவார்கள். திரும்பி பக்கம் பக்கமாக இருவரும் நடந்து வரும்போது அவர்களுடைய முகம் சிவந்துபோயிருக்கும்.

ஒலங்க்கா தனக்குத் தெரிந்தவர் களிடமெல்லாம், " ஆமாம், நமக்கு என்ன குறை? கடவுள் துணை செய் கிறார். புஸ்டவாலோவும் நானும் இருப்பதுபோல ஒவ்வொருவரும் இருக்க வேண்டுமென்பது என் ஆசை " என்று சொல்லுவாள்.

மாகிலேவ் ஜில்லாவுக்கு புஸ்டவா லோவ் மரங்கள் வாங்குவதற்காகப் போயிருந்தபோது அவளுக்கு எதையோ இழந்ததுபோல் பயமாக இருந்தது. இரவெல்லாம் விழித் திருந்து அழுதாள்.

அவர்களுடைய வீட்டின் ஒரு பகுதியை மாட்டுவைத்தியம் செய்யும் ஒரு டாக்டருக்கு வாடகைக்கு விட் டிருந்தார்கள். அந்த டாக்டர் நல்ல வாலிபன்; பட்டாளத்தில் இருப்ப வன். சில சமயங்களில் சாயங்கால நேரத்தில் அவன் ஒலங்க்காவின் வீட் டுக்கு வருவதுண்டு. வந்து அவ ளோடு பேசிக்கொண்டிருப்பது வழக் கம். இதனால், அவளுக்குத் தன் புருஷன் இல்லாத நேரத்திலும் சந் தோஷமாக நேரம் போகும். அவன் தன் குடும்பவாழ்க்கையைப் பற்றிச் சொன்னபோது, ஒலங்க்கா அதை மிகவும் சிரத்தையுடன் கேட்டுக் கொண்டாள். அவன் கல்யாண மானவன்; அவனுக்கு ஒரு சிறு பையனும் இருக்கிறான். ஆனால் தன் மனைவி தன்னிடம் விஸ்வாசகாதக மாக நடந்துகொண்டாள் என்று சொல்லி அவன் அவளைவிட்டுத் தனி யாக வாழ்ந்து வந்தான். அவளிடம் அவனுக்கு ஒரே வெறுப்பு. தன் மக னுக்காக வேண்டி அவன் மாதாமாதம் நாற்பது ரூபிள்கள் அவள் பெயருக்கு அனுப்பி வந்தான். இந்த விபரங்க ளெல்லாவற்றையும் கேட்டுவிட்டு, ஒலங்க்கா ஒரு பெருமூச்சுவிட்டுத் தன் தலையைக் குலுக்கினாள். அவன் விஷயத்தைக் கேட்டறிந்து அவள் வருத்தம் கொண்டாள்.

அவன் பேசிவிட்டுத் திரும்பும்போ தெல்லாம் மெழுகுவர்த்தியைக் கொண்டு படிகளின் வழியாக அவன் இறங்கிப் போவதற்கு வெளிச்சம் காட்டுவாள். அப்போது, " உம். கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். நீ வந்தது எனக்குச் சந்தோஷமாக இருந்தது. உனக்கு ரொம்பவும் நமஸ்காரம். தேவமாதா உனக்கு ஆரோக்கியத்தை அளிப்பாராக!" என்று சொல்லுவாள்.

தன் கணவனைப்போல, அவள் அதே மரியாதையான, கௌரவ மான முறையில்தான் எப்போதும் பேசுவாள். மாட்டு வைத்தியன் வாசலை விட்டிறங்கி அப்புறமாகப் போகும்போது,

" விலாடிமிர் பிளேடானிச்! உன் மனைவியோடு நீ சமாதானமாகப் போவது நல்லது. உன் மகனுக்காக வேண்டி, அவளை மன்னித்து விடு. பயல் நல்ல பயலாகத் தலையெடுப் பான் " என்று சொல்லுவாள் ஒலங்க்கா.

புஸ்டவாலோவ் வெளியூரிலிருந்து திரும்பி வந்ததும், மாட்டு வைத்திய னைப் பற்றியும், அவனுடைய வருந் தத்தக்க குடும்ப வாழ்க்கையைப்

பற்றியும் மெல்லிய குரலில் சொன்ஞள். இருவரும் வருத்தத்துடன் பெருமூச்சு விட்டுக்கொண்டனர். மாட்டு வைத்தியனுடைய பையன் எப்படியும் தன் தகப்பனை இழந்தவன்தான் என்று பேசிக்கொண்டனர். அப்போது ஏதோ ஆச்சரியகரமான முறையில் அவர்களுக்கு என்னவோ தோன்றியது. உடனே ஏசுநாதர் உருவச் சிலைகளுக்கு முன்ஞல்போய், தலை தரையில் படும் வண்ணம் குனிந்து வணங்கி, கடவுள் தமக்கும் குழந்தைகளைக் கொடுக்கவேண்டும் என வேண்டிக் கொண்டார்கள்.

இப்படியே இருவரும் ஒருவருக்கொருவர் அன்பாகவும், ஒற்றுமையாகவும், அமைதியான முறையில் ஆறு வருஷங்கள் வாழ்க்கையை நடத்தினர். ஆனல் கடைசியில் என்ன வாயிற்று என்று பாருங்கள்! அப்போது குளிர்காலம். ஒரு நாள் ஆபீசில் சூடாகத் தேநீர் குடித்துவிட்டு புஸ்டவாலோவ் தலையில் தொப்பியில்லாமல், கொஞ்சம் மரக்கட்டையை வண்டியிலேற்றி அனுப்புவதற்காக வெளியே முற்றத்துக்கு வந்தான். அவ்வளவுதான், ஜலதோஷம் பிடித்து உடம்புக்குச் சுகமில்லாமல் படுத்துவிட்டான். நல்ல நல்ல டாக்டர்களை யெல்லாம் வைத்துப் பார்த்தான். ஆனுலும் நிலைமை மோசமாகி, நாலு மாதகாலம் நோயிலே கிடந்து இறந்துபோஞன். ஒலங்க்கா மறுபடியும் விதவையாஞள்.

அவனுடைய சவ அடக்கம் ஆனதும் அவள், "எனக்கு யாரும் துணையில்லை. என் கண்ணே, இப்போது நீயும் என்னைவிட்டுப் போய்விட்டாய். நீ இல்லாமல், துன்பத்திலும் துயரத்திலும் அகப்பட்டு நான் எப்படி வாழ்வேன்? நல்ல மனிதர்களே, உலகத்திலேயே தன்னந்தனியாக இருக்கும் என்மேல் இரக்கம் காட்டுங்கள்" என்று விம்மி விம்மி அழுதாள்.

துக்கத்துக்கு அடையாளமான கருப்பு உடைகளை அவள் தரித்துக்கொண்டாள்; தொப்பியும் கையுறையும் அணிவதை அன்றிலிருந்து நிறுத்திவிட்டாள். மாதாகோவிலுக்குப் போவது அல்லது அவளுடைய கணவனின் கல்லறைக்குப் போவது இதைத் தவிர்த்து அவள் வெளியே வருவதே இல்லை. கன்னிகாஸ்திரீ மடத்துப் பெண்ணைப்போலவே அவள் வாழ்க்கையை நடத்தி வந்தாள். ஆருவது மாதத்தில் அவள் துக்க உடைகளை அணிவதை நிறுத்திஞள்; தன் வீட்டு ஜன்னல் கதவுகளையும் திறந்துவிட்டாள். அப்புறம் சில சமயங்களில் காலை நேரத்தில் அவள் தன் சமையல்காரனுடன் வீட்டுச் சாமான்கள் வாங்குவதற்காக 'மார்க்கெட்'டுக்குப்போவதைப் பலர் பார்த்தனர். ஆனல் அவளுடைய வீட்டுக்குள்ளே என்ன நடக்கிறது, அவள் எப்படி வாழ்க்கையை நடத்துகிருள் என்பதை ஊகித்துத் தான் தெரிந்துகொள்ள முடிந்தது.

அவள் தன்னுடைய தோட்டத்தில் மாட்டு வைத்தியனேடு உட்கார்ந்து தேநீர் சாப்பிடுவாள். அவன் சத்தம்போட்டு அவளுக்குப் பத்திரிகைகளைப் படித்துக் காட்டுவான். ஒலங்க்கா தபாலாபீஸில், தனக்குத் தெரிந்த ஒரு அம்மாளிடம் "நம் ஊரில் மாட்டு நோய்களை வைத்தியர்கள் சரிவரக் கவனிப்பதில்லை. எல்லாத் தொத்து நோய்களுக்கும் அதுவே காரணம். எப்போது பார்த்தாலும் பால்மூலமாக ஜனங்களுக்கு நோய் பரவும் சமாச்சாரமும், குதிரைகள் பசுக்கள் முதலியவை மூலம் நோய் பரவிக்கொண்டு வரும் சங்கதியும்தான் காதில் விழுந்துகொண்டே இருக்கிறது. மனிதப் பிராணிகளுடைய ஆரோக்கியத்தை எப்படி கவனித்துக் கொள்ளவேண்டுமோ, அப்படியே ஆடுமாடுகளின் ஆரோக்கியத்தையும் கவனித்துக் கொள்ள

வேண்டும்'' என்று சொன்னாள்.

மாட்டு வைத்தியன் சொன்னதையே அவள் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தாள். எல்லா விஷயங்களிலும் அவனைப்போலவே இவளும் அபிப்பிராயம் வைத்திருந்தாள். ஒரு வருஷ காலம்கூட யாராவது ஒருவரிடம் அன்பு வைக்காமல் அவளால் வாழமுடியாது என்பது வியக்தமாய்விட்டது. தன் வீட்டில் ஒரு புதுக் குதூகலம் நிறைந்திருந்ததை அவள் உணர்ந்துகொண்டாள். வேறு யார் விஷயத்திலும் இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருந்தால் அது குறை சொல்லும்படியாக இருந்திருக்கும். ஆனால், ஒலங்க்கா விஷயத்தில் யாரும் தப்பபிப்பிராயம் கொள்ளமுடியாது. அவள் செய்வதெல்லாம் இயல்பான காரியமாகவே இருந்தது. அவளும் அந்த மாட்டு வைத்தியனும் தங்கள் உறவில் ஏற்பட்டுள்ள மாறுதலைப்பற்றி மற்ற ஜனங்களிடம் ஒன்றுமே சொல்லவில்லை. அவர்கள் உண்மையாகவே அதை மறைத்துவிடவே முயன்றனர். ஆனால் அந்தக்காரியம் நடக்கவில்லை. ஒலங்க்காவுக்குத்தான் ஒரு ரகசியத்தை மூடி மறைக்க முடியாதே!

அந்த வைத்தியரின் பட்டாளத்தில் வேலை செய்பவர்கள் அவனிடம் வருவார்கள். ஒலங்க்கா தேநீரை ஊற்றிவைத்துவிட்டு எல்லோருக்கும் உணவு பரிமாறுவாள். அப்போது கோமாரி, மாடுகளுக்கு காலிலும், வாயிலும் வரும் வியாதிகள், நகரசபையால் நடத்தப்படும் கசாப்பு அறுக்கும் கொட்டடி ஆகியவற்றைப் பற்றிப் பேசத் தொடங்கிவிடுவாள். இது மாட்டு வைத்தியனுக்கு ரொம்ப ரொம்பச் சங்கடமாயிருக்கும். விருந்தாளிகள் எல்லாம் போனபிறகு அவன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு, கோபத்துடன்,

''உனக்குப் புரியாத விஷயத்தைப் பற்றிப் பேசாதே என்று நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேனல்லவா? நாங்கள்—மாட்டு வைத்தியர்கள்—எங்களுக்குள்ளேயே பேசிக்கொண்டிருந்தால், நீ நடுவே வந்து பேசக்கூடாது. அது ரொம்பவும் எரிச்சலாக இருக்கிறது'' என்று சொல்லுவான்.

ஆச்சரியத்தோடும் திகைப்போடும் ஒலங்க்கா அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, மிகவும் பீதியுடன், ''அப்புறம் நான் எதைப்பற்றிப் பேசட்டும், வாலோடிச்கா?'' என்பாள்.

கண்களில் நீர் ததும்ப அவனைக் கட்டித்தழுவிக்கொண்டு, ''எதற்கு இந்தக் கோபம்?'' என்று கொஞ்சுவாள்.

இருவரும் சந்தோஷமாக இருந்து வந்தார்கள்.

ஆனால் இந்த சந்தோஷம் வெகு காலம் நீடிக்கவில்லை. மாட்டு வைத்தியனுடைய பட்டாளம் வெகு தொலைவிலுள்ள ஓரிடத்திற்கு மாற்றப்பட்டதால் அவனும் ஒரேயடியாகப் போய்விட்டான்; அவன் போன இடம் சைபீரியாவாகக்கூட இருக்கலாம். ஒலங்க்கா பழையபடியும் தனிமையில் விடப்பட்டாள்.

யாரும் துணையற்ற ஒரே தனிமைதான் இப்போது. அவளுடைய தகப்பனர் எப்போதோ காலமாய்விட்டார். அவருடைய நாற்காலியொன்று தூசிமூடிப்போய், ஒரு காலும் ஒடிந்து மேல் மாடியில் கிடந்தது. அவள் நாளுக்கு நாள் மெலிந்து வெளுத்துக் கொண்டுவந்தாள். தெருவிலே அவளை யாரும் பார்த்தாலும் முன்னைப்போலப் பார்ப்பதில்லை; அவளைப் பார்த்து புன்னகை செய்வதும் கிடையாது. அவளுடைய வாழ்க்கையில் நல்ல பருவம் கழிந்து போய்விட்டது. அவளிடம் ஒரு புதுமாதிரியான வாழ்க்கை பற்றிக்கொண்டது.

அதை நினைத்துப் பார்க்கக் கூடச் சகிக்க முடியாமல் இருந்தது. ஒலங்க்கா சாயங்கால நேரங்களில் வீட்டுவாசலில் உட்கார்ந்துகொண்டிருப்பாள். டிவோலிக் கொட்டகையில் பாண்டு வாசிக்கும் சப்தமும் தீபொரிகிற சப்தமும் காதில் விழும். ஆனல் அவை முன்னைப் போல எந்த உணர்ச்சியையும் கிளறிவிடுவதில்லை. ஒருவித உணர்ச்சியுமில்லாமல் வீட்டு முற்றத்தைப் பார்த்துக்கொண்டிருப்பாள்; இப்போது எந்தவிதமான சிந்தனையும், ஆசையும் கிடையாது. இரவு வந்ததும் படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டு தன் வீட்டு வெற்று முற்றத்தைக் கனவிலே காண்பாள். இஷ்டமில்லாமல் செய்வது போலத் தான் அவள் சாப்பிடுவது.

எல்லாவற்றையும்விட ஒரு மோசமான சங்கதி என்னவென்ருல், அவளுக்கு எதைப்பற்றியும் எந்த விதமான அபிப்பிராயமும் இல்லாமல் போய்விட்டது. தன்னைச் சுற்றியுள்ள பொருள்களைப் பார்த்து அவற்றை இன்னது என்று தெரிந்து கொள்வாளே ஒழிய, அவைபற்றி ஒரு அபிப்பிராயம் கொள்ள முடியவில்லை. எதைப்பற்றிப் பேசுவதென்றும் அவளுக்குத் தெரியவில்லை. ஒருவிதமான அபிப்பிராயமும் கொள்ளாமல் இருப்பது மிகவும் பயங்கரமாக இருந்தது. உதாரணமாக, ஒரு கண்ணுடி சீசா, மழை, அல்லது குடியானவன் வண்டியோட்டிக்கொண்டு போவது—இவற்றைப் பார்ப்பதாக வைத்துக் கொள்ளுவோம். கண்ணுடி சீசா எதற்காக இருக்கிறது, மழை, குடியானவன்—இதெல்லாம் என்ன என்ற விஷயங்களை அவளால்—ஆயிரக் கணக்கான பணத்தை அள்ளிக் கொடுத்தாலும் கூட—சொல்ல முடியாமல் இருந்தது. கூகின், புஸ்டவாலோவ், மாட்டு வைத்தியன் இவர்களோடு வாழ்ந்த காலத்தில் ஒலங்க்கா எந்த விஷயத்தைப் பற்றியும் விளக்கிச்சொல்லிவிடுவாள். எந்த விஷயத்தைப் போய்க் கேட்டாலும் அதைப்பற்றித் தான் கொண்டுள்ள அபிப்பிராயத்தைச் சொல்லுவாள். ஆனல், இப்போது அவள் வீட்டு முற்றம் எப்படி காலியிடமாகக் கிடந்ததோ அது போலவே அவள் மூளையும், உள்ளமும் காலியிடங்களாக இருந்தன. இந்த நிலைமை வேம்பாகக் கசந்துபோயிருந்தது அவளுக்கு.

அந்த நகரம் சிறிது சிறிதாக நாலா திசையிலும் வளர்ந்துகொண்டு வந்தது. சாலை, தெருவாகிவிட்டது. டிவோலிக் கொட்டகையும், மரக் கடையும் இருந்த இடத்தில் புதுப்புது வீடுகளும் வளைவு சாலைகளும் உண்டாகிவிட்டன. காலம்தான் எவ்வளவு வேகமாக ஓடுகிறது! ஒலங்க்காவின் வீடு இருள் மூடிப்போய் விட்டது. கூரை யெல்லாம் துருப் பிடித்து போய், கொட்டடியும் ஒரு பக்கம் சாய்ந்து சரிந்து போய் விட்டது. வீட்டுமுற்றம் முழுவதும் முள்ளம்புதர்கள். ஒலங்க்காவும் பெரிய மனுஷி ஆகிவிட்டாள். வேனிற்காலத்தில் அவள் வீட்டு வாசலில் உட்கார்ந்திருப்பாள். அவள் உள்ளத்திலோ, முன்போலவே, சூன்யம், இருள், கசப்பு. குளிர் காலத்தில் ஜன்னலோரத்தில் உட்கார்ந்து பனிவிழுவதைப் பார்த்துக்கொண்டிருப்பாள். வசந்த காலத்தின் சுகந்தமான வாடை வீசினலும், அல்லது மாதா கோவில் மணி அடிக்கும் சப்தம் காதில் விழுந்தாலும், திடீரென்று பழைய நினைவுகள் எல்லாம் பாய்ந்து வரும். அப்போது அவள் உள்ளத்தில் ஒரு மெல்லிய நோவு உண்டாகும். கண்களில் கண்ணீர் பொங்கி வழியும். ஆனல் இதெல்லாம் ஒரு நிமிஷ நேரத்துக்குள் தான். அப்புறம், சூன்யமும், வாழ்வின் பலவீன உணர்ச்சியும் கவிந்துவிடும். பிரிஸ்கா என்ற ஒரு கருப்புப் பூனை அவள் உடம்பின் மேல் தேய்த்துக்கொண்டு சந்தோ

ஷத்துடன் மெல்லக் கூப்பிடும். ஆனல் ஒலங்க்காவிடம் இந்தப் பூனையின் ஸ்பரிசத்தால் ஒரு மாறுதலும் உண்டாகாது. அவளுக்கு வேண்டியது அதுவா? தன் உயிரையும் உள்ளத்தையும், பகுத்தறிவையும் முழுக்க முழுக்க ஆட்கொண்டு, அபிப்பிராயங்களையும், வாழ்விலே ஒரு குறிக்கோளையும் தந்து, தன் வயதான பருவத்திலும் சுகம் கொடுக்கும் ஒரு காதலை அல்லவா அவள் விரும்பினள்? ஆகவே, பூனைக்குட்டியைத் தன் மடியிலிருந்து துண்டாகத் தூக்கிக் கொண்டு, "தூரப் போ. உன்னைப் பார்த்தால் எனக்குப் பிடிக்கவில்லை" என்று சொல்லி, விட்டுவிடுவாள்.

இப்படியே ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருஷமும் கடந்து சென்றது. சந்தோஷம் எது? அபிப்பிராயங்கள் எது? இப்போது சமையல்காரன் மாவ்ரா சொன்னதையெல்லாம் சரியென்று ஏற்றுக் கொள்ளுவாள் ஒலங்க்கா.

ஜுலை மாதம் அன்று பகலெல்லாம் கடுமையாக வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. சாயங்காலமாகி விட்டது. வீடு திரும்பிவரும் ஆடு மாடுகள் நடந்துசென்றதினல் வீட்டு முற்றமெல்லாம் புழுதியாய்விட்டது. இந்த சமயத்தில் யாரோ திடீரென்று வாசல் கதவைத் தட்டினர்கள். கதவைத் திறக்கப்போன ஒலங்க்கா, வெளியே பார்த்தமாத்திரத்தில் அப்படியே பேச்சு மூச்சற்றுப் போய் நின்றுவிட்டாள். அங்கே வந்தவன் மாட்டு வைத்தியன். சிவிலியன் உடையில் வந்திருந்தான். அவன் தலை நரைத்துப்போயிருந்தது. ஒலங்க்காவுக்கு உடனே எல்லா விஷயங்களும் ஞாபகத்துக்கு வந்தன. அவளால் அழாமல் இருக்க முடியவில்லை. ஒலங்க்கா ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவளுடைய தலை, தானே போய் அவன் மார்பில் சாய்ந்து கொண்டது. கட்டு மீறிப்போன உணர்ச்சியின் வேகத்தினல் இருவரும் வீட்டுக்குள் எப்படி நடந்து வந்தார்கள், எப்படி தேநீர் சாப்பிட உட்கார்ந்தார்கள் என்பதே அவளுக்குத் தெரியவில்லை.

"என் அன்பான விலாடிமார் பிளேடானிச், எப்படி நீ இங்கே வந்தாய்?" என்று சந்தோஷ மிகுதியால் நடுங்கிக்கொண்டே, மெல்லிய குரலில் வாய்க்குள்ளேயே கேட்டாள்.

"நான் இங்கேயே நிரந்தரமாகக் குடிவந்துவிடத் தீர்மானித்திருக்கிறேன், ஒலங்க்கா. என்னுடைய வேலையையும் ராஜிநாமா செய்துவிட்டேன். நானே சுயமுயற்சியில் வாழ்க்கை நடத்திப் பார்க்க வேண்டுமென்று இங்கே வாசம் செய்ய வந்திருக்கிறேன். அதோடு, என் மகனுக்கும் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டிய வயது வந்துவிட்டது. பயல் பெரியவனகிவிட்டான். உனக்குத் தெரியாதே? நான் என் மனைவியோடு சமாதானமாகப் போய்விட்டேன்" என்றான் வைத்தியன்.

"அவள் எங்கே இருக்கிருள்?"

"ஹோட்டலில் தான் மகனேடு இருக்கிருள். தங்குவதற்கு ஒரு இருப்பிடம் தேடிவந்திருக்கிறேன் நான்"

"அட கடவுளே! இருப்பிடமா? என் வீட்டுக்கே நீங்கள் ஏன் வந்துவிடக்கூடாது? இது உங்களுக்குச் சௌகரியமாக யிராதா? எனக்கு வாடகையொன்றும் நீங்கள் கொடுக்க வேண்டாம்" என்று படபடப்புடன் சத்தம்போட்டுச்சென்னள் ஒலங்க்கா. மேலும், உரத்த குரலிலேயே, "இங்கேயே வந்து இருங்கள். எனக்கும் சௌகரியமாக இருக்கும். நீங்கள் வந்தது, அடடா, எனக்கு என்ன ஆனந்தமாக இருக்கிறது!" என்ருள்.

மறுநாள் வீட்டின் தட்டட்டிக்கு உட்புறமாக வர்ணம் பூசி, சுவர்களுக்கும் வெள்ளையடிக்கப் பட்டது. ஒலங்க்கா இடுப்பிலே கையை வைத்

துக் கொண்டு இங்கும் அங்கும் போய் யோசனை சொன்ன வண்ணமாக இருந்தாள். பழைய புன்னகை அவளுடைய முகத்தில் விகசித்தது. ரொம்ப நேரம் தூங்கிவிட்டு எழுந்தவள் போல, 'துரு துரு' என்றிருந்தாள். மாட்டு வைத்தியனின் மனைவியும் வந்து சேர்ந்தாள். அவள் ஒல்லியான சரீரக் கட்டுவாய்ந்த ஒரு பெண். அவளுடைய கூந்தல் வளர்ச்சியின்றி குட்டையாக இருந்தது. முகமோ 'உம்மணாமூஞ்சி' தான். ஸாஷா என்ற ஒரு பத்து வயதுப் பையன் அவளோடு வந்தான். அவன் வயதுக்கேற்ற உருவமில்லாமல் சிறு பயலாக இருந்தான். நீல நிறமான கண்கள்; கொழு கொழு என்று உப்பிய கன்னங்கள்; அந்தக் கன்னங்களில் குழிகள். எப்போதாவது அபூர்வமாக பூனையை விரட்டிக்கொண்டு அவன் முற்றத்தில் ஓடும்போது ஆனந்தத்துடன் 'கல கல' என்று சிரிப்பான், ஒலங்க்காவைப் பார்த்து.

"அத்தே, அது உங்கள் பூனையா? அது குட்டிபோட்டால் எங்களுக்கு ஒரு குட்டி தரவேண்டும். எலி உபத்திரவம் தாங்காமல் அம்மா கஷ்டப்படுகிறாள்" என்று கேட்டான்.

அவனோடு ஒலங்க்கா பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவனுக்குத் தேநீர் கொடுப்பாள். அவளுடைய உள்ளம் சந்தோஷத்தினால் குதுகுதுத்தது. நெஞ்சிலே ஒரு சுகவேதனை. அந்தப் பையன் தன் மகன்தான் என்ற ஒரு பிரமை, சாயங்காலத்தில் அவன் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து பாடங்களைப் படிக்கும்போது அவனை அன்பாதரவோடும் இரக்கம் நிறைந்த உள்ளத்தோடும் பார்த்து,

"என் அருமைச் செல்வம் என்ன லக்ஷணமாகவும், புத்திசாலித்தனமாகவும் இருக்கிறது. என் செல்வக் குழந்தை" என்று வாய்க்குள்ளேயே சொல்லிக்கொள்ளுவாள்.

அவன் சத்தம் போட்டு, "தீவு என்பது ஒரு துண்டுபட்ட நிலப்பிரதேசம். அதைச் சுற்றிலும் தண்ணீர் இருக்கும்" என்று பாடங்களை வாசிப்பான்.

அவளும், "தீவு என்பது ஒரு துண்டுபட்ட நிலப்பிரதேசம்" என்று திரும்பச் சொல்லிக்கொள்ளுவாள். பல வருஷங்களாக மௌனியாக, ஒரு அபிப்பிராயமும் கொள்ளாமல் இருந்த ஒலங்க்கா இப்போது முதல் முதலாக தீர்க்கமான கருத்துடன் தெரிவித்த அபிப்பிராயம் இதுதான்.

இப்போது அவள் தனக்கென்று அபிப்பிராயங்கள் கொள்ளத் தொடங்கிவிட்டாள். ராத்திரியில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவள் ஸாஷாவின் பெற்றோர்களிடத்தில், "ஹைஸ்கூலில் பாடங்கள் எவ்வளவு கடினமாக இருக்கின்றன. ஆனாலும், கம்மர்ஷியல் பள்ளிக்கூடத்தைவிட ஹைஸ்கூல் தேவலை தான். ஏனென்றால் ஹைஸ்கூலில் படித்தால், அப்புறம் எந்த வேலைக்கும் போகலாம். டாக்டராகவோ, என்ஜினியராகவோ எந்த உத்தியோகத்துக்கும் போகலாம்" என்பாள்.

ஸாஷா ஹைஸ்கூலுக்குப் போய் வரத் தொடங்கினான். அவனுடைய தாயார், ஹார்கோவுக்குத் தன் சகோதரி வீட்டுக்குப் போனவள், திரும்பி வரவில்லை. அவனுடைய தகப்பனாகிய அந்த மாட்டு வைத்தியன் தினசரியும் ஆடு மாடுகளின் சிகிச்சைக்காக வெளியே போய் வந்தான். மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல் அவன் வீட்டுக்கு வராமல் வெளியிலேயே அடிக்கடி தங்கிவிடுவதும் உண்டு, ஸாஷா வீட்டுக்கே வேண்டாதவனைப் போலத் தன்னந் தனியாக விடப்பட்டு, பட்டினியும் கிடப்பதாக ஒலங்க்காவுக்குத் தோன்றியது. அதனால் அவள் அவனைத் தன் இருப்பிடத்துக்கு

அழைத்துச் சென்று அங்கேயே அவனுக்கு ஒரு அறையை ஒதுக்கிக் கொடுத்தாள்.

ஆறுமாத காலம் ஸாஷா அந்த அறையில் தான் ஒலங்க்காவோடு வசித்து வந்தான். ஒவ்வொரு நாளும் காலே நேரத்தில் அவள் அவனுடைய படுக்கையறைக்குப் போய்ப் பார்க்கும்போது, அவன் கன்னத்துக் கீழாக கையை வைத்துக்கொண்டு அமைதியாகத் தூங்கிக்கொண்டிருப்பான். அவனை மனமில்லாமல் ஒலங்க்கா எழுப்புவாள்.

வருத்தத்தோடு, "ஸாஷா, எழுந் திருடா, கண்ணே, பள்ளிக்கூடத்துக்கு நேரமாய் விட்டது." என்பாள்.

அவன் எழுந்து உடை உடுத்துக் கொண்டு பிரார்த்தனை செய்வான். அப்புறம் சாப்பிட உட்காருவான். மூன்று கிண்ணம் தேநீர் குடித்து விட்டு, இரண்டு பெரிய சீடைகளையும், வெண்ணெய் தோய்த்த ரொட்டித் துண்டில் பாதியையும் சாப்பிடுவான். இந்த சமயத்திலும்கூட அவன் சரியாக உறக்கம் தெளியாமல் 'உம்' மென்று இருப்பான்,

அப்போது ஒலங்க்கா, நீண்டதொரு பிரயாணம் செய்யப் போகிறவனைப் பார்ப்பதைப் போலப் பார்த்து,

"ஸாஷா, உனக்கு அந்தக் கதை சரியாகக்கூடத் தெரியவில்லை. உன்னை வைத்துக்கொண்டு என்ன கஷ்டமா யிருக்கிறதடா! நன்றாகப் படித்து வாத்தியார்கள் சொல்லுகிறபடி கேட்கவேண்டும், கண்ணே' என்பாள்.

"ஆமாம், நான் போகிறேன்" என்று ஸாஷா சொல்லுவான்.

அப்புறம் பள்ளிக்கூடத்துக்குப் புறப்படுவான். சின்னஞ் சிறு உருவத்துடன், தலையில் ஒரு பெரிய தொப்பியைப் போட்டுக்கொண்டு, தோளில் ஒரு பையைத் தொங்கவிட்ட வண்ணம் தெரு வழியாகப் போவான் ஸாஷா. சத்தம் போடாமல் ஒலங்க்கா அவனைப் பின் தொடர்ந்து செல்லுவாள்.

பின்னால் நின்று கொண்டு "ஸாஷா!" எனக் கூப்பிட்டு அவன் கையில் பேரீச்சப் பழம் அல்லது சீனி மிட்டாயைப் பளிச்சென்று கொடுப்பாள். பள்ளிக்கூடம் இருக்கும் தெருவுக்குப் போனதும், ஸாஷாவுக்கு தன்னைப் பின்தொடர்ந்து ஒரு வளர்ந்த கனத்த பெண் வருவது வெட்கமாக இருக்கும். அதனால் அவன் திரும்பி அவளைப் பார்த்து, "நீ வீட்டுக்குப் போ, அத்தே. நான் இனி தனியாகவே போய்விடுவேன்" என்று சொல்லுவான்.

அவன் பள்ளிக்கூட வாசலுக்குப் போய் உள்ளே தலை மறையும்மட்டும், ஒலங்க்கா நின்று பார்ப்பாள்.

ஐயோ! அவனிடத்தில் அவளுக்கு என்ன அன்பு! இதற்குமுன் அவள் பிறரிடம் காட்டிய அன்பு இவ்வளவு ஆழ்ந்த அன்பு அல்ல. இப்போதைப் போல் என்றும் அவளுடைய ஆத்மா தானே முன் வந்து, யாதொரு சுய நலமும் இல்லாமல், இவ்வளவு சந்தோஷமாக எந்த உணர்ச்சிக்கும் தலை பணிந்ததில்லை. இப்பொழுது, அவளுடைய உள்ளத்தில் தாய்மை உணர்ச்சிகள் முளைவிட்டன. அந்தச் சின்னப் பயலுக்காக—குழிந்த கன்னங்களுடன் தலையில் பெரிய குல்லாயைப் போட்டுக்கொண்டு பள்ளிக் கூடம் போகும் அந்த சின்னப்பயலுக்காக—தன் சந்தோஷத் துடனும், ஆனந்தக் கண்ணீருடனும் தன் ஜீவனையெல்லாம் அர்ப்பணம் செய்யத் தயாராக இருந்தாள். ஏன்? ஏன் என்று யாருக்குத் தெரியும்?

ஸாஷா பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்த பிறகு அவள் திருப்தியுடனும், பெருமையுடனும், மனசில் அன்பு பொங்கி வழிய வீடு திரும்புவாள். கடந்த ஆறு மாதங்களில்

அவள் முகம் இளமைபெற்று புன்னகையும் பொலிவுமாக இருந்தது. ஜனங்களுக்கு அவளைப் பார்ப்பதில் ஒரு சந்தோஷம்.

''நமஸ்காரம், ஒலங்க்காரக் கண்மணி, சௌக்கியந்தானே?'' என்று கேட்பார்கள்.

மார்க்கெட்டுக்குப் போன ஒலங்க்கா அங்கே நின்றுகொண்டு, ''இப்போது ஹைஸ்கூலில் பாடங்களெல்லாம் ரொம்பவும் கடினமாயிருக்கிறது. நேற்று முதல் வகுப்பில் ஸாஷாவிடம் ஒரு கதையை மனப்பாடம் பண்ணிக்கொண்டு வரும்படி சொல்லியிருக்கிறார்கள். அதோடு ஒரு லத்தீன் மொழி பெயர்ப்பும், ஒரு கணக்கும் வேறு செய்துகொண்டு போக வேண்டும். சிறு பயல் இவ்வளவையும் படிக்க முடியுமா, சொல்லுங்கள்?'' என்று சொல்லுவாள்! அப்புறம், ஸாஷாவைப்போல வாத்தியார்கள், பாடங்கள், பள்ளிக்கூடப் புஸ்தகங்கள் முதலியவைகளைப்பற்றிப் பேசத் தொடங்கிவிடுவாள்.

மூன்று மணிக்கு இருவரும் ஒன்றாக இருந்து சாப்பிடுவார்கள். சாயங்காலமானதும் அவர்கள் சத்தம் போட்டுப் பாடங்களைப் படிப்பார்கள். அவன் படுக்கையில் போய் படுத்துக்கொண்ட பிறகு, அவன் பக்கத்தில் வெகுநேரம் நின்று பிரார்த்தனையை முணு முணுத்துக்கொண்டிருப்பாள். அப்புறம் உறங்கப் போய்விடுவாள். மிகவும் தொலைவிலே, தெளிவற்றிருக்கும் எதிர்காலத்தில், ஸாஷா படிப்பை முடித்துவிட்டு டாக்டராகவோ என்ஜினீயராகவோ ஆகி சொந்தமாக ஒரு பெரிய வீட்டைக் கட்டிக்கொண்டு குதிரைகளோடும், வண்டியோடும், கல்யாணம் செய்து குழந்தை குட்டிகளோடும் வாழ்வதைப்போல ஒலங்க்கா கனவு காண்பாள்......இந்த ஒரே விஷயத்தை நினைத்துக்கொண்டே தூங்குவாள். அவளுடைய மூடிய விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்து கன்னங்களின் மேல் ஓடும். அவளுக்கு அருகில்கரும் பூனை 'முர் முர்' என்று மெதுவாகச் சத்தமிட்டுக்கொண்டு படுத்திருக்கும்.

அப்பொழுது திடீரென்று வாசல் கதவை யாரோ பலமாகத் தட்டும் சப்தம் கேட்கும்.

ஒலங்க்கா பயந்தடித்துக்கொண்டு மூச்சுப் பேச்சற்று எழுந்திருப்பாள். அவளுடைய மனம் 'திக்திக்' கென்று அடித்துக்கொள்ளும். அரை நிமிஷ நேரத்தில், மறுபடியும் தட்டும் சப்தம் கேட்கும்.

உச்சி முதல் உள்ளங்கால்வரை ஒரே நடுக்கத்துடன் ஒலங்க்கா, 'ஹார் கோவிலிருந்து தந்திதான் வந்திருக்கிறது. ஸாஷாவின் தாயார் ஹார் கோவிலிருந்து அவனை வரச்சொல்லி தந்தியடித்திருக்கிறாள்......அட, இரக்கமற்ற தெய்வமே!' என்று மனதிற்குள் பிரலாபிப்பாள்.

அவளுக்கு ஒரு மார்க்கமும் தோன்றாது. அவளுடைய தலை, கைகள், பாதங்கள் எல்லாம் ஜில்லிட்டுவிடும். உலகத்திலேயே, தான் ஒருத்திதான் துர்ப்பாக்கியவதி என்று அவளுக்குத் தோன்றும். ஆனால், ஒரு நிமிஷ நேரம் கழிந்ததும் யாரோ பேசும் குரல் கேட்கும். வருகிற ஆள் மாட்டு வைத்தியனாக இருப்பான்.

''பிழைத்தேன், கடவுளே!'' என்று ஒலங்கா மனதுக்குள் சொல்லிக்கொள்ளுவாள்.

'பிறகு, கொஞ்சம்' கொஞ்சமாக அவளுடைய மனப்பாரம் கரைந்துவிடும். அவளுக்கு சிறிது ஆசுவாசமாக இருக்கும். பழையபடியும் எழுந்து, பக்கத்து அறையில் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கும் ஸாஷாவின் படுக்கையருகே அவனைப்பற்றிய எண்ணத்துடனேயே செல்லுவாள். அவன் சில சமயங்களில் தூக்கத்தில் கீழ்க்கண்டவாறு புலம்புவதுண்டு:

''அதை உனக்கு நான் கொடுக்கிறேன்! வெளியே போ! கதவைமூடு.''



மகான்களுக்கெல்லாம் மகானாக விளங்கிய நம் மகாத்மா, குழந்தைகளைக் காட்டிலும் அதிக குழந்தை உள்ளம் படைத்த பெரியார். 1947, டிசம்பரில் பர்மியப் பிரதமர் தக்கின் நூ, காந்திஜிக்கு "காமாக்" (பர்மியக் குடியானவன்) குல்லாய் ஒன்றைக் கொடுத்தார். அதை எடுத்து அணிந்துகொண்டு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கிறார் காந்திஜி.

லடாக்கின் தலைநகராகிய லேயின் தபாலாபீஸைப் பார்வையிட்டு வரும்
பண்டித ஜவாஹர்லால் நேரு



ஒரு லடாக்கியப் பெண்

லே நகரப் பள்ளிக்கூடம் ஒன்றில் லடாக்கியப் பையன் ஒருவன் பாடும் நாட்டுப் பாடலை பண்டித நேரு ரசிக்கிறார்.

லே நகரத்தில் உள்ள சங்கர் கொம்பா என்ற ஒரு பௌத்த மடாலயத்தைப் பார்வையிடுகிறார் நம் பிரதமர் நேருஜி

படம்: பி. இ. பீ., டில்லி

போர்க் களத்துக்கு

படம்: எஸ். பாலசுந்தரம், ஈரோடு

நெல் களத்துக்கு

ராஷ்டிரபதி பட்டாபி சீதாராமையா

இந்த இதழில் உள்ள செகாவின் கதையாகிய 'கண்மணி' யைப் படித்துவிட்டு இந்தப் பின்னுரையைப் படியுங்கள். பின்னுரைக்குப் பின்னுரையாகவும் கட்டுரைக்குக் கட்டுரை யாகவும் உள்ளது இந்த அற்புதமான எழுத்தோவியம்.

"கண்மணி"க்குப் பின்னுரை

○

லியோ டால்ஸ்டாய்

பாலக்கைப் பற்றி பைபிள் சொல்லும் கதை மிகவும் அர்த்தபுஷ்டி உள்ளது. (மந்திரவாதியும் தீர்க்க தரிசியுமான) பாலாம் என்பவனுக்கு பாலக் என்ற மோவாப் நாட்டு அரசன் பின்வரும் செய்தியை அனுப்பினன். என் எல்லைக்கு வந்துள்ள இஸ்ரேல் நாட்டு மக்களை நீ சபித்து நாசம் செய்ய வேண்டும்; அதற்குப் பல வெகுமதிகளும் கொடுக்கிறேன் என்று செய்தி அனுப்பினன். வெகுமதிகளுக்கு ஆசைப் பட்டு பாலாம் பாலக்கின் இருப்பிடத்தை நோக்கிப் புறப்பட்டான். அவன் வரும் வழியில் தேவதூதன் ஒருவன் அவனை வழி மறித்துநிறுத்தினன். ஆனல் தேவதூதன் வந்ததை பாலாமின் கழுதைதான் பார்த்துக் கொண்டதே ஒழிய பாலாம் பார்க்கவே இல்லை. தேவதூதன் தடுத்ததையும் பொருட்படுத்தாமல் பாலக்கிடம் வந்தான் பாலாம். இருவரும் ஒரு மலை மீதேறினர்கள். அங்கே சாபம் பலிப்பதற்காகச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து வைத்திருந்தார்கள். அதாவது கன்றுகளையும் ஆட்டுக் குட்டிகளையும் ஒரு பலி பீடத்தில் பலி யிட்டியிருந்தார்கள். பாலாம் சபிக்கப் போகிறுன் என்று பாலக் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தான். ஆனல் பாலாமோ, இஸ்ரேல் மக்களைச் சபித்து நாசம் செய்ய வில்லை; அவர்களை ஆசீர்வதித்து விட்டான்.

பாலக்: நீ என்ன காரியம் செய்து விட்டாய்? என் விரோதிகளைச் சபிப்பதற்காக உன்னை அழைத்து வந்தேன். ஆனல் அவர்கள் எல்லோரையும் நீ ஆசீர்வதித்து விட்டாயே!

பாலாம்: கடவுள் என்னை என்ன கூறும்படி உத்திர விட்டாரோ, அதை நான் புறக் கணிக்கலாமா?

பாலக்: அப்படியானல்வேருெரு இடத்துக்கு என்னுடன் வா. அங்கிருந்து அவர்களுக்குச் சாபமிடு.

பாலக், அவனை மற்ருெரு இடத்துக்கு அழைத்துச் சென்ருன். அங்கும் பலி பீடங்கள் சித்தப் படுத்தி வைக்கப் பட்டிருந்தன.

மறுபடியும் பாலாம் சபிப்பதற்குப் பதிலாக அவர்களை ஆசிர்வதித்தான்.

மூன்றாவது தடவையும் (மற்றொரு இடத்தில்) அவன் அவ்வண்ணமே ஆசிர்வதித்தான்.

பாலக்குக்கு அளவுகடந்த கோபம் வந்துவிட்டது. இரண்டு கைகளையும் கொட்டினான். பாலாமை நோக்கிப் பின் வருமாறு சொன்னான்: "என் விரோதிகளைச் சபிப்பதற்கு உன்னை வரவழைத்தேன். நீயோ, அவர்களை மூன்று முறை ஆசிர்வதித்து விட்டாய். அதனால் உன்னுடைய இருப்பிடத்திற்கு நீ ஓடிப்போ. உனக்குப் பெரிய பெரிய மரியாதைகள் எல்லாம் செய்யவேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் கடவுள் உன்னை அந்த மரியாதைகளுக்குத் தகுதி யற்றவனாக ஆக்கிவிட்டார்."

கடைசியில் பாலாம் வெகுமதிகள் பெறாமல் திரும்பினான். ஏனென்றால் பாலக்கின் விரோதிகளைச் சபிக்காமல் அவன் ஆசிர்வதித்துவிட்டான்.

பாலாமுக்கு ஏற்பட்டது போன்ற அனுபவம் உண்மையான கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் அடிக்கடி ஏற்படுகிறது. பிராபல்யத்தை விரும்பியோ, பொய்யான அபிப்பிராயங்களைக் கேட்டு அவற்றை நிஜமென்று நம்பியோ கவிஞர்கள் தங்களை வழிமறிக்கும் தேவ தூதனை—கழுதைகூடக் கண்ணால் கண்டுகொள்ளும் தேவதூதனை—பார்ப்பதில்லை; அவர்கள் சபிக்க வேண்டுமென்ற விருப்பத்துடனேயே கிளம்புகிறார்கள்; ஆனாலும் கடைசியில் ஆசிர்வதித்துவிடுகிறார்கள்.

"கண்மணி" என்று மனோஞ்சிதமான கதையை எழுதும்போது உண்மைக்கவிஞரும் கலைஞருமான செகாவுக்கு நேர்ந்த அனுபவமும் இதுதான்.

அந்தக் "கண்மணி"யை செகாவ் தம் அறிவின் திறத்தினால் மதிப்பிட்டார்; தம் இதயத்தால் மதிப்பிடவில்லை. அதனால் அந்தப் பரிதாபகரமான ஜீவனைப் பார்த்துச் சிரியாய்ச் சிரிக்க வேண்டுமென்று விரும்பினார் செகாவ்.

கூகின் தன் நாடகக் கொட்டகை சம்பந்தமாகப்பட்ட கஷ்டங்களை எல்லாம் பங்கிட்டு அனுபவித்தாள் "கண்மணி". பிறகு, மரவியாபாரத்தில் தானே ஈடுபட்டாள்; மாட்டு வைத்தியனின் பழக்கத்தின் காரணமாக, மாடுகளுக்கு வரும் காசநோயை ஒழிக்கப் பாடுபடுவதே உலகில் முக்கியமான காரியம் என்று நினைத்தாள்; கடைசியில் பெரிய தொப்பியைத் தரித்துக்கொள்ளும் சிறு பள்ளிக்கூடப் பையன் விஷயத்தில் பரிபூரணமாக ஈடுபட்டாள். கூகினுடைய பெயரும் சரி, அவனுக்கு வந்த நோயும் சரி, அவனுடைய மரணத்தை அறிவிக்க வந்த தந்தியும் சரி—எல்லாம் சர்வசாமான்யமானவை. வாயை மூடிக்கொண்டு 'கம்'மென்று இருக்கும் மரவியாபாரியும் சாதாரணமான மனிதன். மாட்டு வைத்தியனும், சிறுவனும் சாமான்யமானவர்களே. ஆனால், தான் காதலிக்கும் ஒருவனுக்குத் தன்னையே பரிபூரணமாக அர்ப்பணித்துவிடும் அந்தக் கண்மணியின் ஆத்மா சாதாரணமானதல்ல; ஆச்சரியகரமானது; புனிதமானது.

"கண்மணி" என்ற கதையை ஆசிரியர் எழுதும்போது அவருடைய இதயத்தில் இல்லாவிட்டாலும், அவருடைய மூளையில் புதுமைப் பெண்ணைப்பற்றிய ஒரு தெளிவற்ற தோற்றம் தோன்றியிருக்கும்; ஆணின் உரிமைகளுக்குச் சமானமான அவளுடைய உரிமைகள் தோன்றியிருக்கும். சமூக நலனுக்காக மனிதனைவிட விசேஷமாக இல்லாவிட்டாலும் மனிதனைப் போலவாவது சுதந்திரமாகப் பாடுபடும் வளர்ச்சிபெற்ற, கல்வி ஞானமுள்ள, பெண்ணின் தோற்றம் தோன்றியிருக்கும். ஆகவே, கதையை எழுதத் தொடங்கும்போது பெண் எப்படி இருக்கக் கூடாது என்பதைக் காட்டவே அவர் விரும்பியிருக்கிறார். அப்படித்தான் நான் கருதுகிறேன். பொதுஜன அபிப்பிராயம் என்ற பாலக், பலவீனமான, கீழ்ப்படிதலான, வளர்ச்சிபெறாத, ஆணுக்கு பக்தி செலுத்துகிற, பெண்ணைச் சபிக்கும்படி ஆசிரியரைக் கேட்டுக் கொண்டான். செகாவும் மலைமீது ஏறினார்; பலிபீடத்தில் கன்றுகளும் ஆட்டுக்குட்டிகளும் வெட்டிக் கிடத்தப்பட்டிருந்தன. ஆனால் அவர் பேசத்தொடங்கும்போது சபிக்க நினைத்ததை ஆசீர்வதித்துவிட்டார். அந்த அழகான கதை முழுவதிலும் உல்லாசமான ஹாஸ்யம் நிரம்பியிருந்தபோதிலும், கண்ணீர் உதிர்க்காமல் சில வரிகளை என்னால் வாசிக்க இயலாது. கூகின் அவனுடைய கவனத்தைக் கவர்ந்த காரியங்கள், வியாபாரி, மாட்டு வைத்தியன் இப்படி எல்லோரிடமும், எல்லாவற்றிலும் அவள் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதைப் பற்றி வர்ணித்திருப்பது என் இதயத்தைத் தொட்டுவிட்டது. அவள் தன்னந்தனியள் ஆகி, தன் அன்பைச் செலுத்த யாருமில்லாமல் போனதையும், கடைசியில் தன் பரிபூரணமான பெண்மை உணர்ச்சியுடனும் தாய்மை உணர்ச்சியுடனும் (ஆனால் அவளுக்கு, தன் சொந்தக் குழந்தைகளிடத்தில் தாய்மை உணர்ச்சியைக் காட்டும் பாக்கியம் கிட்டவில்லை.) தன் கரைக்காணுக் காதலோடு பள்ளிக்கூடப் பையன் என்ற அந்த எதிர்கால மனிதனிடம் காட்டிய அன்பையும் ஆசிரியர் சித்திரித்திருப்பது என் நெஞ்சை அள்ளிவிட்டது.

சர்வ சாமான்யமான பேர்வழிகளான கூகினையும், மரவியாபாரியையும், மாட்டு வைத்தியனையும் அவள் காதலிக்கும்படி செய்கிறார் ஆசிரியர். ஆனால் காதலின் லட்சியம் ஒரு கூகினாக இருந்தாலும், ஒரு ஸ்பினோஸாவாக இருந்தாலும், ஒரு பாஸ்கலாக இருந்தாலும், அல்லது ஒரு ஸ்கில்லராகவே இருந்தாலும்* காதலின் லட்சியம் அடிக்கடி "கண்

---

*ஸ்பினோஸா: (1632-1667) ஹாலந்தில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்த மிகப்பெரிய தத்துவஞானி.

பாஸ்கல்: (1623-1662) பிரான்சு நாட்டில் பிறந்த கணித மேதை தத்துவ ஞானி,

ஸ்கில்லர்: (1759-1805) ஜெர்மனியக் கவிஞர்; நாடகாசிரியர்; மகா கவி கத்தேயின் நண்பர்.

மணி" விஷயத்தில் மாறிக்கொண்டிருப்பதைப்போல மாறிக்கொண்டிருந்தாலும், அல்லது வாழ்நாள் முழுவதுமே மாருமல் இருந்தாலும், காதலின் புனிதத்துவம் குறைந்து விடாது.

சமீபத்தில் "நோவோ வ்ரேமியா" பத்திரிகையில் எம். ஆட்டா பெண்களைப் பற்றி எழுதியிருந்ததைப் படிக்க நேர்ந்தது. அவருடைய எழுத்தில் மிகமிக உயர்ந்த கருத்தைத் தெரிவித்திருந்தார். அவர் கூறியிருப்பதாவது:

"ஆண்களாகிய நாம் எந்தக் காரியங்களை யெல்லாம் சாதிக்க முடியுமோ அவற்றை யெல்லாம் தாங்களும் சாதிக்க முடியும் என்பதை நிரூபிக்கப் பெண்கள் முயற்சி செய்கிருர்கள். யாதொரு எதிர் விவகாரமும் பண்ணுமல் இந்த விஷயத்தை நான் ஒப்புக்கொள்ளுவதுடன் பெண்கள், ஆண்கள் செய்யக் கூடிய காரியங்களைச் செய்ய முடியும். ஆண்களை விட நன்ருகவே செய்ய முடியும் என்றும் கூட ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனல் ஒரு சங்கடம் என்ன தெரியுமா? பெண்கள் செய்யக்கூடிய காரியங்களை 'அஞ்சுக்கிரண்டு பழுதில்லாமல் கூட' ஆண்களால் செய்வதற்கு இயலாது."

ஆம்; எம். ஆட்டா தெரிவித்துள்ள மேற்கூறிய கருத்து முற்றிலும் உண்மையே. கர்ப்பம் தரிப்பது, பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பது, குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியறிவு புகட்டுவது முதலியவற்றைப் பொறுத்தமட்டிலும் அது மிகவும் உண்மை. மேலும் ஆண்களால் செய்ய இயலாத காரியம் ஒன்றைப் பெண்கள் செய்கிருர்கள். அந்தக் காரியம் மிகமிக உயர்ந்த, சிறந்த காரியமாகும்; அது மனிதனைக் கடவுளின் அருகாமையில் கொண்டு சேர்க்கிறது. அது என்ன? காதலிக்கும் காரியம் தான். பெண், தன் ஆசைக் கணவனிடம் பரிபூரணமாகத் தன்னை அர்ப்பணித்து, பக்தி விசுவாசம் காட்டுவதைப்போல ஆண்களால் செய்ய இயலுமா? நல்ல பெண்கள் இவ்விதமே காதலித்திருக்கிருர்கள்; இப்போதும் காதலிக்கிருர்கள்; இனியும் காதலிப்பார்கள். பெண்களிடம் இப்படிப்பட்ட தனிப் பண்புமட்டும் இல்லாதிருந்து, அதை அவர்களே செயலில் காட்டாமலும் இருந்தால், உலகத்தின் கதி என்ன? ஆண்களாகிய நம்முடைய கதி என்ன? பெண் டாக்டர்களும், தந்திகுமாஸ்தாப் பெண்களும், பெண் வக்கீல்களும், பெண் விஞ்ஞானிகளும், பெண் எழுத்தாளிகளும் இல்லாமல் நாம் காலத்தைத் தள்ளிவிட முடியும். ஆனல் தாய்மார்களின்றி, உதவியாளர்களாகவும், நண்பர்களாகவும், ஆதரிப்பவர்களாகவும், மனிதனிடத்தில் உள்ள நற்பண்புகளை எல்லாம் காதலிப்பவர்களாகவும்உள்ள ஸ்திரீரத்தினங்களின்றி, உலகத்தில் வாழ்வது கஷ்டம். மரியாளோ, மாத்தலேனுவோ இன்றி ஏசுகிறிஸ்து இருந்திருந்தால், கிளேர் இல்லாமல் பிரான்ஸிஸ் இருந்திருந்தால், நாடு கடத்தப்பட்டு வாழ்ந்த டிஸம்பர் இயக்கத்தினருக்கும், டக்கோ போர் கூட்டத்தினருக்கும் மனைவிமாரே இல்லாமல் போயிருந்திருக்கும். (இவர்களுடைய மனைவிகள் தங்கள் கணவன்மாரைத் தடுத்து

நிறுத்தாததுடன் சத்தியத்துக்காக அவர்கள் பிராணத்தியாகம் செய்யும்போது ஆதாரவாகவும் நின்றூர்கள்) மேலும், குடிகாரர்களுக்கும், பல ஹீனர்களுக்கும், காமாந்தகாரர்களுக்கும் ஆயிரம் ஆயிரமான பெண்கள் ஆதரித்து ஆறுதல் அளித்திருக்கத்தான் முடியுமா? அப்படிப்பட்டவர்களுக்குத்தான் காதலின் ஆறுதல் மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாகத் தேவைப்படுகிறது. இந்தக் காதலில்தான் பெண்களின் மகோன்னதமான ஆற்றல் குடி கொண்டிருக்கிறது. மற்றொன்றைக் கொண்டு இந்தக் காதலின் ஸ்தானத்தை நிரப்பிவிட முடியாது—இப்படிப்பட்ட காதலை கூகின்மீது சொரிந்தாலும் சரிதான்; ஏசுவின் மீது சொரிந்தாலும் சரிதான்.

பெண்கள் பிரச்னை என்று சொல்லப்படுவது பெரும்பாலான பெண்களின் சிந்தையிலும் ஆண்களின் சிந்தையிலும்கூட நிரம்பிப் போயிருக்கிறது! அர்த்தமற்ற எந்தக் கருத்தும் இப்படி மனசில் பிரதான ஸ்தானம் வகிப்பது இயல்புதான். பெண்கள் பிரச்னை என்று சொல்லப் படுவதுதான் எவ்வளவு விசித்திரமான தப்பபிப் பிராயத்தில் முளைத்திருக்கிறது.

'பெண் தன்னை அபிவிருத்தி செய்து கொள்ள விரும்புகிறாள்' இதைவிட நியாயமானது வேறு என்னதான் இருக்கமுடியும்?

தத்தம் இயல்புக் கேற்ப ஆணின் தொழிலும் பெண்ணின் தொழிலும் வேறு வேருகவே இருக்கின்றன. அதனால் பூரணத்துவம் பெறுவதற்குரிய லட்சியமானது இருபாலாருக்கும் ஒன்று போலவே இருக்க முடியாது. பெண்ணின் லட்சியம் எதில் அடங்கியிருக்கிறது என்பதை நாம் அறியோம் என்பதை ஒப்புக் கொண்டாலும் அது ஆணின் லட்சியமாக இராது என்பது மட்டும் நிச்சயம். ஆனால் ஆண் மகனுடைய லட்சியத்தையே தம் லட்சியமாகக் கருதி பெண்கள் மகா அபத்தமாகவும் மோசமாகவும் தங்கள் இயக்கத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த இயக்கத்தின் காரணமாக பல பெண்களுக்கே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

"கண்மணி" என்னும் கதை எழுதும் போது செகாவும் இந்தத் தப்பபிப் பிராயத்துடன் இருந்திருக்கிறார் என்பது என் அபிப்பிராயம்.

பாலாமைப் போல அவர் சபிக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் கவிதைத் தெய்வம் அவரைத் தடுத்துவிட்டது; அத்துடன் ஆசீர்வாதம் செய்யும்படியாகவும் ஆக்ஞாபித்தது. அவரும் ஆசீர்வதித்தார். தம்மை யறியாமலே, அந்த இனிய ஜீவனை ஒளியினால் போர்த்தி விட்டார். தான் சந்தோஷமாக இருக்கவும் தன் தலைவிதி எவனுடன் பிணைக்கப்பட்டிருக்கிறதோ அவனுடைய சந்தோஷத்துக்குக் காரணமாக இருக்கவும் வேண்டுமென்றால் ஒரு பெண் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு சரியான உதாரணமாக நின்று இலங்கும்படி கண்மணியைச் சிருஷ்டித்து விட்டார்.

இது மிகவும் உயர்ந்த கதை. ஏனென்றால் இந்தக் கதையின்

பண்பும் பயனும் தன்னை அறியாமல் உருவானவை.

மாஸ்கோவில் ராணுவத்தினருடன் சம்பந்தப்பட்ட ஒரு பாடசாலையில் நான் சைக்கிள் ஓட்டப் பழகினேன். அந்தப் பள்ளிக் கூடத்தின் மறுகோடியில் ஒரு பெண்ணும் சைக்கிள் ஓட்டப் பழகிக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணின்மீது மோதிவிடக் கூடாதே என்று அவளையே பார்த்துக்கொண்டு சென்றேன். ஆனால், நெருங்க நெருங்க நான் தன்னை அறியாமல் அவளை நோக்கியே சென்றுகொண்டிருந்தேன். அவளும் அபாயம் ஏற்படாமல் தடுக்க விலகிச் செல்ல விரைந்தாள். ஆனால், கடைசியில் என் சைக்கிள் அவள் சைக்கிளை மோதிவிட்டது. நான் என்ன சொல்லவந்தேன் என்றால் நான் செய்ய நினைத்ததற்கு விரோதமான காரியத்தையே செய்துவிட்டேன். காரணம் என் கவனம் முழுவதையும் அவள் மீது செலுத்தியிருந்ததுதான்.

செகாவுக்கு நேர்ந்த அனுபவமும் இதுபோன்றதே. ஆனால் என் அனுபவத்துக்கு எதிர்மறை உவமையாக அமைந்துவிட்டது அவர் அனுபவம். அதாவது "கண்மணி"யை மோதுவதற்கு விரும்பினார் செகாவ். ஆனால் கவிஞனுக்குரிய பரிபூரணமான கவனத்தை அவள்மீது செலுத்திய தன் காரணமாக, அவளை மகோன்னத நிலைக்கு உயர்த்திவிட்டார்.

*

குஸ்தி பயில்வான்கள்

ட்ரம்லான்ரிக் பிரபு குஸ்தியில் மிகுந்த பிரியம் உள்ளவர். அவருடைய மாளிகையின் பக்கமாக வசித்துவந்த ஒரு குடியானவன் குஸ்தியில் மகாதீரன் என்று கேள்விப்பட்டிருந்தார். ஒருநாள் பிரபு, தம் குதிரைமீது ஏறிக்கொண்டு, குடியானவனுடைய வயலின் வேலியைக் கடந்து உள்ளே சென்றார். அங்கு வேலை செய்துகொண்டிருந்த குடியானவனைப் பார்த்து, "நண்பரே! உங்களைப்பற்றி நான் ரொம்ப ரொம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். நம் இருவரில் யார் பலசாலி என்பதைக் கண்டறிவதற்காக இன்று நான் வந்திருக்கிறேன்" என்றார்.

குடியானவன் பதில் ஒன்றும் பேசாமல் நேராக வந்து, குதிரை மேல் இருந்த பிரபுவின் இடுப்பைப் பிடித்துத் தூக்கி வேலிக்கு வெளியே எறிந்துவிட்டான். பிறகு போய்த் தன் வேலையைக் கவனித்தான். கீழே விழுந்த பிரபு தட்டுத் தடுமாறி எழுந்தார். "வேறு ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டான் குடியானவன்.

பிரபு சொன்னார்: "ஒரு விசேஷமும் இல்லை. தயவு செய்து, என் குதிரையையும் வெளியே எறிந்து விடுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

—ஜேம்ஸ் பிரேடி.

மிகச் சிறிய பெயர்

சினிமாக்கதையின் பெயர்களில் உலகத்திலேயே மிகச் சிறியது 'எம்' ("M") என்பதுதான்.

முதலாளிக்குத் தன் வேலைக்காரன் செத்த கவலை பெரிதா? தன் குழந்தைக்குக் கார்வாங்கிக் கொடுக்கும் கவலை பெரிதா? முதலாளி மனப்பான்மைக்கு சரியான எடுத்துக்காட்டு இந்தக் கதை.

'டைபிஸ்டு' வரவில்லை!

கி. ரா.

பிரசித்தி பெற்ற ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரிகளான ராஜாங்கம் லிமிடேட்டின் வெளி வாசலில் பா-ஆ-ம்! ப-ம்! ப-ம்! என்று பியூக் வண்டியின் மூன்று குரல்கள் ஒலித்தன. அதுதான் ராஜாங்கம் லிமிடேட்டின் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீமான் ராஜாங்கம் காரியாலயத்தை நெருங்கிவிட்டார் என்பதற்குக் கட்டியம் கூறும் சப்தம்.

உடனே "வாச்மன்" வரத ராஜலு இரு இரும்புக் கதவுகளையும் திறந்து வைத்து ஒரு 'மிலிட்டரி சல்யூட்' அடித்து விறைப்பாக நின்றான்; அவன் முதல் மகா யுத்தத்தில் ஜமேதாரா யிருந்தவன்.

சப்தம் கேட்டவுடனேயே காரியாலயத்துக்குள்ளும் பரபரப்பு ஏற்பட்டது. அக்கௌண்டன்ட் நீலமேகம் தமது கோட்டை சரிப்படுத்திக் கொண்டார். மேஜை மேல் உள்ள "பைல்"களை ஒழுங்கு படுத்தி வைத்துக் கொண்டார். பக்கத்தில் உள்ள குமாஸ்தாக்கள் தெய்வத்துக்கு வழி விடுவது போல் சன்னிதானம் விட்டு இரு மருங்கிலும் பயபக்தி வினயத்துடன் நின்றனர். தேருக்கு முன்வரும் "முள்ளுப் பொறுக்கி சுவாமி"யைப் போல் டவாலிப் பியூன் வேதாசலம் கையில் ஒரு பெட்டியுடன் விழுந்தடித்துக் கொண்டு முன்னே ஓடிவர, மானேஜிங் டைரக்டர் ஸ்ரீமான் ராஜாங்கம் வாயில் ஏந்திய சுங்கான் தூபம்போட "டக் டக்" கென்று அளந்து அடிவைத்து உள்ளே வந்தார்.

அவர் அறைக்குள் நுழைவதும், டவாலி மேஜைமேல் பெட்டியை வைத்து விட்டு, மின்சார விசிறியை முடுக்கி விட்டு, அரைக்கதவைத் திறந்து அவருக்கு வழி விடுவதும் ஏக காலத்தில் யந்திர விசையால் நடப்பதைப் போல் நடந்தேறின. சுழல் நாற்காலியில் அமர்ந்ததும் ஸ்ரீமான் ராஜாங்கம் வாயிலிருந்த சுங்கானை எடுத்து மேஜைமீது வைத்தார். அவர் வைத்தது தான் தாமதம். சொல்லிவைத்தாற் போல் அதைத் தூக்கிக் கொண்டு வெளியில் ஓடினான் டவாலி—அதன் சாம்பலைக் காலி செய்து மீண்டும் புகையிலைத் தூளால் நிரப்புவதற்கு.

ஸ்ரீமான் ராஜாங்கத்தின் திருஷ்டி மேஜைமேல் வைத்திருந்த கடிதப் பெட்டியின் மீது விழுந்தது. அவர் பார்வை விழுவதற்குள் டவாலி வந்துவிட்டான்! அந்தப் பெட்டியைப் பிரித்து அந்தக் கடிதங்களை எடுத்து வரிசையாக வைக்க வேண்டாமா? அதற்குள்ளாக சுங்கானை நிரப்பி விட்டு அவ்வளவு கணக்காக அவன் எப்படித்தான் வந்தானோ! அவன் யந்திரமா பூதமா?

ஆம்; எல்லாம் ஸ்ரீ ராஜாங்கத்தின் தயார். அவருடைய கொள்கையே அதுதான். எல்லா வேலையும் யந்திரத்தைப் போல் நடக்க வேண்டும். ஒவ்வொரு வேலையும் அந்தந்த நிமிஷம் தவருமல் நடக்க வேண்டும். அமெரிக்கர்களைப் பார்க்க வேண்டும் என்று அவர் அடிக்கடி சொல்வார். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தேசங்களிலெல்லாம் அவர் சுற்றிப் பார்த்தவர் அல்லவா! அவருடைய தொழில் முறையையே அமெரிக்க மாதிரியில்தான் அமைத்திருக்கிறார். இல்லாவிட்டால் இருபது வருஷத்துக்குள்ளாக இந்தியாவின் முக்கியமான நகரங்களிலெல்லாம் கிளைக் காரியாலயங்கள் ஸ்தாபித்து தினசரி லக்ஷக்கணக்கில் வியாபாரம் செய்து சமாளிக்க முடியுமா? எல்லாம் அமெரிக்கத் திட்டம்.

முக்கியமான கடிதங்களையெல்லாம் பார்த்துக் குறிப்பு எழுதியாகி விட்டது. தலைநிமிர்ந்தார் ஸ்ரீமான் ராஜாங்கம். டவாலிக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தான்.

"டைப்பிஸ்ட் சாமிராவ்!"

அவர் குரல் கர்ஜித்தது. டவாலி ஓடினன்.

தினசரித் திட்டத்தில் அடுத்த 'ஐட்டம்' டைப்பிஸ்ட் சாமிராவ் அங்கு வந்து நிற்க வேண்டியது. அன்று அவன் வரவில்லை. அவருக்குக் கோபம் வாராமல் என்ன செய்யும்! பதினைந்து வருஷங்களாக நடந்த திட்டத்தில் அன்று தடையேற்பட்டுவிட்டது. பசை போட்டதைப் போல் வழுவழுப்பாக ஓடிய யந்திரத்தில் அன்று ஒரு கரகரப்பு ஏற்பட்டுவிட்டது. அவருடைய விழிகள் அனலைக் கக்கின.

"அவரு வரலிங்க" என்று டவாலி பெருங் குற்றம் செய்துவிட்டவனைப்போல் கையைப் பிசைந்தான். அவனுடைய குரல் கிணற்றிலிருந்து கேட்பதுபோல் கேட்டது.

"என்ன! இன்னுமா வரலே! நான்சென்ஸ்! அக்கௌண்டன்ட்!"

அப்போதே அக்கௌண்டன்ட் எதிரில் நின்றார். பையன் நழுவி விட்டான்.

"எப்பொழுதும் ஒன்பது மணிக்கே வந்துவிடுவான். இன்று இன்னும் காணவில்லை."

"லீவு லெட்டர் வந்திருக்கிறதா?"

"இல்லை..."

"போய் உடனே விசாரியும்! ஏன் வரவில்லையென்று எனக்குத் தெரியவேண்டும்."

"சரி"

ஸ்ரீமான் ராஜாங்கம் யோசிக்கலானார். அன்று முக்கியமான கடிதங்கள், ஒப்பந்தங்கள் டைப்

ஆக வேண்டும். அன்று பார்த்து வாராமலிருந்துவிட்டானே! லீவு லெட்டராவது வேண்டாம்? இந்தப் பயல்களை நம்பி எந்த வேலையைக் கொடுக்க முடியும்! கொஞ்சம்கூடப் பொறுப்புத் தெரியாத மடையன்கள்!

வாச்மன் எப்போதும் அங்கேயே இருப்பவன். அவனுக்கு அடுத்தபடியாக முதல் முதலில் காரியாலயத்துக்குள் நுழைகிறவன் சாமிராவ்தான். சரியாக ஒன்பது அடித்ததும் வந்துவிடுவான். வீட்டுக்குக் கடைசியில் போகிறவனும் அவன்தான். சரியாக ஏழு அடித்துவிடும். சில சமயத்தில், 'சீஸன்' சமயத்தில் எட்டும் ஆகிவிடும். அவ்வளவு வேலை யிருக்கும். ஒரு நிமிஷம் கூட சும்மா உட்கார முடியாது. இவ்வளவுக்கும் சௌகார்பேட்டையிலிருந்து எழும்பூருக்கு வர வேண்டும்; நடந்து தான். பின் எழுபத்தைந்து ரூபாய் (படியைச் சேர்ந்து எண்பத்தாறு) சம்பளத்தில் பஸ்ஸில் வர முடியுமா?

இதேபோல் ஒரு நாள் தவறாமல் பதினைந்து வருஷங்கள் வந்திருக்கிறான். ஒரு தலைவலிகூட வந்ததில்லை. அப்படிப்பட்டவன் இன்று மட்டும் ஏன் வரவில்லை? கோபம் வராதா?

ஸ்ரீமான் ராஜாங்கத்தின் சுங்கானிலிருந்து புகை வேகமாக வந்தது. எழுந்து நின்றார்.

"அக்கௌண்டன்ட்" என்று கூவினார்.

அக்கௌண்டன்ட் ஓடி வந்தார்.

"சாமிராவ் எங்கே?"

"சைக்கிள் பியூனைப் போய்ப் பார்க்கச் சொல்லியிருக்கிறேன். விலாசம் யாருக்கும் தெரியவில்லை. பையன் விசாரித்துக் கொண்டு வர கொஞ்சம் நேரம் ஆகும்..."

"சிப்பந்திகளின் விலாசம் ஆபீஸில் இல்லை?"

"இருக்கு... அதாவது, எல்லோருடைய விலாசமும் இருக்கு... இவன்—சாமிராவ் வேறு வீட்டுக்குப் போய் விட்டான்..." என்று ஒரு பொய்யைச் சொன்னார். அக்கௌண்ட் கிளார்க், ஹெட்கிளார்க், இம்போர்ட் கிளார்க், எக்ஸ்போர்ட் கிளார்க், எல்லோருடைய விலாசத்தையும் பதிந்து வைத்திருக்கிறார்! சாமிராவ் டைப்பிஸ்டுதானே! அன்றியும், அவன் தான் நாள் தவறாமல் வருகிறானே!

"இன்று முக்கியமான இரண்டு மணிலாக் கொட்டை ஒப்பந்தங்கள் டைப் ஆகவேண்டும். அதன் விசேஷ ஷரத்துகள் அவனுக்குத் தான் தெரியும்..."

"நானே செய்து விடுவேன். ஆனால் அதில் தவறுகள் ஏற்பட்டு விடுமோ என்று பயமா யிருக்கிறது."

"ஆம் ஒரு சிறு தவறுகூட ஏற்படக்கூடாது. என் காரை அனுப்பி அவனை அழைத்துவரச் சொல்லும். உடம்பு அசௌகரியமாயிருந்தால் பிறகு நம் டாக்டர் சத்யத்திடம் அழைத்துப் போகலாம். சீக்கிரம் அனுப்பும்!"

"சரி!"

அக்கௌண்டன்ட் போய் ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் திரும்பி விட்டார். சாமிராவை இனி யாரும்

கூப்பிட முடியாது. யாரும் போய்த் தேட முடியாத இடத்துக்குப் போய்விட்டான்.

கார் வெளி வாசலைக் கடக்கும் போது தான் செய்தி வந்தது. வாச்மன் வரதராஜுலுவுக்குச் சாப்பாடு கொண்டு வந்த அவன் மகன் தான் அந்தச் செய்தியையும் கொண்டு வந்தான். வரதராஜுலுவும் அதே தெருவில்தான் வசிக்கிறானும். இரவு நாலு தடவை பேதியாயிற்றாம். அவ்வளவுதான். ராஜாங்கம் லிமிடெட், மணிலாக்கொட்டை ஒப்பந்தம், பதினைந்து வருடகாலமாக அவனுடைய மனைவியை விட அவனிடம் நெருங்கிப் பழகிய அண்டர்வுட் டைப் யந்திரம், ஆகிய எல்லாவற்றையும் மறந்து சாமிராவ் போய்விட்டான்!

அந்தச் செய்தியைக் கேட்ட ஸ்ரீமான் ராஜாங்கத்துக்கு அதை நம்பவே முடியவில்லை. சாமிராவ் இறந்து விட்டானு? எப்படி இறந்தான்? பதினைந்து வருஷங்கள்! அவன் வராதநாளே கிடையாதே. ஞாயிற்றுக்கிழமைகள் கூட அவன் வருவான்! எப்படி யிருந்தாலும் அந்த வேலைகளை அவன் செய்து தானே ஆகவேண்டும். ஞாயிற்றுக்கிழமையானுல் என்ன, திங்கள் கிழமையானுலென்ன?

வெளிநாட்டுக் கடிதப் போக்குவரத்து, உள்நாட்டுக் கடிதப் போக்குவரத்து, விற்பனை ஒப்பந்தங்கள், கமிஷன் விகிதங்கள், பட்டியல் எல்லாம் அவன்தான் டைப் செய்தாக வேண்டும். யார் யாருக்கு எப்படி எப்படி யெல்லாம் எழுத வேண்டும் என்பது அவனுக்குத் தான் தெரியும்! அதுமட்டுமா? காரியாலயத்துக்குப் புதிதாக வரும் குமாஸ்தாக்கள், சிப்பந்திகள் எல்லோருக்கும் முதலில் வேலை பழகிக் கொடுப்பதும் அவன்தான். நல்ல 'சர்விஸ்' அல்லவா?

"சாமிராவ்!" என்று அவர் கூப்பிடுமுன் "ஸார்!" என்று எதிரில் வந்து நிற்பான். மேஜைமேல் ஒரு ஆள் உயரத்துக்குக் கடிதங்கள் குவிந்து கிடக்கும். "இவ்வளவையும் இன்று தபாலுக்கு அனுப்பியாக வேண்டும்." அவ்வளவுதான் அவர் சொல்வார். குனிந்த தலை நிமிராமல் பதில் பேசாமல் அவ்வளவையும் தூக்கிப் போவான்.

அன்று தபாலுக்கு எல்லாம் போய் விடும்.

பதினைந்து வருஷமாக அப்படித்தான்.

கூனல் உருவம். முகத்தில் படர்ந்த ஒரு புன்னகை. மேலே ஒருபச்சைக்கோட்டு—சற்று சாயம் போனது; அதே கோட்டைத்தான் பதினைந்து வருஷமாகப் போட்டுக் கொண்டிருந்தான். எப்போது வாங்கினுனே?

பாவம்! நல்ல பையன். அவனுக்குக் குடும்பம் இருக்கும்... எத்தனை குழந்தைகளோ யார் கண்டது? அவ்ன் விலாசமேதான் தெரியவில்லையே... விசாரிக்கச் சொல்ல வேண்டும். அந்தக் குடும்பத்துக்கு எதாவது உதவி செய்ய வேண்டும்.

அவன் இருக்கும் போது அவனைப்பற்றி அவர் ஒரு நாள்கூட நினைத்தது கிடையாது. ஒரு சமயம் எல்லா சிப்பந்திகளுக்கும் சம்பள உயர்வு கொடுத்தார். அப்போதுகூட அவனை நினைக்கவில்லை.

ஜாபிதாவில் அவன் பெயர் விட்டுப் போய் விட்டது. அடுத்த மாதம் சம்பளம் போடும் போதுதான் அந்த ஐந்து ரூபாயைச் சேர்த்துப் போட்டார்.

அதை வாங்கிக் கொண்டவுடன் சாமிராவ் வந்தான். மாலை ஐந்து மணியிருக்கும். அவர் வீட்டுக்குக் கிளம்பி விட்டார். நிழல் போல வந்த சாமிராவ் கதவடியில் நின்ருன். ஏற்கனவே கூனியிருந்த உடல் இன்னும் குறுகியிருந்தது. ஏற்கனவே சுருக்கம் நிறைந்த அவன் முகம் இன்னும் அகன்று பெரும் சுருக்கங்கள் நிறைந்திருந்தது. வாயில் ஒரு இளிப்பு.

"என்ன சாமிராவ்?"

அவருக்குச் சந்தேகம், எங்கே சம்பள உயர்வு போதாதென்று முறையிட வந்திருக்கிருனே என்று.

வார்த்தைகள் குழறிக் கொண்டே சாமிராவ் "என்னவோ, இந்தக் காலத்திலே நீங்கதான் தெய்வம். என் குடும்பத்தைக் காக்கிற விளக்கு" என்று உளறிக் கொண்டே சாஷ்டாங்கமாய்க் கீழே விழுந்து விட்டான்!

அப்போதுதான் நன்றி தெரிவிக்க வந்திருக்கிருன் என்று அவர் அறிந்து கொண்டார். எப்படியும் அந்தக் குடும்பத்துக்கு உதவி செய்ய வேண்டும். அக்கௌண்டன்டிடம் சொல்லி நூறு ரூபாய்க்கு ஒரு 'செக்' அனுப்பச் சொல்ல வேண்டும்......

திடீரென்று ஸ்ரீமான் ராஜாங்கத்தின் தர்ம சிந்தனை கலைந்தது. டெலிபோன்!

"ஹல்லோ!"

அவருடைய மனைவி.

"என்ன! நம்ம பாப்பாவா! என்ன வேணுமாம்!... ஓஹோ!"

அவருடைய செல்வ மைந்தன் பாப்பா. பத்து வயதுதானிருக்கும். அவனுக்கு உடனே ஒரு மோட்டார்ரேட் (மூன்று சக்கர மோட்டார் வண்டி) வேண்டுமாம். இல்லாவிட்டால் பள்ளிக்கூடம் போக முடியாது என்று அடம் செய்கிருனும். ஸ்ரீமதி ராஜாங்கம் அவர்களுடைய வாக்ஸால் வண்டியைக் கொடுத்தும் கேட்கவில்லையாம். பாவம், அவள் என்ன செய்வாள்!

அவர் போய்த்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் பையன் கேட்க மாட்டான்.

"பாய்!"

டவாலி ஓடிவந்தான்.

"சார்!"

ஸ்ரீமான் ராஜாங்கம் வீட்டுக்குக் கிளம்பி விட்டார்.

அப்போது நுழைந்தார் அக்கௌண்டன்ட்.

"என்ன? சீக்கிரம் சொல்லும்."

"இந்த சாமிராவின் மூத்த பையன் வந்திருக்கிருன். கிரியை செய்ய பணம் வேண்டுமாம்."

"அதெல்லாம் அப்புறம் ஆகட்டும்! நான் வீட்டுக்குப் போக வேண்டும்" என்று ஒரு அடி எடுத்து வைத்தவர் சட்டென்று நின்ருர்.

'என்ன அது? சாமிராவா? ஒரு பத்து ரூபாய் கொடுத்து 'சஸ்பென்ஸ்' கணக்கில் எழுதும்!"

அவ்வளவுதான். அடுத்த நிமிஷம் பியூக் வண்டியின் "பா—ஆம்!" என்ற அலறல் தொலைவில் கேட்டது.

அயர்லாந்தின் தலைநகராகிய டப்ளினில் 1856-ல் பிறந்தார் ஜார்ஜ் பெர்னார்ட் ஷா. இவர் இலக்கியம், நாட்டியம், சங்கீதம் முதலியவற்றில் பெருங்கலைஞர். இன்றைய உலக மேதாவிகளில் ஒருவராகிய ஷாவைப்பற்றிய சில குறிப்புகளைத் தொகுத்துக் கொடுத்துள்ளார் கட்டுரையாளர்.

93 வயது ஷா

ஜி. செல்லையா

சென்ற மாதம் (ஜுலை) 26-ம் தேதி ஆங்கில நாடகாசிரியரும் இந்த சகாப்தத்தின் தலைசிறந்த மேதைகளில் ஒருவருமான ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவின் 93-வது பிறந்த நாள். தாம் 100 வயது வரையும் உயிரோடு இருக்க முடியும் என்றும், 100-வது வயதைத் தாண்டிவிட்டால் 300 வயது வரையும் தம்மால் வாழ்க்கை நடத்திவிட முடியும் என்றும் கூறியிருக்கிறார் ஷா. 91-வது வயதில் தாம் செத்துப்போய்விடலாம் என்று ஷா நினைத்திருந்தாராம். ஆனால் 91-ம் வயதையும் தாண்டி, இரண்டு வருஷங்களைத் தள்ளிவிட்டார். ஸ்டீபன் வின்ஸ்டன் என்பவர் ஷாவின் அண்டைவீட்டுக்காரர். அவரிடம், 40, 60, 80—இவைதான் தம் வாழ்க்கையில் சிக்கல் நிறைந்த வயதுகள் என்று ஷா கூறினர்.

ஷா தம் பிறந்ததினத்தைக் கொண்டாட விருப்புவதில்லை. அவருடைய நண்பர்கள் கொண்டாடினாலும் அதில் போய்க் கலந்து கொள்ளுவதில்லை. பிறந்ததினத்தன்று தம்மைப் பார்க்கவந்த ஒருவரிடம் ஷா கூறியதாவது:

"முதுமையை அடைந்து கொண்டுவருவதைப் பற்றி பயப்படாதீர்கள்......50-லிருந்து 60-வது வயது வரையிலும் நோயணுகாமல் பார்த்துக்கொண்டால் 80-வது வயது வரையும் உயிரோடிருக்க முடியும். பிறகு உண்மையிலேயே வாழ்க்கையைச் சுகமாக அனுபவிக்க முடியும்."

ஆனால், மரணம் தம் வாசல் கதவைத் தட்டிக்கொண்டிருப்பதாகவும், மரணம் தம் வீட்டுக்கு வேண்டாத விருந்தாளி அல்லவென்றும் தான் சொல்லுகிறார்.

ஷா ஒரு பெரிய பணக்காரர். அதுமட்டுமல்ல. தாம் பெரிய பணக்காரர் என்று கொஞ்சம்கூட சலிப்பின்றி சொல்லிக்கொள்ளுவதில் மிகவும் சந்தோஷப்படுகிறார். ஷாவுக்குச் சொந்தமாக மிகப் பெரிய மாளிகை ஒன்றிருக்கிறது. இரண்டு கார்கள் வைத்திருக்கிறார். அவற்றில் ஒன்று 'ரோல்ஸ்ராய்ஸ்' கார். எழுத்தின் மூலம் நிறையச் சம்பாதித்தவர் ஷா. உலகத்தில் எந்த மூலையில் தம் நாடகம் நடந்தாலும் தமக்குரிய பங்கை வாங்கத் தயங்கமாட்டார். பணவிஷயத்

தில் ஒரு தம்பிடியைக் கூட அவர் விட்டுக்கொடுத்ததில்லை. ஆனால் 1926-ம் வருஷம் அவருக்கு நோபல் பரிசுத் தொகையைக் கொடுத்தபோது அதை வேண்டாம் என்று அவர் மறுத்து விட்டது அதிசயம்தான்.

சமீபத்தில் அவர் தம்முடைய சொந்தப் புத்தக நிலையத்தை விற்றுவிடத் தீர்மானித்தார். அவ்வளவுதான்: ஒருவரை ஒருவர் போட்டிபோட்டுக்கொண்டு அதிக விலை கொடுத்து வாங்குவதற்குப் பலரும் ஓடிவரத் தொடங்கி விட்டார்கள். தாம் படித்த புத்தகங்களின் ஓரங்களில் அவர் சில குறிப்புகளை எழுதிவைத்திருக்கிறார். அந்தக் குறிப்புகளுக்காக புத்தகங்களுக்கும் நினைத்துப் பார்க்க முடியாதபடி அதிக விலை மதிப்பு உண்டாகிவிட்டது. இத்தாலிய மகாகவி தாந்தேயின் நூலில் ஷா ஓரிடத்தில் பின்வருமாறு எழுதிவைத்திருக்கிறார்:

"காதல் சம்பந்தமாக அல்லாமல் வேறுவகையில் முட்டாள்கள்தான் நட்பு வைத்துக் கொண்டிருப்பார்கள். நாம் வெறுப்பவர்களுக்கும் கூட நீதி காட்டுவதைத்தான் நான் வற்புறுத்துகிறேன்."

இனி, ஷாவைப்பற்றிய ரசமான சில குறிப்புகளைக் கீழே படியுங்கள்.

* * *

சென்ற மாதத்தின் கடைசி வாரத்தில் ஷாவைப் பார்த்து ஒரு பத்திரிகையாளர் கேட்டார்: "உங்களைப் பிரிட்டனுக்கு சர்வாதிகாரியாக்கி விட்டால், நீங்கள் என்ன செய்வீர்கள்?"

ஷா: அநேகமாக நீரோவைப் போல வெறியனாகி விட்டாலும் ஆகிவிடுவேன். ஏன் இப்படி சில்லரைத்தனமான கேள்விகளைக் கேட்கிறீர்கள்?

* * *

பிரிட்டனில் பொருளாதாரநெருக்கடி ஏற்பட்டு விட்டதாகவும், அதை 'டாலர் நெருக்கடி' என்று நாசூக்காக சொல்லுகிறார்கள் என்றும் சொல்லிவிட்டு ஷா கூறுகிறார்:

"இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? தம் சக்திக்கு மீறியதாக மிகப் பெரிய ராணுவத்தை வைத்துக் காப்பாற்ற விரும்புகிறார்கள். அதற்காக தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்களை அழைத்து ராணுவத்தில் சேர்க்கிறார்கள். இதெல்லாம் ருஷ்யாவை எதிர்த்துச் சண்டை செய்வதற்குத்தான். ஐரோப்பாவில் சமாதானத் தூணாக ஸ்டாலின் நிற்கிறார். அப்படியிருக்க ஸ்டாலினை 20-ம் நூற்றாண்டின் 'இரணிய'னாகக் கருதுகிறார்கள்."

* * *

ஷாவின் கிராமமாகிய அயோட் செயிண்ட் லாரன்ஸின் போஸ்டு மாஸ்டரான ஸ்ரீமதி ஜிஸ்பெல்லா லேத் என்ற அம்மாள் கூறுகிறார்:

"சென்ற வாரம்தான் ஷாவின் மாளிகையில் உள்ள தேன்கூட்டைச் சிறிது பழுது பார்க்க வேண்டியிருந்தது. பழுது பார்ப்பவரை அழைத்துச் செல்வதற்காக 'விறு விறு' என்று நடந்து வந்தார் ஷா. அவர் நூறு வயது வரையில் தாராளமாக இருப்பார்!"

* * *

எலிஸ் டியூட்ச் என்ற 20 வயதுப் பெண் ஷாவுடன் 5 வருஷகாலமாக கடிதப் போக்குவரத்துவைத்துக் கொண்டிருந்தாள். கடைசியில் சில மாதங்களுக்கு முன் அவளுக்கு ஷா எழுதியிருந்தார். "என்னால் யாருக்கும் பிரயோஜனம் கிடையாது. நான் படுகிழவன்"

பெண்ணோ மேலும் கடிதங்கள் எழுதிக் கொண்டுதான் இருந்தாள். பிறகு ஷா தம் போட்டோவை அவளுக்கு அனுப்பினார். அதன் பின்புறத்தில் அவர் எழுதி யிருந்ததாவது :

"என் வாழ்க்கை முடிந்து விட்டது; செத்த மாதிரித்தான். வாலிப நண்பர்களைத் தேடிக் கொள்"

* * *

பெர்னார்ட் ஷா குடியிருக்கும் கிராமம் கடந்த 500 வருஷ காலமாக யாதொரு மாறுதலும் அடையாமல்தான் இருக்கிறது. ஆனாலும் அவர் அடிக்கடி தெருக்களில் உலாவிக் கொண்டு செடி கொடிகளைத்தனியே நின்றுபார்த்த வண்ணம் இருப்பார். 30 வருஷங்களாக அவ்வூரில் அவர் வசித்து வந்திருந்தும் இன்னும் அங்குள்ள ஒவ்வொன்றிலும் ஏதேனும் அதிசயத்தையோ புதுமையையோ கண்டவண்ணம் இருக்கிறார்; பழைய கட்டிடங்களைப் போட்டோ எடுக்கவும் செய்கிறார். இதே பெர்னார்ட் ஷா முன்பு ஒரு சமயம் கிரேக்க நாட்டின் தலைநகராகிய ஏதன்ஸுக்குப் போயிருந்தார். அந்த நகரத்திலே, புராதன காலத்தில் மிக மிகச் சிறந்த கட்டிடங்கள் எல்லாம் அக்ரோபாலிஸ் என்ற பகுதியில்தான் இருந்தன. இன்னும் அந்த இடத்தை யாத்ரீகர்கள் போய்ப் பார்த்து சந்தோஷத்துடன் திரும்புகிறார்கள். ஆனால் அதைப் பார்த்துவிட்டு வந்து ஷா என்ன கூறினார்?

"கடைசியில் ஏதன்ஸ் நகரத்தின் முட்டாள்தனமான பழைய அக்ரோபாலியையும், அதன் இடிந்த தூண்களையும் விட்டு ஒரு வழியாக வந்து விட்டேன்."

ஷா ஹாஸ்யமாகப் பேசுவதில் மட்டுக்கு மீறிய பைத்தியங் கொண்டிருப்பதைக் கண்டித்திருந்தார் ருஷ்ய மேதை லியோ டால்ஸ்டாய். அதற்கு பெர்னார்ட் ஷா டால்ஸ்டாய்க்கு எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் :

"என் ஹாஸ்யத்தையும், சிரிப்பையும் தள்ளிவைக்க வேண்டும்? கடவுளின் ஒரே ஹாஸ்யமாக இந்த உலகம் இருக்கும் பக்ஷத்தில், நீங்கள் உலகத்தை மோசமான ஹாஸ்யமாக இல்லாமல் நல்ல ஹாஸ்யமாக ஆக்குவதற்குப் பாடு படத் தயங்குவீர்களோ?"

* * *

ஒரு சமயம் இத்தாலியின் தலைநகராகிய ரோமாபுரியில் அர்ச் பவுல் தேவாலயத்தை பெர்னார்ட்ஷாவுக்கும், பிரான்சின் பிரபல எழுத்தாளர் அனதோல் பிரான்சுக்கும் காட்டிக் கொண்டு வந்தார்கள். இந்த இரண்டு எழுத்தாளர்களும் கிண்டலாகப் பேசுவதில் ஒருவருக்கு ஒருவர் இளைத்தவர்களல்ல. ஆனால் அப்போது இருவருக்கும் பரஸ்பரம் ஒருவரை ஒருவருக்குத் தெரியாது. இரண்டு ஹாஸ்ய கர்த்

தாக்களுக்கும் ஒரு சிலையைச் சுட்டிக்காட்டி, "இதுதான் கான்ஸ்டண்ட்டைனுடைய உருவச் சிலை. கிறிஸ்தவ மதத்தை முதல் முதலில் தழுவிய அரசர் இவர்தான்" என்றார்கள். உடனே அனதோல் பிரான்ஸ் ஆச்சரிய மிகுதியால், "கிறிஸ்தவ மதத்தைக் கைவிட்டு விட்ட கான்ஸ்டண்ட்டைனா?" என்றார். அப்போது அங்கு நின்ற கூட்டத்தில் ஷா ஒருவர்தான் அனதோல் பிரான்சின் சொற்களை மிகவும் ரசித்தவர். பிறகு அனதோல் பிரான்ஸ் இதை அறிந்து தம்மைத் தாமே ஷாவிடம் அறிமுகம் செய்து கொள்ளும் போது "ஐயா! நீங்களும் நம்மைச் சேர்ந்த ஆள்தான்." என்றார்.

ஷா கூறிய பதில்:

"ஆம்; நானும்கூட ஒரு மேதாவி தான்."

மற்றொரு சமயத்தில் ஒரு வரவேற்பு உபசாரத்தின்போது, அனதோல் பிரான்ஸ் பெர்னார்ட் ஷாவின் இரண்டு கன்னங்களையும் முத்தமிட்டார்!

* * *

பெர்னார்ட் ஷாவின் வீட்டில் 30 வருஷகாலம் வேலை செய்து வந்த இரண்டு வேலைக்காரர்கள் வேலையிலிருந்து விலகி ஓய்வு பெற விரும்பினார்கள். ஆனால், அவர்களை அனுப்ப ஷாவுக்கு மனமில்லை.

ஷாவின் பக்கத்து வீட்டுக்காரராகிய ஸ்டீபன் வின்ஸ்டன், ஷாவிடம், "அவர்களை அனுப்பி விட்டு, இதைவிட சௌகரியமாக வேறு ஒரு ஏற்பாட்டை நீங்கள் செய்து கொள்ளக் கூடாதா?" என்று கேட்டுவிட்டு, அவர் மேலும் கூறியதாவது:

"கடைசியில், மரக்கறி உணவுப் பழக்கமுள்ள ஒரு பெண்ணை வேலைக்கு நியமிக்கும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிட்டியிருக்கிறது... ...உங்களுக்கு உணவு அளிப்பது எப்படி என்பதையும் முக்கியமாக, அந்தக் கலையின் லக்ஷணத்தையும் நன்கு உணர்ந்தவளை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் அல்லவா?"

ஷா பின்வருமாறு சொன்னார்: அப்படிப்பட்ட பலஹீனர்களை என் வீட்டில் வைத்துக் கொள்ள மாட்டேன். நான் விரும்புவது ஒரு சராசரி ஆளைத்தான். அவள் என்னைவிடத் தன்னைப்பற்றி முக்கியமாக நினைக்காதவளாக இருக்க வேண்டும். எது எப்படியானாலும், சைவ உணவு சமைக்கும் சமையல் காரி கிடைக்க மாட்டாளே!

வின்ஸ்டன்: ஆனால், உங்களுக்குக் கிடைப்பாள்.

ஷா: கிடைக்கமாட்டாள் என்று சொல்லுகிறேனே. அப்படித்தான் எனக்குத் தெரிவித்தார்கள்.

வின்: உங்களுக்கு அப்படித் தவறான செய்தி கொடுத்தவர்கள் யார்? உங்களுக்குச் சேவை செய்வதைப் பேரானந்தமாகக் கருதுபவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

ஷா: அப்படிப்பட்ட ஆட்களைத்தான் என் வீட்டுக்குள் வரவிடக்கூடாது என்றிருக்கிறேன். நான் விரும்பக்கூடிய ஆள், தன் ஸ்தானத்தைநன்குஉணர்ந்தவளாக இருக்கவேண்டும்; என்னுடைய

கருத்துக்களில் அவளுக்கு யாதொரு அக்கறையும் இருக்கக் கூடாது; என் புத்தகங்களை வாசிக்கக்கூடாது......தியாகபுத்தியோடு எனக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் எந்த சமையல்காரியும் வரக் கூடாது. என்னிடத்தில் வாங்கும் சம்பளத்துக்காக வேலை பார்ப்பவளைத் தான் விரும்புகிறேன். எந்த வேலைக்காரியும் தன் சொந்த எஜமானனுக்கு லட்சியப் பெண்ணாக இருக்க முடியாது.

* * *

பெர்னாட் ஷாவுக்குப் பெற்றோர்களிடத்தில் கொஞ்சங் கூட பாசம்கிடையாது. அவர்களும் இவர்மீது அன்பு காட்டியதில்லை. தம் தகப்பனாரை மாய்மாலக்காரன் என்கிறார் ஷா. தாயாரைப் பற்றி என்ன சொல்கிறார்?

"என் தாயார் என் அன்பைக் கவர ஒருபோதும் முயன்றது கிடையாது. நானும் அவள் அன்பைக் கவர முயன்றவனல்லன்... என்னை ஒரு உதவாக் கரையாகவும் பெரிய பாரமாகவும் நினைத்தாள். நான் குழந்தையாக இருந்த போது அன்பு என்பது என்ன என்பதை நான் அறிந்ததே கிடையாது... நான் வீட்டை விட்டுப் போய் பிறகு திரும்பி வாராமலே இருந்திருந்தால், அவர்களில் யாரும் என்னைஇழந்துவிட்ட உணர்ச்சியை அடைந்திருப்பார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை."

இதனால் தானே என்னவோ ஷாவுக்குத் தம் தாயாரின் சவ அடக்கம் மனோரம்யமான காட்சியாகத் தோன்றியது போலும்!

ஷாவின் ஒரு அபிப்பிராயம்: (நான் செய்யும் உபதேசம்) உபதேசத்தைக் கேட்டு அப்படி நடக்கக் கூடாது. எதைச் செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்களோ அதை யெல்லாம் செய்ய வேண்டும். பழங்காலத்தின் கொடுமைத் தளையை உடைத்தெறிந்து அதிலிருந்து விடுதலை பெற வேண்டும், கிழமாக இருப்பதை நன்கு அனுபவிக்க வேண்டும்.

ஷாவைப் பற்றி ஒரு அபிப்பிராயம்: "இந்த உலகத்திலேயே முதல் சோவியத் அரசாங்கம் என்னுடைய நாட்டில் உதயமான போது, ஷா என் நாட்டின் நண்பரானார். ஷாவின் நேர்மையை என் நாட்டு மக்கள் போற்றினார்கள். அவரை அவர்கள் நண்பராகக் கருதினார்கள். அவருடைய பெருமைகளை நன்கு மதித்தார்கள்; அவருடைய சிறு குறைபாடுகளைப் பொருட்படுத்தவில்லை. இந்த எழுத்தாளர் என் நாட்டு மக்களிடத்தும், என் நாட்டினிடத்தும் கொண்ட அபிப்பிராயம் முழுவதும் அநேகமாக யாதொரு மாறுதலும் அடையாமல் அப்படியே இருந்து வருகிறது."

மேற்கண்ட அபிப்பிராயத்தை எவ்ஜெனி அல்மஸோவ் என்ற ருஷ்ய எழுத்தாளர் "சோவியத் லிட்டரேச்சர்" பத்திரிகையின் 1946, ஜூலை இதழில் எழுதியிருக்கிறார்.

காந்திஜியை மகாத்மா மேஜர் என்றும், தம்மை மகாத்மா மைனர் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார் ஷா!

குணத்தில்
தங்கம் போன்றது!

தங்க பஸ்பம்

புகையிலை

தந்தி: "சூரியன்" தபால் பெட்டி நெ. 12. போன் நெ. 188.

N. ஆறுமுகம் பிள்ளை, காரைக்குடி.

சென்னை மாகாணத்திலும், பம்பாயிலும், எல்லா முக்கிய இடங்களிலும், பிராஞ்சுகளும், சப் ஆபீஸ்களும், உள்ளன.

வெளியிட்டு வாக்களித்த மூலதனம்	ரூ.	72,00,000
கேட்கப்பட்ட மூலதனம்	ரூ.	53,00,000
ரிசர்வ் நிதி	ரூ.	62,00,000

எல்லாவித பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால ஐயர்,
காரியதரிசி.



N.P.B

தி
இந்தியன் பாங்க் லிட்.

ஜம்மியின்
லிவர்க்யூர்

குழந்தை களின் ஈரல் குலைக்கட்டி களினால் ஏற்படும் பயத்தைப் போக்கடிக்கிறது.

மிகவும் முத்திப்போன சந்தர்ப்பங்கள் தவிர எல்லா ஈரல் குலைக்கட்டி களுக்கும் ஜம்மியின் லிவர்க்யூர் கண்டிப்பான குணம் அளிக்கிறது என்பதை கடந்த பல ஆண்டுகளாக குணமாகி வரும் ஆயிரக்கணக்கான குழந்தைகளினால் நிரூபிக்கப் படுகிறது.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாபூர், மதராஸ். (போன் நெ. 8139)
தெப்பகுளம் திருச்சினாப்பள்ளி, பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர்,
பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: லக்னோ, கல்கத்தா,

J-235. Tamil

'குழந்தைகளிடம் விளையாடும் ஆனந்தம் வட்டமேஜையில் கலந்துகொள்வதில் இல்லை' என்றவர் காந்திஜி. எதிர் காலப் பிரஜைகளான குழந்தைகளிடம் காந்திஜி கொண் டிருந்த நம்பிக்கையையும் அன்பையும் எடுத்துக் கூறுகிறது இந்தக் கட்டுரை.

பாபுவும் குழந்தைகளும்

புருஷோத்தம்தாஸ் தாண்டன்

பெரிய மனிதர்கள் மாபெரும் காரியங்களிலும் இயக்கங்களிலும் தான் பரிபூரணமாகப் பங்கெடுக்கிறார்களே ஒழிய, உண்மையான மகிழ்ச்சிக்கு ஜீவாதாரமான வாழ்க்கையின் மனிதாம்சத்தைக் கவனிப்பதே யில்லை. ஆனால், காந்திஜி இவ் விஷயத்தில் புறம்பானவர். அவரும் பெரும் இயக்கங்களைத் தொடங்கினார்; சரித்திரப் பிரசித்தி பெற்ற மகாநாடுகளில் கலந்துகொண்டார்; தேவையான போதெல்லாம் உலகுக்கு நல்லுபதேசம் செய்தார். என்றாலும் அவர் வாழ்க்கையின் நுண்ணிய, இதமான அம்சங்களையும் புறக்கணிக்க வில்லை. அவர் குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சை செய்தார்; ஆஸ்ரம வாசிகளுக்குச் சிசுருஷை செய்தார்; ஏழைகளின் தேவைகளைக் கவனித்தார்; இளைஞரோடு விளையாடினார்; தாழ்த்தப் பட்டோருக்கு ஆறுதல் கூறினார்; தனக்கு வரும் பெரும் தபால் மூட்டையையும் கவனித்துக் கொண்டார்; தனது மகத்தான பொறுப்புகளுக்கிடையிலும், அவர் தம்மைச் சுற்றியுள்ள சின்னஞ் சிறு விஷயங்களிலும் கவனம் செலுத்தினார். இதுதான் காந்திஜியின் உண்மையான பெருமை. நமக்கு சிரிப்பு மூட்டும் குழந்தைகளின் செல்லச் சிரிப்பிலும், அறியா மழலையிலும் அவர் ஆனந்தம் கண்டார்; குழந்தைகளோடு விளையாடுவதி லுள்ள ஆனந்தம் அவருக்கு வேறெதிலுமே இல்லை. காந்திஜியைப் போல் குழந்தைகளின் குறுநகையையும் குழறு மொழியையும் நம்மில் யாருமே அனுபவித்து ஆனந்தப் பட்டிருக்க முடியாது. கீழே காந்திஜி தமது கைப்பட எழுதிய சில கடிதங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலம் காந்திஜி தாம் சந்தித்த, தெரிந்துகொண்ட குழந்தைகளிடம் எவ்வளவு அன்பும் சிரத்தையும் கொண் டிருக்கிறார் என்பது லகுவில் விளங்கும். அவர் குழந்தைகளை மிகவும் நேசித்தார்; அவர்களுடைய நலன்களில் அதிக அக்கறையும் காட்டினார்.

மகாதேவ ஹிங்கோரோனி காந்திஜியிடம் தொடர்பு கொள்ளும் பாக்கியம் பெற்றவன். அவனது பெற்றோரான ஆனந்த ஹிங்கோரானியும் வித்தியா ஹிங்கோரானியும் சமயம் நேரும் போதெல்லாம் காந்திஜி யிடம் தமது புத்திரன் மகாதேவன்

விஷயமாக நல்லுரை விரும்புவார்கள். ஒரு தடவை ஆனந்த ஹிங்கோரானி தமது மகன் இரவு நேரங்களில் மிகவும் பயப்படுவதாகவும், அது விஷயமாய்த் தாம் அதிகக் கவலை கொண்டிருப்பதாகவும் பாபுஜிக்கு எழுதினார். அதற்குப் பதிலாக மகாதேவனுக்குக் காந்திஜி எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தார்:

"நீ இராக் காலங்களில் மிகவும் பயப்படுவதாக உன் அப்பா சொல்லுகிறார். இரவில் ஏன் பயப்படுகிறாய்? நாம் தூங்கும்போது கூட கடவுள் நம்மைக் கவனித்துக் கொள்கிறாரே. பிறகு ஏன் பயப்படுகிறாய்? படுக்கப் போகும்போது 'ராம்ராம்' என்று ஜபித்துக்கொள்; உனக்குப் பயமே இருக்காது!" என்று எழுதினார்.

மகாதேவனுக்குப் பாபுஜி என்றால் வெகுபிரியம். ஒருநாள் அவன் தன் தந்தையிடம் பாபுஜி அவனை ஞாபகம் வைத்திருக்கிறாரா என்று கேட்டான். அவன் தந்தை பாபுஜிக்கு எழுதினார். அதன்பின் காந்திஜி மகாதேவனுக்கு ஒரு அன்பான கடிதம் எழுதினார்: "நீ மட்டும் எனக்குக்கடிதமே எழுதுவதில்லை. அதன்பின் ஆனந்தைப் பார்த்து, 'பாபுவுக்கு என்னை நினைவிருக்கிறதா?' என்று கேட்கிறாய். 'ஆமாம். எனக்கு உன் நினைவு இருக்கத்தான் செய்கிறது. இப்போது நீ எனக்கு விரிவாக எழுது. நீ இப்போது எந்த வகுப்பிலே படித்துக்கொண்டிருக்கிறாய்? நீ தினம் தேகப் பயிற்சி செய்கிறாயா? என்னென்ன சாப்பிடுகிறாய்? எப்போது படுக்கச் செல்லுகிறாய்? இதைப் பற்றியெல்லாம் விரிவாக எழுது!" என்று பதில் கேட்டார்.

அதிக வேலையிருந்தால்கூட, காந்திஜி சிறு சிறு விஷயங்களிலும் சிரத்தைக் காட்டினார். மகாதேவன் ஒரு முறை காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதி, தன் கடிதத்தில் தவறுகளும் இருக்கக் கூடும் என்று எழுதி யிருந்தான். காந்திஜி அந்தத் தவறுகளைத் திருத்தி, பதில் எழுதினார்: "உன் கடிதம் கிடைத்தது. மிக்க சந்தோஷம். உன் கடிதத்தில் சின்னஞ் சிறு தவறுகள்தான் இருந்தன; அதைப்பற்றிக் கவலைப் படாதே. இரவுவேளைகளில் 'ஜப சாகிபை' உச்சரிப்பது நல்லது. உன் புகைப் படத்தைப் பார்த்தேன்; அதில் என் ஆசிகளையும் எழுதியிருக்கிறேன். உன் கால்களில் தசையை இல்லாததுபோல் தோன்றுகிறது. தேகப் பயிற்சி செய். நீ மிகவும் பலவீனமாக இருப்பதாகத் தோன்றுகிறாய்!"

ஒரு நாள் மகாதேவனுக்கு உடம்பு சுகமில்லை; பலவீனமாயிருந்தான். இருந்தாலும் அவன் பாபுவுக்கு ஒரு சிறு கடிதம் எழுதினான். உடனடியாக அதற்குப் பதில் எழுதும் போது பாபுஜி, "உடம்பு பலவீனமா யிருக்கும் போது நீ கடிதமே எழுதி யிருக்கக்கூடாது. உடம்பு குணமான பின் தாராளமாய் எழுதேன். முதலில் உடம்பைக் கவனித்துக் கொள்; பிறகு கடிதம் எழுது" என்று எழுதினார். மகாதேவனுக்கு பதினைந்து வயது நிரம்பிய போது, அவன் பாபுஜியை நேரில் சந்திக்க விருப்புவதாகக் கடிதம் எழுதினான். காந்திஜி பதில்

எழுதினார்: "உன் கடிதம் வந்தது பற்றி மிகுந்த சந்தோஷம். எனக்கென்னவோ நீ நேற்றுத்தான் பிறந்தது போல உணர்ச்சி ஏற்படுகிறது. உனக்குப் பதினைந்து வயது நிரம்பி விட்டது என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. என்னைச் சந்திப்பதனால் உனக்கு என்ன லாபம் ஏற்படப் போகிறது? நாமெல்லாம் நம் மனசுகளுக் குள்ளாகவே சந்தித்துக் கொள்கிறோமே. நீ சிரஞ்சீவியாய் வாழ்ந்து உன் தாய் நாட்டுக்கு நீண்டகாலம் சேவை செய்வாயாக!"

1930-ல் ஐக்கிய மாகாணத்தின் 'கோர்ட் ஆப் வார்ட்ஸ்' தலைவரான பண்டித ஜகந்நாத திருப்பதியின் மகனான கைலாஸ் என்ற சிறுவன் பாபுஜிக்கு ஒருகடிதம் எழுதினான். அதில் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டால், இளம் மாணவர்கள் என்ன செய்யவேண்டும் எனக் கேட்டிருந்தான். அப்போது காந்திஜி சிறையி லிருந்தார்; எனவே பின்வருமாறு எழுதினார்: "உன் கடிதம் கிடைத்தது. இது விஷயமாக நான் எதுவும் உனக்கு எழுத முடியாது; ஏனெனில் நான் சிறையி லிருக்கிறேன். உன் அப்பா அம்மா சொல்வது போல் செய். உன் தாயின் மனத் திருப்திப்படி நட" என்று எழுதினார். கைலாஸ் திருப்பதி இப்போது ராணுவத்தில் ஒரு லெப்டினென்ட் கர்னல்; இப்போதும் அந்தக் கடிதம் அவரிடம் பத்திரமாயிருக்கிறது.

காந்திஜி லண்டன் சென்றிருந்த சமயம் அங்கே பல சிறுவர் சிறுமியரைச் சந்தித்தார்; அவர்கள் பாபுவை காந்திமாமா என்று அழைத்தார்கள். தங்கள் மத்தியில் காந்திஜி இருப்பதைப்பற்றி அவர்கள் பெருமைப்பட்டு மனம் மகிழ்ந்தார்கள். 'குழந்தை விடுதி' யிலிருந்த குழந்தைகள் காந்திஜிக்கு பின்வரும் கடிதத்தை எழுதினர்: "தங்கள் பிறந்ததினம் மங்களமானதாகட்டும். நாங்கள் அனைவரும் சொல்கிறோம்: தங்கள் பிறந்ததினம் மகிழ்ச்சி தருவதாகட்டும். நாங்கள் அனைவரும் உங்களுக்கு ஒரு பிறந்ததின கீதம் பாடப்போகிறோம். நாங்கள் உங்களுக்கு ஒரு பரிசும் அனுப்பப் போகிறோம். ஒரு குருவி உட்கார்ந்திருப்பதுபோல் செய்த பிறந்ததின 'கேக்'கைத் தங்களுக்கு அளிக்க உத்தேசம். தாங்கள் இங்குவந்து உங்கள் பிறந்ததினத்தைக் கொண்டாட முடியுமா? எங்களிடம் எங்கள் பாண்டுவாத்தியமும் இருக்கிறது. நாங்கள் 'டெய்சி', 'எவே இன் எ மேஞ்சர்' என்ற பாட்டெல்லாம் பாடிக் காட்டுவோம். மெழுகுவத்திகள் ஏற்றுவோம். அன்புடன்—மாரிஸ், குப்டான்வி, பீட்டர் ஜன், ஜின், அலைஸ், ஜோன், பெர்னார்ட், ஜன், விவ்வி, பிலிஸ், டோரியன், டேவிட் மற்றும் எல்லாக் குழந்தைகளும்" என்று கடிதம் எழுதியதோடு, ஒரு சிறு கூடையில், இரண்டு சடை நாய்க்குட்டிப் பொம்மைகள், மூன்று பிறந்ததின மெழுகுவத்திகள், ஒரு தகரத் தாலம், ஒரு நீலப் பென்ஸில், கொஞ்சம் சர்க்கரை மிட்டாய்கள் இத்தனையும் அனுப்பியிருந்தார்கள். தாம் லண்டனிலிருந்தபோது, காந்திஜி அந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதமுடியவில்லை. அவர்கள் கடிதத்தையும், விளையாட்டுக் கருவிகளையும் இந்தியாவுக்குக் கொண்டுவந்தார். சில

வாரம் கழித்து அவர் கைது செய்யப்பட்டார். அப்போதுதான் அவருக்கு அந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதச் சமயம் வாய்த்தது. எழுதினார்.

"அன்பான இளம் நண்பர்களே, நான் அடிக்கடி உங்களை நினைத்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அன்று மதியம் உங்களோடிருந்த போது, நான் கேட்ட கேள்விகளுக்கு நீங்கள் அளித்த விடைகளையும் நினைவுகூருகிறேன்.

நான் கிங்ஸ்லி ஹாலில் தங்கியிருந்தபோது உங்கள் அன்பான பரிசுகளுக்கு வந்தனம்செலுத்திப் பதில் எழுத நேரம் கிடைக்கவில்லை. அதை இப்போது ஜெயிலிலிருந்து எழுதுகிறேன்.

நான் அந்தப் பரிசுகளை ஆஸ்ரமக் குழந்தைகளுக்குக் கொடுத்து விட உத்தேசித்தேன். ஆனால் நான் ஆஸ்ரமத்துக்கே போக முடியவில்லை.

உங்களுக்கு ஜெயிலிலிருந்து கடிதம் வருவது விநோதமாயில்லையா? நான் சிறையிலிருந்தாலும், நான் ஒரு கைதி என்ற நினைப்பே எனக்கு இல்லை. நான் எதுவும் தப்பு செய்துவிட்டதாகவே கருதவில்லை.

உங்கள் அனைவருக்கும் என் அன்பு.

உங்கள்,

நீங்கள் அழைக்கும் காந்தி மாமா."

ஒரு தடவை ஒரு சிறுமி காந்திஜியைப் பார்த்து, பூணூல் ஏன் அணிகிறார்கள் என்றும் பசுவை ஏன் தாய் என்று அழைக்கிறார்கள் என்றும் கேட்டாள். அதற்கு பாபுஜி, "பூணூல் புனிதத்துவத்தை அடைவதற்கு ஓரளவு உதவுகிறது. ஆனால் இந்தக் காலத்தில் அது மிகவும் பயனுள்ளதாகக் கருதப்படவில்லை. பசு நமது தாய்போலவே நமக்குப் பால் தருவதால், அதையும் தாய் என்றே அழைக்கிறோம். தாயோ தன் குழந்தைகளுக்கு மட்டும் பால் கொடுக்கிறாள்; அதுவும் ஒரு வருஷகாலம்தான். பசுவோ நம் எல்லோருக்குமே பால் தருகிறது. எனவே பசு நம் அனைவருக்குமே தாய். குழந்தைகள் தாய்க்கு சேவை புரிகின்றன. ஆனால் பசுவுக்கு யார் சேவை செய்கிறார்கள்? எனவே பசுதான் எல்லோருக்கும் பெரியதாய்" என்று எழுதினார்.

ஹெம்பிராவின் மகனை அருண் உடம்பு குணமில்லாமலும், ஓய்வு எடுக்காமலும், இருப்பதாகப் பாபுஜிக்குத் தகவல் கிடைத்தது. இந்தச் சிறுவனுக்குக் காந்திஜி கடிதம் எழுதினார். "அம்மா உனக்கு உடம்புக்குக் குணமில்லை யென்றும், எனினும் நீ எழுதவும் படிக்கவும் செய்கிறாய் என்றும் எழுதியிருந்தாள். நீ ஓய்வு எடுத்துக்கொண்டு, உன் உடம்பு சீர்பட்டு வரும்படி செய்வாயா? வாழ்வும் மரணமும் ஒரு நாணயத்தின் இருபுறங்கள்தான் என்றாலும் நாம் சாகும் போதும், வாழ்வதிலுள்ள சந்தோஷத்துடனேயே சாகவேண்டும். உயிருள்ள வரையில் நாம் உடம்புக்கு உரியனவற்றை ஒழுங்காகக் கொடுத்தாக வேண்டும். அது கடவுள் நமக்குக் கொடுத்துள்ள வேலை. அதைப் பற்றி நாம் மிகவும் சிரத்தை கொள்ள வேண்டும். முடிந்தால்

எனக்குப் பதில் எழுது. கடவுள் உன்னை ஆசிர்வதிப்பாராக" என்று எழுதினர்.

காந்திஜிக்கு ஓய்வு கிடைத்த போதெல்லாம் ஆஸ்ரமக் குழந்தைகளுக்குக் கடிதம் எழுதுவார். ஆஸ்ரமக் குழந்தைகளுக்கு எழுதிய அநேகக் கடிதங்களில் கீழ் வருவதும் ஒன்று.

"சிறுவர் சிறுமியரே.

குழந்தைகள் அப்பாவிகள்; அன்புடையவர்கள்; இயற்கையிலேயே நற்குணம் வாய்ந்தவர்கள். வயது ஆகும் போதுதான் தீமை அவர்களை அணுகுகிறது. அவர்களது குறும்பிலும் கூட, அவர்கள் அறியாப் பாலர்கள்தான். இதை நீங்கள் உணர்ந்து கொண்டால் நீங்கள் பிறருக்காக உழைக்கலாம்; பிறரைத் தீய வழியில் செல்வதிலிருந்து தடுத்து, அவர்களை மேம்படச் செய்யலாம். நீங்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொண்டு, எச்சரிக்கை செய்து கொள்ள வேண்டும். உங்களது கண் காணிப்பு ஒரு போலீஸ்காரனுடையதைப் போலல்லாமல் கடவுளுடையது போலிருக்க வேண்டும். கடவுள் நம்மையெல்லாம் கண் காணிப்பது தண்டிப்பதற்காக அல்ல; தூய்மையைச் செய்வதற்குத்தான். உங்கள் கவனமும் அப்படித்தான் இருக்க வேண்டும். பிறருக்குத் தெரியாத விஷயங்களை நீங்கள் அவர்களுக்குப்போதிக்கவேண்டும். யாராவது பொய் சென்னல், அவர்களை அன்போடு திருத்தப் பார்க்க வேண்டும். நீங்கள் அளித்த வாக்குறுதியை எப்போதும் காப்பாற்ற வேண்டும். தெரிகிறதா?"

குழந்தைதான் மனிதனின் தந்தை என்பதை பாபுவும் அறிவார். குழந்தைகளைச் சரிவர வளர்ப்பதிலும், அவர்களது மனத்தையும் உடலையும் ஆரோக்கியமாகப் பராமரிப்பதிலும் முக்கியத்துவம் கொடுத்து வந்தார். எதிர்காலப் பிரஜைகள் அவர்கள்தான் என்பதையும் தங்கள் நாட்டின் தலைவிதியை அவர்கள்தான் உருவாக்க முடியும் என்பதையும் காந்திஜி அறிவார். குழந்தைகளின் அடிப்படைக் கல்வி முறையின் பிதா அவர். அவர் குழந்தைகளின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் சிரத்தை கொண்டவர். அந்த மாபெரும் பிதா இறந்து விட்டார். என்றாலும் அவர் சிரஞ்சீவி! அவரது மணிவாக்கில் அவர் இன்றும் வாழ்கிறார். அவரது எழுத்துக்களின் மூலம் நம்மை நல்வழிப்படுத்தவும் நல்லுபதேசம் செய்யவும் செய்கிறார். அவரது சாதனைகள் அசாதாரணமானவை. வாழ்க்கையில் அவரது ஈடுபாடு யோகி மார்க்கமாயிருந்த போதிலும், மனித குலத்துக்கு அவர் அளித்த உபதேசம் அறிவு பூர்வமானது. அவருக்கு ஏழை பணக்காரன், சிறியவன் பெரியவன் என்ற வித்தியாச மெல்லாம் கிடையாது அவர் எல்லோரையும் நேசித்தார்; யாவருக்காகவும் வாழ்ந்தார்.

*

இந்தியாவின் வடகோடிப் பிரதேசம் ஒன்றில் வாழும் மக்களைப் பற்றிய ருசிகரமான விபரங்களைத் தெரிவிக்கிறது இக் கட்டுரை. சர்க்கார் விளம்பர இலாகாவின் செய்தி அறிக்கைகளைப் பிரதான ஆதாரங்களாகக்கொண்டு தயாரிக்கப்பட்டது.

சிறை இல்லாத நாடு

○

"சரித்திராசிரியன்"

இந்தியாவில் சிறைச்சாலைகளே இல்லாத ஒரு இடம் இருக்கிறது என்றால் அது லடாக் தான். லடாக் காஷ்மீர் ராஜ்யத்தின் ஒரு பகுதி. மலைப்பாங்காகவும் மணல் பாங்காகவும் செழிப்பற்றிருக்கும் இப்பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 11,000 அடி உயரத்தில் உள்ளது. இதன் விஸ்தீரணம் 30 ஆயிரம் சதுர மைல்; ஜனத்தொகையோ 36 ஆயிரம் பேர் தான். அதாவது சென்னை நகரத்தின் ஜனத் தொகையில் 40-ல் ஒரு பங்கு மக்களே இங்கு வசிக்கின்றனர். மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளே. இங்கு பார்லி, கோதுமை முதலியன பயிராகின்றன. பார்லியிலிருந்து தயார் செய்யும் "சாட்டு" என்ற உணவையே அவர்கள் சாப்பிடுகிறார்கள். இங்கு கோடைக்கும் குளிர் காலத்துக்கும் மிகுந்த வித்தியாசம் தெரியும். குளிர் காலத்தில் தாங்கமுடியாத குளிராக இருக்கும். பூஜ்யம் டிகிரிக்கும் குறைந்த சீதோஷ்ணஸ்திதியே குளிர் காலத்தில் நிலவியிருக்கும். இங்கு அதிகபக்ஷ உஷ்ணம் 63 டிகிரிதான்; குறைந்தபக்ஷம் 43 டிகிரி. அதிகபக்ஷ உஷ்ணம், கோடை காலத்தில் கொடைக் கானலில் நிலவியிருக்கும் உஷ்ணத்துக்குச் சமமாகும்.

பனி படர்ந்த இமயமலைப் பிரதேசத்திலிருந்தபோதிலும், பனி யாறுகள் உள்ள பிரதேசமாக இருந்தபோதிலும் லடாக்கில் தண்ணீர்ப் பஞ்சம்தான்.

லடாக்கின் தலைநகரம் லே என்பதாகும். காஷ்மீரின் தலைநகராகிய ஸ்ரீநகரிலிருந்து லே க்கு 245 மைல் தூரம்தான். மலைப் பிரதேசமான பாதையானதால் மட்டக் குதிரைச் சவாரி செய்து போக 15 நாட்களாகும். விமானத்தில் 1 மணி 20 நிமிஷ நேரத்தில் போய்விடலாம்.

லே யிலிருந்து இந்தியா, திபேத், யார்க்கண்டு, கிழக்கு துருக்கிஸ்தான் முதலிய இடங்களுக்கு வியாபார மார்க்கங்கள் செல்லுகின்றன. சிந்து நதியின் 300 மைல் நீளப் பகுதி இந்நாட்டில் ஓடுகிறது.

லடாக் மக்களில் இந்துஸ்தானியைப் புரிந்துகொள்ளுபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அநேகமாக எல்லோரும்

புத்த மதத்தினர்கள்தான். ஆனல் ஒரே குடும்பத்தில் ஒருவர் பௌத்தராகவும், ஒருவர் முஸ்லிமாகவும், ஒருவர் கிறிஸ்தவராகவும் இருப்பதும் இங்கு அதிசயமில்லாத ஒரு செய்தி. இவர்களுடைய புத்த மதம் ஒரு தனி தினுசாக இருக்கும். இந்தியக் கலாசாரம் லடாக்கில் எப்போதோ பரவி விட்டது. இந்தியாவின் புராதனமான கிரந்தங்களின் கையெழுத்துப் பிரதிகள் இங்கு உண்டு.

லடாக்கில் 100-க்கு 90 பேர் படித்தவர்கள் என்றல் அதிசயமாகத்தான் இருக்கிறது. இந்நாட்டில் பௌத்த மடங்கள் ஏராளம்.

பௌத்த சந்நியாசிகளும், சந்நியாசினிகளும் தத்தமக்குரிய மடங்களில் வசித்து வருகிறார்கள். இவர்கள் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது என்ற கண்டிப்பான கட்டுப்பாடு இல்லாத போதிலும், அநேகமாக கல்யாணம் செய்து கொள்ளாமல்தான் இருக்கிறார்கள்.

லடாக்கில் சினிமாக்களோ, செய்திப் பத்திரிகைகளோ கிடையாது. அதற்குப்பதிலாக பாட்டு, நாட்டியம் முதலியவை அவர்களுக்கு உல்லாசப் பொழுதுபோக்குகளாக உள்ளன. ஷெனய், முரசு முதலியவையே இவர்களுடைய வாத்தியங்கள். லடாக் மக்களில் சிலர் கிராப் வைத்திருந்தாலும், பிறஆண்களும் பெண்களும் சடைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

லடாக்கில் பல புருஷர்களுக்கு ஒரு பெண் மனைவியாக இருப்பது சாஸ்திர சம்பந்தமான ஒரு விஷயம். ஒரு குடும்பத்தில் மூத்த மகன் ஒருத்தியைக் கல்யாணம் செய்துகொண்டால், அவள் அவனுடைய மற்ற சகோதரர்களுக்கும் மனைவி யாகிவிடுகிறாள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு "மூத்த அப்பா"வும் "சின்ன அப்பா"க்களும் இருப்பார்கள். ஏக நாயக மணத்தை இம்மக்கள் கைக் கொள்ளுவதை இன்னும் அவசியம் என்று கருதவில்லை. பல கணவன்மார்களுக்கு ஒருத்தி மனைவியாக இருப்பதன் லாபம் என்னவென்றால், ஜனத் தொகை அளவுக்கு மீறி பெருகி விடாமல் இருக்கும்.

மூத்தமகன் குடும்பசொத்துக்கு வாரிசு. அதனால் சொத்துப் பிரிவினை கிடையாது; எல்லா சகோதரர்களும் ஏக குடும்பமாகக் காலம் கழிக்க முடிகிறது.

லடாக் மக்கள் உல்லாசமும் ஹாஸ்ய ரசமும் சிரிப்பில் பிரியமும் கொண்டவர்கள். செழிப்பில்லாத பூமியில் காலம் கழிப்பவர்களாதலால் கஷ்டப் பட்டு ஆணும் பெண்ணும் வேலை செய்கிறார்கள். இவர்களுடைய அமைதியான வாழ்க்கையைக் குலைக்கும் முறையில் பாகிஸ்தானிகள் இந் நாட்டின் மீது படையெடுத்து வந்தார்கள். ஒரு சமயம் லே நகரத்துக்கு 12 மைல் தூரம் வரைக்கும் பாகிஸ்தான் படைகள் வந்து விட்டன. இந்தப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தியதுடன் லடாக் மக்களின் உதவியைக் கொண்டு இந்தியப் படையினர் அவர்களைத் துரத்தியடித்து விட்டனர்.

1948-ம் வருஷத்தில் கர்னல் பிரீதிசந்த் என்பவர் இந்திய சர்க்காரால் லடாக்குக்கு அனுப்பப்பட்டார். அவர் சென்று லடாக் மக்களுக்கு பயிற்சி அளிக்கத் தொடங்கினார். அவர் திரட்டிய முதல் ராணுவத்தில் மொத்தம் 80 பேர்கள்தான் இருந்தார்கள். விரோதிப் படைகளோ தலைவாசலில் வந்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தன. நம் படைகளுக்கு சப்ளைகள் அனுப்புவதற்கு ஏற்ற சாலை மார்க்கங்கள் இல்லாததால் அவர்கள் லடாக்கில் கிடைக்கும் உணவு வகைகளைக் கொண்டே சரிக்கட்டி வந்தார்கள்.

மே மாதத்தில் மேஜர் ஜெனரல் கே. எஸ். திம்மய்யாவும் மேஹர் சிங்கும் அங்கு விமானத்தில் சென்று ஒரு விமான மார்க்கத்தை உண்டாக்கினார்கள். இந்த விமா

உங்கள் தேர்ந்தெடுப்பை ஆர்வமுடன் அழைக்கும் கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்

அவைகளின் உறுதி, உழைப்பு, நவீன நாகரீக மாதிரிகள் கோ-ஆப்டெக்ஸ் ஆடைகளுக்கு ஒரு தனி மதிப்பை அளித்து தரமறிந்து வாங்குபவரின் தேர்ந்தெடுப்புக்கு இலக்காக்குகின்றன.

CO-OPTEX

கைத்தறி ஜவுளிகள்
குறைந்த விலையில்
சிறந்த ஆடைகள்

புடவைகள் -
ரவிக்கைத் துணிகள் -
பாவாடை சீட்டிகள் -
சிற்றுடைகள் -
டவல்கள் - -
கைகுட்டைகள்

மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

"ஹாலோவேஸ் கார்டன்ஸ்"

34, பாந்தியன் ரோட் :: :: எழும்பூர், மதராஸ்.

காந்திஜி நூல்கள்

*

	ரூ.	அ.
மாணவருக்கு	5	0
பெண்களுக்கு	3	12
ஹிந்து முஸ்லிம் பிரச்னே	6	0
சமஸ்தானப் பிரச்னே	6	0
நமது மொழி பிரச்னே	2	8

இதர நூல்கள்

நாடக உலகம் — கொத்தமங்கலம் சுப்பு	3	12
ஸோக்ரதர் — ராஜாஜி	1	8
பாரதியும் கவிதையும் — தங்கம்மாள் பாரதி	2	8
சுயராஜ்ய சாஸ்திரம் — விநோபா பாவே	2	8
தீண்டாதான் — முல்க்ராஜ் ஆனந்த்	3	12
கூலி — முல்க்ராஜ் ஆனந்த்	5	0
மெய்க்காதல் — வாஸிலெவ்ஸ்கா	3	12

*

புதுமைப் பதிப்பகம் லிமிட்டெட்

காரைக்குடி

★

ஆஸ்
த்மா
அபா
யத்தை

அனுபவ ஸம்மதமான மருந்தினுல்தான் தடுக்கலாம்

தாற்காலிகமான குணத்தை சீக்கிரத்தில்க் கொடுக்கும் மருந்துகள் கடைசியில் வியாதியை முற்றவைக்கின்றன. பலவருஷ அனுபவத்தைக் கொண்டு தயாரித்த "புரோஹித் ஸ்வாஸஹரி" தான் சாஸ்திரீக முறையில் கைகண்ட ஒளஷதமாக அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

புரோஹித் ஸ்வாஸஹாரி ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தை க்கறைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரைஈரல்கனே பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6. ரூ 10. பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்" விலாசத்திற் கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

மதருஸ் ஸ்டாகிஸ்டுகள் : (1) அப்பா & கோ, சைனு பஜார் (2) ஜெ. பலாபாய் & கோ, 260, சைனு பஜார் ரோட் (3) தாதா & கோ, நைநியப் பநாயக் கன் தெரு.

மதுரை ஸடாகிஸடு :
என். ஆர். ஸவாமி கெமிஸட்.

புரோஹித ஸ்வாஸஹாரி

★

னப் பிரயாணம் லடாக்கின் சரித்திரத்தில் ஒரு புதிய மாறுதலாகும். இந்திய ராணுவம் வெற்றி பெற வேண்டும் என்று பௌத்த சந்யாசிகள் மூன்று நாட்களாக இடைவிடாமல் பிரார்த்தனை செய்ததாகவும், மூன்றாவது நாள் இந்த விமானம் வந்திறங்கியதாகவும், லடாக் மக்கள் இந்தியாவிலிருந்து வந்த "சிறகு முளைத்த குதிரை"க்குக் கொள்ளும் புல்லும் கொடுக்க வந்ததாகவும் கூறப் படுகிறது.

அதன் பிறகு கூர்க்கப் படைகளும் இந்தியாவிலிருந்து அனுப்பப் பட்டன. அதற்கு தலைவராக மேஜர் ஹரிசந்த் சென்றார். பாதுகாப்பு ராணுவம் போதிய அளவு விஸ்தரிக்கப் பட்டதும் எதிரியின் தாக்குதலை முறியடித்துத் துரத்தத் தொடங்கினார்கள்.

1949, ஜனவரி முதல் தேதி யுத்த நிறுத்த நாள். அன்றைய தினத்தில் லடாக் மாகாணத்தின் லடாக் தாசில் நம் துருப்புகளின் கீழ் இருந்தது. இந்த லடாக் தாசிலின் விஸ்தீரணத்தையும் ஜனத்தொகையையுமே ஆரம்பத்தில் கொடுத்திருக்கிறோம். அத்துடன் கார்கில் தாசிலும் நம்வசமே இருக்கிறது. அதன் ஜனத்தொகை சுமார் 53 ஆயிரம் பேர். எதிரிகள் வசம் ஸ்கார்து தாசில் உள்ளது—அதன் ஜனத்தொகை சுமார் ஒரு லட்சம்; விஸ்தீரணம் 8522 சதுர மைல்.

நம் பிரதம மந்திரி பண்டிதநேரு ஜூலை 4-லிருந்து 8 முடிய லடாக்கில் சென்று தங்கியிருந்தார். ஷேக் அப்துல்லாவும் உடன் சென்றிருந்தார். அப்போது பண்டித நேரு லடாக் மக்களுக்குக் கூறிய சில மொழிகளாவன:

"இந்திய ராணுவம், லடாக்கில் அபாய நிலை நீங்கும் வரையில் தான் இருக்கும். நீங்களும், ஜம்மு, காஷ்மீர் நாட்டினரும் விரும்பும் வரையில்தான் அது இங்கு இருக்கும்......பழையபடியும் எதிரிகள் இங்கு வரத்தொடங்கினால் அவர்களை விரட்டியடிக்கத் தயாராக இருக்கவேண்டியது நம் கடமையாகும்.

"நீங்கள் வறுமையினால் கஷ்டப்படுகிறீர்கள். ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள், குடிசைத் தொழில்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் முதலியவை உங்களுடைய அவசரத் தேவைகள்.

"நாம் மக்கள் ராஜ்யத்தையே நம் லட்சியமாகக் கொண்டிருக்கிறோம். சிலர் கூடி ஒரு நாட்டை ஆட்சி செய்வதையோ, மக்களின் நலனைப் பறித்து, அந்த சில மக்கள் லாபம் அடைவதையோ நாம் விரும்பவில்லை."

*

அந்தர நடனம்

என்ட்ரெசாட்—டிக்ஸ்—என்பவர் நாட்டியமாடும் போது, தரையிலிருந்து மேலே எழும்பிக் குதித்துப் பழையபடியும் தரையைத் தொடுவதற்கு முன், பத்துவிதமான அமைப்புகளில் தம் பாதங்களை மாற்றிக் கட்டுவார். இதேமாதிரி ஒரே முறை செய்து காட்டிய மற்றொரு ஆள் நிஜின்ஸ்கி.

கம்பவர்மன் என்னும் பெயர்கொண்ட அரசனின் வரலாற்றைப் பற்றிய ஆராய்ச்சி இது. இது சம்பந்தமாக மேலும் சில விபரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

கம்பவர்மன்

தி. நா. சுப்பிரமணியன்

கம்பவர்மன், விஜய கம்பவர்மன், விஜய கம்ப விக்கிரம வர்மன் என்ற பெயர்களைக்கொண்ட அரசன் ஒருவனுடைய கல்வெட்டுக்கள் சுமார் முப்பத்தைந்து வரையில் இதுகாறும் கிடைத்துள்ளன. அந்தக் கல்வெட்டுக்கள் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு ஜில்லாக்களிலேதான் கிடைக்கின்றன. அன்றி, செங்கற்பட்டு ஜில்லாவையொட்டி, தென் ஆர்க்காடு ஜில்லாவில் உள்ள ஒலக்கூரிலும், வடக்கே நெல்லூர் ஜில்லாவில் கூடூர் தாலுகாவில் உள்ள மல்லம் என்னும் ஊரிலும் கிடைத்துள்ளன. இவ்விதம் கம்பவர்மன் கல்வெட்டுக்கள் காஞ்சீபுரத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்திலேதான் காணப்படுகின்றன.

இந்தக் கல்வெட்டுக்கள் அவன் ஆட்சியின் 2-ஆம் ஆண்டிலிருந்து 32-ஆம் ஆண்டு வரையில் உள்ள காலத்தில் பொறிக்கப்பட்டவை. அவை ஆட்சியின் ஆண்டைக் குறிக்கின்றனவே யன்றி, சக வருஷம் போன்ற வேறு எந்த ஆண்டையும் குறிப்பிடவில்லை. அன்றி, கல்வெட்டின் காலத்தை நிச்சயமாகக் கணிக்கக்கூடிய ஜோதிஷக் குறிப்புகள் எதும் காணப்படவில்லை. இதனால் அம் மன்னன் ஆட்சி செய்த காலத்தை இது வரையில் யாரும் சரியாக நிர்ணயிக்க வில்லை.

அவனைப் பல்லவன் என்றே ஆராய்ச்சியாளர்கள் கருதி வருகிறார்கள். ஆயினும் அவ்விதம் திட்டமாகக் கூறுவதற்கு ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை. அவன் எந்த வமிசத்தைச் சேர்ந்தவன் என்பதைப் பற்றிய குறிப்பு ஒன்றுமே அவன் கல்வெட்டுக்களில் காணவில்லை.

அவனுடைய கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவையென ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அந்தக் காலத்திலே தொண்டை நாடு இருந்த நிலையையும், அந்தப் பிரதேசத்திலே காணப்படும் கல்வெட்டுகளையும் கவனிக்கும்போது அவன் பல்லவனாகவே இருத்தல் வேண்டும் என்று நினைக்க வேண்டி யிருக்கிறது.

அந்தக் காலத்திலே அப்பகுதியில் இருந்த கங்கர், பாணர், வைதும்பர் முதலிய குறுநில மன்னர் வமிசங்களில் எதையும் கம்பவர்மன் சேர்ந்தவனாகத் தெரியவில்லை. அன்றி, அவன் கல்வெட்டுகள் கிடைக்கும் பிரதேசமான, காஞ்சீபுரத்தைச் சுற்றியுள்ள பகுதியை வேறு சிற்றரச பரம்பரையினர் யாரும் ஆண்டதாகவும் தெரியவில்லை.

வட ஆர்க்காடு ஜில்லா வேலூருக்குத் தெற்கே எட்டுமைல் தூரத்தில் உள்ள சோழ புரத்தில் இடிந்து கிடக்

கும் ஈசுவரன் கோவிலில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு ஒன்று அதை 'நந்திகம்பீசுவரம்' என்று குறிக் கிறது.* அன்றி அதே ஜில்லாவில் பள்ளி கொண்டா என்னும் இடத்தில் கிடைக்கும் ஒரு கல்வெட்டில் அவ் ஆருக்கு நந்திகம்ப சதுர்வேதி மங்க லம் என்ற பெயர் காணப்படுகிறது.‡ இதனால் கம்பவர்மனே நந்திவர்மன் மகன் என்றும், அந் நந்திவர்மன் அதே பெயர் கொண்ட பல்லவ மன்னனே ஆவான் என்றும் ஆசிரி யர்கள் கருதுகிறார்கள்.

பல்லவர்களிலே, கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் 730-ஆம் ஆண்டுக்குச் சிறிது பிறகு, சிங்கா தனம் ஏறிய பல்லவ மல்லனான நந்தி வர்மன் காலத்திலிருந்து அவர்கள் வமிசாவளி தொடர்ச்சியாகத் தெரி கிறது. பல்லவ மல்லனுக்குப் பிறகு தந்தி வர்மனும், அவனுக்குப் பின் தந்தி வர்மன் மகனான நந்தி வர்மனும், அந்த நந்திக்குப் பிறகு அவன் மகனான நிருபதுங்கவர்மனும் ஆண்டிருக்கிறார்கள். நிருபதுங்க னுடைய ஆட்சியின் கடைசிக்காலத் திலேதான் சோழர்கள் தலைக்கிளம் பித் தொண்டை நாட்டைக் கைப் பற்ற முயன்றனர். நிருபதுங்கனுக் குப் பின் அரசு செலுத்திய அபராஜித வர்மன் காலத்திலேதான், அவனிட மிருந்து சோழ அரசனான ஆதித்தன் தொண்டை நாட்டைக் கைப்பற்றி அந் நாட்டிலே சோழர் ஆட்சியை நிறுவியது. இதனால் அவன் தொண்டை நாடு பாவின சோழன் என்னும் பெயர் பெற்றான். இந்த வெற்றி, திருவாலங்காட்டுச் செப் பேடுகளிலும் குறிக்கப்பட்டுள்ளது.¶

சோழர்கள் தொண்டை நாட்டைக் கைப்பற்றிய பிறகு அங்கே கம்பவர் மன் ஆட்சி செய்திருக்க முடியாது என்று நினைத்த ஆராய்ச்சியாளர்கள், அந்த வெற்றிக்கு முன்னதாகவும் அவன் ஆட்சிக்கு இடம் கிடைக் காமையால் வேறு வழிகளைக் கை யாண்டனர். 'நந்தி கம்பன்' என்ற அவன் பெயரிலிருந்து அவனை நந்தி வர்மன் மகனாகக் கருதி டாக்டர் ஹூல்ஷ் என்பார் அவனை நிருபதுங்க வர்மனுடைய சகோதரனாகக் கொண் டார்.§ கம்பவர்மனும் நிருபதுங்க னும் ஒருவனே என்று கருதினார் து. அ. கோபிநாத ராயர்.+ உத்திர மேரூரில் கிடைக்கும் கம்பவர்ம னுடைய 15-ஆம் ஆண்டுக் கல்வெட் டில்○ காணப்படும் நிவந்தங்களை அளித்தவன் பெயர் 'பெருமானடி கள் அடியானான செய்ய அபராஜிதன்' என்று காணப்படுகிறது. அதனால் கம்பவர்மனும் அபராஜிதனும் சம காலத்தில் ஆண்டவர்கள் என்று ஓர் ஆசிரியர் கருதுகிறார்.† மற்றும் ஒருவர் இவனை நிருபதுங்கன் காலத் திலோ அபராஜிதன் காலத்திலோ அல்லது இருவர் காலத்திலுமோ

---

* எபிகிராபியா இந்திகா, வால்யூம் 7, பக்கம் 196.

‡ 1925-ஆம் வருஷத்து 469-ஆம் நெ. கல்வெட்டு.

¶ தென்னிந்திய சாஸனங்கள். வால்யூம் 2.

§ எபிகிராபியா இந்திகா, வால்யூம் 7. பக்கம் 196.

+ மதராஸ் கிறிஸ்தவக் கல்லூரி மாகஸைன்: 1907-எப்ரல் மாத இதழில் வெளிவந்த 'பல்லவரும் கங்கப பல்லவரும்' என்ற கட்டுரை.

○ தென்னிந்திய சாஸனங்கள். வால்யூம் 6. சாஸநம். 325.

† **Proceedings of the Indian History Congress, Ninth session, Annamalainagar.** 1945, பக்கம் 400.

அவர்களுடன் சேர்ந்து தனியாகச் செலுத்தியவனாகவே கொண்டார்.*

எனினும் இவன் காலத்தை ஓர் அளவு நிச்சயமாகக் கூறுவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

மதுராந்தக உத்தம சோழன் காலத்தில் கொடுக்கப்பட்ட தானத்தைத் தெரிவிக்கும் (மதராஸ் மியூஸியம்) சென்னைக் கண்காட்சி சாலைச் செப்பேடுகளில் கம்பவர்மனைப் பற்றிக் குறிக்கப்பட்டிருக்கிறது. பரகேசரி மதுராந்தக சோழனுடைய பதினாறும் ஆண்டில், அதாவது கி. பி. 984-5-ஆம் வருஷத்தில் வழங்கப்பட்ட அச் செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ள நிவந்தங்களை ஏற்படுத்துவதற்கு அடியிற்கண்ட வகையில் பொன் பெறப்பட்டதாக அந்தச் சாஸனம் கூறுகிறது.‡

(1) 'சிலாலேகைப்படி கோப்பரகேசரி வர்மற்கு யாண்டு இருபத்திரண்டாவது கூரத்து சபையாரும் அரியற் பெரும் பாக்கத்து ஸபையாரும் கொண்ட பொன்.'

(2) [அதே வருஷம்] 'உறையூர் ஸபையார் சிலாலேகைப்படி கொண்ட பொன்.'

(3) 'கோவிசைய கம்ப பர்மற்கு யாண்டு ஒன்பதாவது ஒழுக்கைப் பாக்கத்து ஸபையார் சிலாலேகைப் படிக் கொண்டு கடவ பொன்.'

இதனால் கம்பவர்மனுடைய ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டு கி. பி. 984-5க்கு முற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

மேலே கண்ட சாஸனத்திற் கொடுக்கப்படும் பழைய நிவந்தங்களைக் குறிக்கும் சிலாலேகைகள் கால முறைப்படி கொடுக்கப்பட்டிருக்குமானால், கம்பவர்மன் காலத்தை இன்னும் ஓர் அளவு நிச்சயமாக நிர்த்தாரணம் செய்யமுடியும். கூரம், உறையூர் சிலாலேகைகளில் குறிப்பிட்டுள்ள பரகேசரி வர்மனுடைய இருபத்திரண்டாம் ஆண்டு, முதற் பாரந்தக சோழனுடைய ஆட்சிக்காலத்தியது ஆகும். முதற் பாரந்தகன் கி. பி. 907-ல் சோழ சிங்காதனம் ஏறியவன். அதனால் அவனுடைய இருபத்திரண்டாம் ஆண்டு, 928-9-ஆம் ஆண்டு ஆகும். இவ்விதமானால் கம்பவர்மனுடைய ஆட்சியின் 9-ம் ஆண்டு, 928-க்கும் 985-க்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இந்த இடை வெளியை இன்னும் நெருக்கிவிட முடியும்.

சோழபுரத்தில் கிடைக்கும் கல்வெட்டு ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

"கோவிசைய கம்பர்க்கு யாண்டு எட்டாவது ப்ரிதிவிகங் (க) ரையர் அதிதராயின பிற்பாடு தத் புத்ர ராஜாதித்யன் மகாதேவன் பரங்ரிபதி மகுட கட்டித சரணன் தகப்பனாரைப் பள்ளிபடுத்த விடத்து ஈச்வராலயமும் அதிய்தகாமும் எடுப்பித்து கண்டு செவ்வித்தான்."¶

அதே சாஸனத்தின் ஆரம்பத்தில் மூன்று வடமொழி சுலோகங்கள் உள்ளன. சாஸனம் மிகவும் சிதிலமாக இருக்கிறது. பின் இரண்டு சுலோகங்களும் பூர்த்தியாக இல்லை. எனினும், இருப்பதைக்கொண்டு ஓர் அளவு நிச்சயிக்க முடிகிறது. கல்வெட்டின் தமிழ்ப் பகுதியில் காணப்படும் பிரிதிவிகங்கரையர், அவர் மகன் ராஜாதித்யன் ஆகியவர்களைப் புகழ்ந்து கூறுவதாகக் காணப்படுகிறது. முதல் சுலோகத்தின் கடைசியிலே அத்திவர்மா என்ற பெயர்

---

* எபிகிராபியா இந்திகா, வால்யூம் 20, பக்கங்கள் 48-9.

‡ தென்னிந்திய சாஸனங்கள். வால்யூம் 3. பக்கம் 279. வரிகள் 28-36.

¶ எபிகிராபியா இந்திகா, வால்யூம்7. பக்கம் 193.

காணப்படுகிறது. அது பிரிதிவிகங் கரையருடைய பெயராகும்.*

இந்தக் கல்வெட்டில் குறிக்கப்படும் அத்திவர்ம பிரிதிவிகங்கரையர் மகனுன ராஜாதித்ய மகாதேவன் பெயரில் உள்ள ராஜாதித்யன் என்னும் பகுதி, சோழ மன்னனுன ராஜாதித்யன் பெயரையே நமக்கு நினைப்பூட்டுகிறது. பேரரசர் பெயரைச் சிற்றரசர்கள் தாங்கும் வழக்கம் அந்நாளில் மிகுதியும் இருந்து வந்ததென்பதை நாம் அறிவோம். திருநாம நல்லூரில் கிடைக்கும் முதற் பராந்தக சோழனுடைய 39-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று "பிள்ளையார் ராஜாதித்த தேவர் தேவியார் இலாடராயர் மகளார் மகாதேவடிகள் தமையனுர் அரையர் ராஜாதித்தன் புகழ்விப்பவர் கண்டனை"க் குறிக்கிறது.† அந்த லாட ராஜாதித்தன், சோழ ராஜாதித்தனுடைய மைத்துனனும் சிற்றரசனும் ஆவான். அதேபோல, கங்கனுன பிரிதிவிகங்கரையனும் தன் மகனுக்குச் சோழ அரசனுன ராஜாதித்தன் பெயரையே இட்டிருத்தல் வேண்டும் என்பது விளங்கும்.

அதே சோழபுரத்தில் மற்றொரு கல்வெட்டு இருக்கிறது. அது கி. பி. 949-ல் சோழ அரசனுன ராஜாதித்தனை ராஷ்டிரகூட மன்னன் கன்னர தேவனுன மூன்றும் கிருஷ்ணன் தக்கோலத்தில் நடந்த போரில் வெற்றி கொண்ட செய்தியைக் குறிக்கிறது.

"ஸ்வஸ்திஸ்ரீ. யாண்டு இரண்டாவது. சக வர்ஷம் எண்ணூற்றெழுபத்தொன்று. சக்ரவர்த்தி கன்னர தேவ வல்லபன் ராஜாதித்தரை எறிந்து தொண்டை மண்டலம் புகுந்த வாண்டு பங்கள நாடுடைய வயிரி அடியான் மகனுர் அத்திமல்லராகிய கன்னரதேவ பிரிதிவிகங்கரையர்க்கு வாணகோவரையர் ஒற்றியூரடியான் மகளார் காமக்கனுரான கங்கமா தேவியர் வயிற்றுப் பிறந்து அருங்குன்றத்திற் ஸ்வர்க்கராயின கள்ளி நங்கையர்க்குக் கண்ட கள்ளி நங்கை குளம்."‡

கி. பி. 949-ல் தக்கோலத்தில் நடந்த சண்டையில்தான், மூன்றும் கிருஷ்ணன் படையில் சேர்ந்து போர் புரிந்த மேலைக்கங்க அரசனுன பூதுகனல் சோழ மன்னன் ராஜாதித்தன் உயிர் துறந்தான். இது பூதுகனுடைய ஆதகூர்க் கல்வெட்டால் விளங்குகிறது.§ அந்தச் சண்டையிலே பிரிதிவிகங்கரையரும் ராஷ்டிரகூட மன்னனுக்கு உதவியாக இருந்திருக்கிறுன்.

அத்திமல்லர் ஆகிய பிரிதிவிகங்கரையர் அதற்கு நான்கு வருஷங்களுக்குப் பிறகு உயிருடன் இருந்தான் என்பது அவ்வூரிலே கிடைக்கும் மற்றொரு கல்வெட்டால் விளங்குகிறது. அது, "ஸ்வஸ்திஸ்ரீ. சகர் யாண்டு......மூபத்தைந்தாவது ஸ்ரீ அத்திமல்லராகிய கன்னரதேவ பிரிதிவி கங்கரையர் கல்லெடுப்பூர் மஜ்ஜாதி ஆளாவிருக்க," அவர் அதிகாரி புத்தடிகள், அவ்வூர் விஷ்ணு கோவிலுக்கும் சிவன்கோவிலுக்கும் நிவர்

---

* மிகவும் சிதிலமாக உள்ள பகுதியிலே வரும் இந்தப் பெயரை 'அத்விவர்ம' என்று டாக்டர் ஹுல்ஷ் வாசித்திருக்கிறுர். உண்மையில் அது 'அத்திவர்ம' என்பதேயாகும். அப்படியே எழுதப் பட்டிருக்கிறது.

† எபிகிராபியா இந்திகா. வால்யூம் 7. பக்கம், 134.

‡ எபிகிராபியா இந்திகா, வால்யூம்7. பக்கம் 195.

§ ஷை வால்யூம் 6, பக்கம் 56.; எபிகிராபியா கர்நாடிகா, வால்யூம் 3. மண்டயம் தாலூகாச் சாஸனம் 41.; 1910-11. வருஷத்து மைசூர் புதைபொருள் இலாகா அறிக்கை. 77-ஆம் பாரா.

தங்கள் ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது.*

இந்தக் கல்வெட்டுக்குரிய நிவந்தங்களுக்கு, "உடையார் ப்ரிதிவிகங்கரையர்க்கு விண்ணப்பஞ் செய்து அனுமதி பெற்றதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனால் கல்வெட்டின் காலமான கி. பி. 953-ல் அத்திமல்லனாகிய பிரிதிவிகங்கரையன் உயிருடன் இருந்திருக்கிறான். ஆயினும் அவன் கம்பவர்மனுடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டுக்குள் இறந்து போய்விட்டான். அது நீண்டகாலம் தள்ளியும் இருத்தற்கில்லை. ஏனெனில், கி. பி. 953-ல் பிரிதிவிகங்கரையன் அனுமதி பெற்றுப் புத்தடிகள் தினம் விளக்கு எறிக்கவும், உழக்குத் தும்பைப் பூக் கொடுக்கவும் ஏற்பாடு செய்த சிவன் கோயிலின் பெயர் 'நந்தி கம்பேசுவரம்' என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அதற்குள்ளாகவே கம்பவர்மன் சிங்காதனம் ஏறியிருத்தல் வேண்டும். ஆகவே கம்பவர்மன் சிங்காதனம் ஏறியது கி. பி. 945-க்குப் பிறகு 953-க்குள் இருத்தல் வேண்டும்.‡

---

* எபிகிராபியா இந்திகா, வால்யூம். 7. பக்கம் 196.

‡ இந்தக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ள சோழபுரத்துக்கு எட்டு மைல் தூரத்தில் இருக்கும் திப்ப சமுத்திரத்தில் கம்பவர்மனுடைய பதினேழாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கிடைத்திருக்கிறது. (No. 174 of 1939·40) அதிலே பிரிதிவி கங்கரையரும் அவர் பிராட்டியார் இலாடப் பெருந்தேவியும் (பாலாறு) ஆற்றிலிருந்து வலிவலக்க மங்கலத்து ஏரிக்குத் தங்கள் குமாரத்தி அய்யக்குட்டியின் புண்ணியத்துக்காக 'விழுப்பேரரையன்' என்ற பெயரில் ஒரு கால்வாய் வெட்டிய செய்தி காணப்படுகிறது.

அந்தப் பிரதேசம் பங்கள நாட்டைச் சேர்ந்திருந்தது. பங்கள நாட்டு ராஜாதித்த மகாதேவன் மகனான பிரிதிவி கங்கரையனுடைய கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. (No. 177 of 1928. 139-1928) அவற்றுள் ஒன்றை மதுராந்தக உத்தம சோழன் காலத்தைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். இதனால் திப்ப சமுத்திரம் கல்வெட்டில் குறிக்கப்படும் பிரிதிவிகங்கரையர், ராஜாதித்தன் மகனே போலும். இங்ஙனமாயின், ராஜாதித்த மகாதேவன் நீண்ட காலம் அரசு புரியவில்லையென்றும், கம்பவர்மனுடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில் தன் தந்தைக்குப் பள்ளி படைஎடுத்த அவன், அவ்வாட்சியின் பதினேழாம் ஆண்டுக்குள் இறந்து விட்டான் என்றும் எண்ண வேண்டியிருக்கிறது.

❋

நம்பிக்கை வேண்டும்

சுதந்திரத்தின் மூன்றாவது வருஷம் தொடங்குகிறது. முதலில், சகோதர சகோதரிகளான உங்கள் அனைவர் சார்பிலும் பாபுஜிக்கு வணக்கம் செலுத்துகிறேன். அவருடைய ஆன்மா என்றும் நம்மை கவனித்து வருமாக.........

இயற்கை வளங்கள், வாழ்க்கை வசதிகள் — இந்த விஷயத்தில் இதர நாடுகள் பலவற்றிலுள்ள மக்களைக் காட்டிலும் நாம் எவ்வளவோ அதிர்ஷ்டசாலிகள் என்பதை மக்கள் உணருவதல்லை. நம் நாட்டு மக்கள் உலகத்தின் மற்றப் பகுதிகளிலுள்ளவர்களைக் காட்டிலும் நாணயத்தில் குறைந்தவர்களல்லர். மனஞ்சோர்ந்து போவதிலும், காரணமின்றி நம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்வதிலும் ஒரு பயனுமில்லை. நம்பிக்கை தான் சாதனைக்கு அடிப்படை.

—ராஜாஜி

ஆசிய நாடு பல தேசங்களையும் தேசிய இனங்களையும் கொண்ட ஒரு பெரிய கண்டம். நமது தாயகமான இந்தக் கண்டத்திலுள்ள பல்வேறு நாடுகளைப்பற்றியும் சக்தியில் தொடர்ந்து வெளிவரும். அகர வரிசைப்படி, இந்த இதழில் அஸர்பைஜன் நாட்டை அறிமுகப்படுத்துகிறோம்.

அஸர்பைஜன்

○

விஸ்தீரணம்: 33,000 சதுர மைல்கள்.

ஜனத்தொகை: சுமார் முப்பது லட்சம்:

தலைநகரம்: பாக்கூ

காகஸஸ் பிரதேசத்திலேயே மிகவும் செல்வச் செழிப்புள்ள நாடு இது தான். இதனுடைய சரித்திரம் ஆயிரம் வருஷ காலமாக பெரும் புயலாகவே இருந்து வந்தது. கிரேக்கர், ரோமானியர், பாரசீகர், அரேபியர், மங்கோலியர், ஸெல்ஜுக் துருக்கியர்—முதலியவர்கள் எத்தனையோ தடவைகள் இந்நாட்டின் மீது படையெடுத்தார்கள். துருக்கியர்கள் 13-ம் நூற்றுண்டில் இந்நாட்டைத் தங்கள் குடியேற்ற நாடாக ஆக்கி விட்டார்கள். இப்போதும் ஜனத்தொகையில் பெரும் பான்மையாக இருப்பவர்கள் அவர்கள்தான்.

1920-ம் வருஷத்தில் ட்ரான்ஸ்—காகேஷிய குடியரசில் அஸர்பைஜன் அங்கம் வகித்து வந்தது. அப்புறம் அந்தக் குடியரசு கலைக்கப்பட்ட பின் சோவியத் ருஷ்யாவில் இன்று சுய நிர்ணய உரிமையுள்ள அரசாங்கமாக அங்கம் வகிக்கிறது. இது அளவில் மிகவும் சிறிய நாடாக இருந்த போதிலும் சோவியத் யூனியனில் உள்ள மிக முக்கியமான நாடுகளில் ஒன்றாகும். ஏனென்றால் இது எண்ணெய் கிடைக்கும் பிரதானமான கேந்திரஸ்தானமாக இருப்பதுடன், ருஷ்யாவில், அதிகப் பருத்தி உற்பத்தி செய்வதில் இரண்டாவது ஸ்தானத்தையும் வகிக்கிறது. இந்நாட்டின் தலை நகரான பாக்கூ சோவியத் யூனியனின் பெரிய நகரங்களில் மூன்றாவது பெரிய நகரமாக இருக்கிறது.

இந்நாட்டில் நூற்றுக்கு எழுபது பேர் படித்தவர்கள். இந்நாட்டின் சர்வகலாசாலையில் 1946-ம் வருஷத்தில் 5000 பட்டதாரிகள் படிப்பை முடித்து வெளியே வந்திருக்கிறார்கள்.

1945-ம் வருஷத்தில் சோவியத் யூனியனிலுள்ள சாஸ்திரக் கழகத்தின் கிளை ஒன்று அஸர்பைஜனில் திறக்கப்பட்டது. அஸர்பைஜன் சரித்திரம், அஸர்பைஜன் பாஷையின் அகராதி (பத்து வால்யூம்களில்), அஸர்பைஜன் இலக்கியத்தின் சரிதை (ஆறு வால்யூம்களில்) முதலிய வற்றைத் தொகுத்து வெளியிடும் காரியத்தை மேற்படி

கழகம் ஏற்கெனவே மேற்கொண்டு விட்டது. இந்த நாட்டின் எண்ணெய் உற்பத்திக்கு உதவும் முறையில்சில விஞ்ஞான நுணுக்கங்களைக் கண்டு பிடிப்பதற்கு இக்கழகத்தில் அங்கத்தினர் ஒருவருக்கு அரசாங்கப் பரிசுகள் இரண்டு வழங்கப் பட்டுள்ளன. ஒரு பெண் அங்கத்தினர் கண் வைத்திய சாஸ்திரத்தில் மிகவும் பிரபலம் பெற்றிருக்கிறார்.

அஸர்பைஜன் ஆயிரம் வருஷ காலமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறது. 800 வருஷங்களுக்கு முன் இந்நாட்டில் கன்ஜா (இப்போது கிரோவாபாத் என்று அழைக்கப் படுகிறது) என்ற ஊரில் பிறந்த நைஜாமி என்ற கவிஞர் பாரசீக பாஷையில் எழுதிய "கன்ஜீனு—இ—அஸ்ரார்" என்ற கவிதைநூல் ருஷ்ய பாஷையில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. இந் நாட்டில் 18-ம் நூற்றுண்டில் பிறந்த புரட்சிக் கவியும் நாடகக் கவியுமாகிய வாஜிப் என்பவர் அஸர்பைஜன் தேசத்து 'பைரன்' என்று அழைக்கப் படுகிறார். இவருக்குப் பின் 19-வது நூற்றுண்டில் பிறந்த 'இல்யா எல்வின் அகுண்டோவ்' என்ற நாடகக் கவி, காகஸஸின் 'மோலியர்' என்று சிறப்பித்து அழைக்கப் படுகிறார். நவீன எழுத்தாளர்களில் ஸாமத்வார்கான் என்பவரும் ஜாபர் ஜப்பர்லீ என்பவரும் பிரசித்தமானவர்கள்.

அஸர்பைஜனில் சுமார் 100 துருக்கிப் பாஷைப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இங்கு துருக்கிய, ஆர்மீனிய, ருஷ்ய நாடகங்களும், சினிமாக்களும் ஏராளமாக நடக்கின்றன.

இப்போது பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டுப் பல பெரிய பெரிய திட்டங்களெல்லாம் தயாரித் திருக்கிறார்கள். புதிய மின்சார நிலையம் ஒன்றை (பாக்கூவுக்கு அருகிலுள்ள) மிங்கச் சாவரில் நிருமிக்கும்திட்டமும், மற்றும் எண்ணெய் சம்பந்தமான திட்டமும், மலேரியா பரவியுள்ள குரா—ஆரக் பிரதேசங்களை நோயில்லாத பிரதேசங்களாக ஆக்கும் திட்டமும் இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவும் எனத் தோன்றுகிறது.

*

காரணம்

ஆண்களைப்போலப் பெண்கள் பெரிய பெரிய வெற்றிகளை அடையாதிருப்பதற்குக் காரணம், பெண்களுக்கு மனைவிமார் இல்லாததுதான். விஞ்ஞானமோ, பொருளாதாரமோ இயற்கையின் இந்தத் தவறைத் திருத்தும் காலம் வரும்வரையில், பெண்களாகிய நாம், ஆண்களுக்குத் தாழ்ந்தவர்களாகவே இருப்போம்.

—ஸ்ரீமதி மார்ஜொரி நிக்கல்ஸன்

கடவுளின் சிருஷ்டி அழகு !

கடவுள் சிருஷ்டித்தது போலவே ஒவ்வொருவனும் இருக்கிறான்; சில சமயங்களில் அதைவிட மோசமாகவும் இருக்கிறான்.

—செர்வாண்ட்டீஸ்.

தமிழ்ச் செல்வம்

✻

	ரூ. அ.
முல்லைக் கொடியாள் 'விந்தன்'	3-0
ஒரே உரிமை 'விந்தன்'	அச்சில்
இளவேனில் 'சோமு'	2-0
தமிழ்க்குமரி பாடல்கள் ச. து. சு. யோகியார்	2-8
ரஸிகமணி டி. கே. சி பாஸ்கரத் தொண்டைமான்	2-0
கீதாஞ்சலி தாகூர்	2-8
கனி கொய்தல் தாகூர்	2-8
உலக அரங்கு புதுமைப் பித்தன்	1-8
காதற் கோயில் M. S. கமலா	2-0
நான்கு கவிமணிகள் VRM. செட்டியார்	1-4
தாகூரின் கவிதைக்கனி	0-10
என் வாழ்வும் பணியும் விவேகானந்தர்	0-12

✻

ஸ்டார் பிரசுரம்

பெரியதெரு * சென்னை 5

Neepa HAIR OIL

"நீபா"

கூந்தல்தைலத்தின் பரிசுத்தமான இனிய பரிமளம் உங்கள் மேன்மையான மனப்பாங்கிற்கு பொருத்தமாக அமைந்திருக்கிறது!

GANGA WORKS ADYAR MADRAS 20

கங்கா ஒர்க்ஸ்

அடையாறு

மதராஸ் 20

ஜெய் ஹிந்த்!

பாரத தேச சுதந்திர இரண்டாவது வருஷ சமயத்தில் எங்கள் வாடிக்கைகாரர்களுக்கும் எங்கள் நன்மையை கோருகிறவர்களுக்கும் எங்கள் வந்தனம்

உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ்,

ஸ்தாபிதம் : 1941 தந்தி விலாஸம் : "UMA"

உமா மஹால் :: மசூலிப்பட்டணம்

உமா கோல்டு கவரிங் போஸ்டாபீஸ்

சுதந்திர பாரத தேசத்தில் 1941 முதல் இன்றையவரைக்கும் பாரத தேச ஆசீர்வாதத்தினால் தேச சேவை செய்து எங்கள் வியாபாரம் ஜெயமாய் நடந்துவருகிறபடியால். இந்த சுதந்திர சுப தினத்தில் எங்களால் தயார் செய்யப்பட்ட ஆனந்தமான 'உமா ஆபரணங்களை' உபயோகித்து ஆனந்தமடைய வேணும் என்பது எங்கள் கோரிக்கை.

உமா ஆபரணங்கள் 10 வருஷம் உத்திரவாதம்

அசல் தங்கத் தகட்டினால் லோகத்தின்மீது மூடப்பட்டு தயார் செய்தவை. பாரத தேசத்திலும் மற்ற இதர தேசங்களிலுமுள்ள இந்திய பிரமுகர்கள் அனேகஸெர்டிபிகேட்டுகள் கொடுத்துள்ளார்கள்.

உமா ஆபரணங்களை நைட்ரிக் ஆஸிட் என்கிற திராவகத்தில் போட்டால், 5 நிமிஷத்திற்குள் கவரிங் செய்த பொன் வரும். அப்படி தங்கம் சுற்றப்படவில்லை என்று நிருபிப்பவர்களுக்கு ரூபாய் 500 இனாம் கொடுக்கப்படும்.

நமது தொழிற்சாலையில் நவீன இயந்திரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. நல்ல கைதேர்ந்த வேலைக்காரர்களால் தயார் செய்யப்பட்டவை.

800 டிசைன் கொண்ட கேட்லாக் இனாம்.

ஆபரணங்கள் வி. பி. சார்ஜ் 15 அணா மாத்திரம்

இந்திய சர்க்கார் விளம்பர இலாகா அறிக்கையினுடைய சில பகுதிகளின் சாரம்.

கப்பல் போக்குவரத்து

o

பி. இ. பீ.

'மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்' என்று அன்று பாரதியார் கூறிய வாசகத்தை மெய்ப்பிக்க நம் இந்திய அரசாங்கம் பாடுபடுகிறது. கடந்த சில நூற்றாண்டுகளாக இந்திய கடற்கரை யோரத்தில் வாணிபம் செய்துவந்த இந்தியக் கப்பல்கள் இன்று உலகமெங்கும் சுற்றி வாணிபத்தை பெருக்கி வருகின்றன.

இந்திய சர்க்காரே கப்பல் போக்குவரத்தில் அதிக கவனம் செலுத்துகிறது. சமீபத்தில் இந்திய சர்க்கார் இரண்டு பெரிய வியாபாரக் கப்பல்களை வாங்கி இருக்கிறது. அந்த இரண்டு கப்பல்களுக்கும் முறையே எஸ். எஸ். மேற்கு வங்காளம், எஸ். எஸ். பம்பாய் என்று பெயரிட்டிருக்கிறது. அவை இப்பொழுது இந்திய ஆஸ்திரேலியக் கடல் மார்க்கத்தில் வாணிபம் செய்கின்றன.

தூத்துக்குடி—கொழும்பு கடல் மார்க்கத்தில் போக்குவரவு நடத்தி வரும் இந்தியக் கம்பெனிக்கு அரசாங்கம் ஆதரவு அளித்தது.

இதுவரையில் கப்பல் போக்குவரத்தை மேற்பார்வை யிடும் பொறுப்பு பல ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட் டிருந்தது. இனிமேல் இதைக் கவனிக்க மத்திய அரசாங்க வர்த்தக மந்திரி காரியாலயத்தில் கப்பல் போக்குவரத்து டைரக்டர் ஜெனரல் ஒருவர்நியமிக்கப்படுவாராம்.

இந்தியக் கப்பல்களின் மூலம் வியாபாரப் பொருள்களை அனுப்புவதால், நம்முடைய கப்பல் போக்குவரத்தை ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல் அன்னிய டாலரையும் மிச்சப்படுத்தலாம்.

அன்னிய நாடுகளுக்கு சரக்குகள் ஏற்றிச் செல்லும் கப்பல்களே அன்றி கடலோர வாணிபத்துக்கு வேண்டிய சிறிய கப்பல்களை வாங்கவும் இந்திய அரசாங்கம் யோசித்து வருகிறது. கடலோர அண்டை நாட்டு வாணிபத்தில் பாய்மரக் கப்பல்கள் பெரிதும் உதவி புரிகின்றன. இந்தப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்ய சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

கப்பல் போக்குவரத்து அதிகமானல் கப்பல் அதிகாரிகளும் சிப்பந்திகளும் அதிகமாக தேவைப் படுவார்கள். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அரசாங்கம் பயிற்சி சாலைகளைச் சீர்திருத்தி யிருக்கின்றது. முன் இருந்ததைவிடப் பயிற்சி பெறும் இளைஞர்கள் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

கப்பல் சிப்பந்திகள் க்ஷேம அபிவிருத்திக்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட் டிருக்கின்றன. துறைமுக நகரங்களில் கப்பல் சிப்பந்திகளுக்கு என விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. தற்சமயம் இருப்பவையே அல்லாமல் புதுப்புது கட்டடங்கள் கட்டவும் திட்டமிட்டிருக்கிறது அரசாங்கம்.

"நமக்கு இன்று ஏழணுத்தான் முக்கியம். அதை ஒருவன் சுரண்டுவதைத் தெரிந்தும், மனமறிந்து விட்டுவிடக் கூடாது தான்."

ஏ ழ ணு

○

'துருவன்'

கோட்டை ஸ்டேஷனில் புளிச் சிப்பம் போல் அடைந்திருந்த கூட்டத்திலிருந்து பிதுக்கி வெளித் தள்ளப்பட்டான் அவன்.

உடலிலே 'சதசத' வென்ற வியர்வை. அதேபோல் மனசிலும் புழுக்கம். மாதக் கடைசியாதலால் உடற்புழுக்கத்தை விட மனப்புழுக் கம் அதிகம்.

நெற்றியில் அரும்பி முகத்திலே வழிந்து கொண்டிருந்த வேர்வை யைத் தனது அழுக்குக் கைகுட்டை யால் துடைத்தவாறு 'ஒவர்பிரிட் ஜில்' ஏறி இறங்கினுன். ஆபீஸ் நண்பருக்குக் கொடுக்க வேண்டிய கைமாற்று, குழந்தைக்கு வாங்க வேண்டிய ஆரஞ்சு, வீட்டுவாடகை, பல சரக்குச் சாமான் ஆகியவற்றில் மனம் உழன்று கொண்டிருந்தது. எண்ணற்ற கவலைகள் மனதைச் சரக்கூடம் போட்டு வளைக்க அவற்றி லிருந்து மீளும் வழியைப் பற்றிச் சிந்தித்து விடைகாண முடியாமல், இயந்திரம்போல் பிளாட்பாரத்தில் அடியெடுத்து வைத்தான் அவன்.

ஆனுல் அவனை முன்னேற வொட் டாமல் கண்ணை இழுத்து நிறுத்தியது அக் காட்சி.

பிளாட்பாரத்திலே ஒரு சிறு கும்பல். அதிலே ஒரு ரிக்ஷாக்காரன் தனது 'சவாரி' யான ஒரு கனவா னின் சட்டையைப் பிடித்து இழுத்து நிறுத்தி இரைச்சல் போட்டுக்கொண் டிருந்தான்.

803 நிர். 'கிளாஸ்கோ' மல் ஜிப்பா, ஜரிகை அங்க வஸ்திரம், கையிலே 'இந்து'ப் பத்திரிகை ஆகிய தளவாடங்களுடன் காட்சியளித்த அந்தக் கனவானும் ஏதோ திட்டிக் கொண்டிருந்தார்.

"பிரபாத்திலிருந்து வரேன் சாமி. நாலணுப் பேசிகினு மூன்றரையணுத் தான் தருவேன்கிருரு" என்ருன் ரிக்ஷா வாலா.

"டேய்! உன்னிடம் மூன்றரை யணுத்தானே பேசினேன்? ஏன் பொய் சொல்றே?" என்ருர் கனவான்.

"என்னய்யா! வண்டியிலே ஏறி உட்கார்ந்துகினே, 'வேகமாய் போடா' என்று முதுகிலே காலே வைத்து மிதிச்சே! இப்போ அரை யணுக் கேட்டால்..." என்று கண் களில் கோபம் தெறிக்க அவர் சட்டையைப் பிடித்து உலுக்கினுன் அவன்.

இச்சமயத்தில் கூட்டத்திலிருந்த ஒருவர் தலையிட்டார்.

"அரையணுவைப் பார்க்காதீர்கள் ஸார்! வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்திருக்கிருன்...பாவம்!" என்ருர் அவர்.

"அதுக்கில்லே ஸார்! நான் பேசியது மூணரை அணாத்தான். அதற்கு மேல் எதற்கு கொடுக்கணும்?"

"ஒனக்காக எத்தினி வேகமாய் இஸ்துகினு வந்தேன் சாமி?" என்றான் ரிக்ஷாவாலா.

"கொடுங்கள் ஸார்! இதை வாங்கி அவன் சீமானாய்ப் போய் விடமாட்டான்!" என்றார் மத்தியஸ்தர்.

"சொன்னால் சொன்னதுதான்; மனுஷனுக்கு ஒரு 'பிரின்சிபிள்' வேண்டாம்?"

ரிக்ஷாக்காரன் விடவில்லை. அவரை வாயில்வந்தபடி திட்டினான். கனவானும் சளைக்கவில்லை ஆங்கிலத்திலும் தமிழிலுமாக ஏசினார். போலீஸ்காரனைக் கூப்பிடுவேன் என்றார். ரிக்ஷாவாலா 'வா போவோம்' என்றான். வாக்குவாதம் முற்றிவிட்டது.

கடைசியில்—

"இந்தாப்பா! அரையணா! நீ போ...நேரத்தை வீணாக்காதே! அவர் அரையணாவை மிச்சம் பிடித்து சீமானாகட்டும்!" என்று ரிக்ஷாவாலாவிடம் ஒரு அரையணாவை வீசி அவனை அனுப்பினான் ஒரு பஸ் கண்டக்டர்.

சீமானின் முகம் கறுத்தது. அவர் அரையணாவை மிச்சம் பிடித்ததால், நடையைக் கட்டினார்.

கும்பலுடன் இந்தக் காட்சியைப் பார்த்த அவனும் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு நடந்தான், சிறிது நேரத்திற்குள் அவன் வேலை பார்க்கும் பாங்கி வந்துவிடவே நத்தையைப் போல தனது சிந்தனைகளை உள்ளிழுத்துக் குறுக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

பத்திலிருந்து பன்னிரண்டு வரை பம்பரமாகச் சுழன்று வேலை பார்த்தான் அவன். 'பார்ட்டி'களிடமிருந்து (வாடிக்கைக்காரர்கள்) பணத்தை வாங்கி வரவு வைப்பதும், 'செக்'குகளுக்கும், டிராப்டுகளுக்கும் பணம் கொடுப்பதுமாக இரண்டு மணி நேரம் ஓடியது. அவனது மேஜைக்கு எதிரில் நின்ற கூட்டமும் கலைந்தது. தலையைத் தூக்கி தனது எதிரேயிருந்த கடிகாரத்தில் மணி பார்த்தான் அவன். சரியாக மணி பன்னிரண்டு. கத்தைகத்தையாக நோட்டுகளை எண்ணி விரல்கள் நோவெடுத்தன. அவைகளைச் 'சொடக்கு' முறித்துவிட்டான் அவன்.

நல்ல கடுமையான வெயில் வெளியே கொளுத்தியது. ஆபீசிலே மின்சார விசிறிகூட இல்லை. நெற்றியிலும் மோவாயிலும் துளிதுளியாக நிற்கும் வேர்வையைத் துடைத்தான். தாகம் நாக்கை வறட்டியது. 'ஒரு கப் காபி சாப்பிட்டால் தேவலை' என்ற நினைப்பு. ஆனால் பையிலே எட்டணாச் சில்லறைதான் கிடந்தது. அதிலே தனது நோஞ்சான் குழந்தைக்கு ஆரஞ்சு வாங்கவேண்டும்! ஆகவே 'தண்ணீர் சாப்பிடுவதே உத்தமம்' என நினைத்து பியூனைக் கூப்பிட்டான்.

"வீராசாமி!"

"ஸார்!" என்று குரல் கொடுத்தவாறு அவன் பாங்கி ஏஜண்டிற்குத் தான் வாங்கிவந்த, பாதாம்கீரைக் கொண்டு போனான்.

தனது வேர்வை நாற்றம் நிறைந்த கைக்குட்டையில் மீண்டும் வேர்வையைச் சேர்த்தான் அவன். கணக்குப் புஸ்தகங்களில் கொஞ்சம் உழுது தள்ளினான். "என்ன ஸார்!" என்று திரும்பி வந்தான் பியூன்.

"ஒரு கிளாஸ் குளிர்ந்த ஜலம் கொண்டுவா" என உத்திரவிட்டுப் பின்னும் பல 'செக்'குகளுக்குப் பணம் கொடுக்கலானான்.

பியூன் அவன் மேஜைமேல் ஒரு கிளாஸ் தண்ணீரை வைத்துவிட்டு,

"ஸார் உங்களை அக்கவுண்டெண்ட் கூப்பிடுகிறார்" என்றான்.

பணப்பெட்டியைப் பூட்டித் திறவு கோலை எடுத்துக்கொண்டு அக்கவுண்டெண்ட் முன்னால் போய் நின்றான் அவன்.

"மிஸ்டர் காஷியரே! நமது ஏஜண்டின் நண்பர் கங்காதரனிடமிருந்து போன் வந்தது. ஐம்பதினாயிரம்ரூபாய் வேண்டுமாம். அவரிடம் நம்பிக்கையான ஆள் ஒன்றும் இல்லையாம்; அவருக்கும் இங்கு வர முடியாதபடி வேலையாம். ஆகவே தொகையை எடுத்துப்போய் அவரிடம் கொடுத்துவிட்டு வந்துவிடுங்கள். கூட, வீராசாமியை அழைத்துப் போங்கள்...மிஸ்டர்! இருபதனாயிரத்துக்கு பத்து ரூபாய் நோட்டு வேண்டுமாம். ஆகவே முப்பதினாயிரம் நூறாகவும், இருபதினாயிரம் பத்தாகவும்......"

"வேலைக் கழுதை இல்லே!" என்று மனசுக்குள் முணுமுணுத்துக் கொண்டு, கிளம்பினான் அவன்.

"ஸார்! செலவுக்குக் காசு வாங்கிக் கொண்டீர்களா?" என்றான் வீராசாமி.

"நாம் செலவழித்து விட்டுக் கணக்கைச் சொன்னால் தந்து விடுவார்கள். வா போகலாம். முதலிலே ஆளுக்கொரு காபி சாப்பிடுவோம். துறைமுகம் வரை—ஒரு மைல்—போய் வரணுமே! வெயில் ஆளை வேக வைக்கிறது! காலுக்குச் செருப்புக் கூட இல்லை..."

"ரிக்ஷாவிலே போய் விடுவோம் சார்! பணம் ஜாஸ்தியாயிருக்குது... கல்கத்தாவிலே நடந்த மாதிரி..."

"அதெல்லாம் நம்மிடம் நடக்காது! வா! முதலில் 'காப்பித் தண்ணியை' உள்ளே தள்ளுவோம்... அப்புறம் டிராமிலே போவோம்"

"ஐயோ!"

"என்ன 'ஐயோ!' என்னிடம் ஏழணாத்தான் இருக்கு அப்பனே! டிராமிலே தான் நாம் போயாகணும்... மேலும் ரிக்ஷா சவாரி எனக்குப் பிடிக்காது ...வா ஜல்தி!"

"சீக்கிரம் போய் விட்டு இரண்டு மணிக்குள் திரும்பணும் சார்! ஏஜெண்டு வீட்டு அம்மா மூணு மணிக்கு அங்கே வரச்சொன்னாங்க"

இருவரும் காபி சாப்பிட்டுவிட்டு ராயபுரம் டிராமில்ஏறினார்கள், துறைமுகத்துக்குச் செல்ல.

கங்காதரனிடம் அவர்கள் பணத்தைக் கொடுத்து விட்டுத் திரும்பும் போது மணி ஒன்றிருக்கும். வெயில் மண்டையைப் பிளந்தது. கண்களை இருளச் செய்து மயக்கத்தில் ஆழ்த்தியது.

அவன் டிராமைப் பிடிக்க அவசர அவசரமாக ஓடினான். ரஸ்தாவிலே தார்இளகி நின்று சப்பாத்திக் கள்ளி போல் காலில் அப்பிக் கொண்டது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடும் டிராமில் தொத்திக் கொண்டனர் இருவரும்.

வெயிலின் கிறக்கத்தோடு பசியின் கிறக்கமும் அவனைப் பீடித்துக் கொண்டது. ஆனால் கடற்கரையிலிருந்து வீசிய மெல்லிய பூங்காற்று அவனுக்கு ஓர் இன்ப லாகிரியைத் தந்தது.

துறைமுகத்திலிருந்து பாரவண்டி இழுப்பவர்களின் முதுகிலே வழிந்தோடும் வேர்வை வெள்ளத்தையும் கடற்கரை ஸ்டேஷனிலிருந்து 'சவாரி' ஏற்றிக்கொண்டு இழுத்துச் செல்லும் ரிக்ஷாக் காரர்களையும், பெட்டி நிறைய சாப்பாட்டுப் பாத்திரங்களைச் சுமந்து முகத்திலே சுருக்கமும் உளத்திலே கவலையுமாகச் செல்லும் சோற்றுக் கூடைக்காரிகளையும், இம்பீரியல் பாங்கியின் எதிரே கார்களிலிருந்து இறங்கி வரும் துரைகளையும் சேட்டுகளையும் அவன் கண்கள் தாவித் தாவிப் பிடித்துக் கொண்டிருந்தன.

ஹைகோர்ட் வந்ததும் அதன் மேலிருக்கும் கலங்கரை விளக்கத்திற்கு அவன் மனம் ஒரு கணம்

தாவிச் சென்றது. அதன் மேலிருந்து சென்னை நகரத்தையும் நீலக்கடலையும் வட்டமிட்டு வட்டமிட்டு மீண்டும் அவனிடமே திரும்பி வந்தது...

பிராட்வேயில் இருவரும் இறங்கினார்கள்.

ஊனவும் பசியும் குழம்பிய நிலையிலே அவன் மீண்டும் உள்ளே நுழையும் போது மணி ஒன்றரை.

"பணத்தையெல்லாம் கொடுத்து விட்டீர்களா?" என்றார் அக்கவுண்டெண்ட்.

"ஆமாம்"

"வீராசாமி எங்கே?"

"பின்னால் வந்தானே?" என்று அவன் திரும்பு முன் பியூனும் ஏஜண்டு அறைக்குள் புகுந்து அவரிடம் சங்கதியைச் சொன்னான். அவர் அவனிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்.

அவன் தனது இடத்திற்குச் சென்று, 'துறைமுகம் போய் வர பிரயாணச் செலவு எழணு' என்று ஒரு 'வவுச்சர்' எழுதி ஏஜண்டிடம் அனுப்பினான். தான் நியாயமாக எழணாவைத் தன் கையிலிருந்து செலவழித்ததினாலும் பாங்கி விஷயத்திற்காக அல்லாமல் ஒரு தனி நபரின் சௌகரியத்திற்காகச் சென்று வந்ததினாலும் அவன் எழணா செலவெழுதத் தீர்மானித்தான்.

அவன் அனுப்பிய செலவுக் குறிப்பைக் கண்டதும் ஏஜண்டு அவனைக் கூப்பிட்டனுப்பினார்.

"என்ன ஐயா எழணாப் போட்டிருக்கிறீர்? டிராமிலே போய் வந்ததாக வீராசாமி, சொன்னானே?"

"ஆனால் எனக்கு செலவானது எழணா"

"அதெப்படி? இங்கிருந்து துறைமுகம் போய்வர ஆளுக்கு ஒன்றரையணாத்தானே?"

"ஐம்பதினாயிரம் கொண்டு போனேன். அதற்காக 'ரிக்ஷாச் செலவு' என்று எழணாப் போட்டிருக்கிறேன்"

"நீர் ரிக்ஷாவில் போகவில்லையே?"

"நான் அதில் ஏறுவதில்லை"

"அப்படியானால், டிராமுக்குள்ள சார்ஜ்தான் கொடுக்க முடியும்"

"ஸார் ரிக்ஷாவில் இரண்டுபேர் போய் வர ஒரு ரூபாய் ஆகும். வீண் செலவு எதற்கு என்றுதான்..."

"டிராமில் போய் வந்தீராக்கும்!"

"ஆமாம்"

"அப்படியானால் இருவருக்கும் மூன்றணாத்தானே ஐயா ஆகிறது?"

அச்சமயம் வீராசாமி ஏஜண்டு அறைக்குள் ஏதோ காரியமாக வந்தான்.

"என்ன வீராசாமி! டிராமிலே தானே போய் வந்தீர்கள்? எப்படி எழணா ஆயிற்று?"

"நாலணாவுக்கு காபி சாப்பிட்டோம் சார்?" "ஓஹோ...உமது காப்பிச் செலவையெல்லாம் பாங்கிக் கணக்கிலா எழுதுகிறீர்? பாங்கி என்ன கற்பக விருட்சமா அல்லது உங்கள் குடும்பச் சொத்தா?"

"இரண்டுமில்லை. பிரயாணப்படி என்றால் இம்மாதிரிச் செலவுகளையும் சேர்த்து எழுதுவதுதானே வழக்கம்? இங்கே இதற்கு முன்புகூட இம்மாதிரி படிச் செலவுகள் தாப்பட்டிருக்கின்றன...."

"அதிருக்கட்டுமையா. மூன்றணாத்தான் உமக்கு 'சாங்ஷன்' செய்ய முடியும்"

"ஸார்! நான் ரிக்ஷாவில் போகாமல் பாங்கிற்கு ஒன்பதணா லாபம் உண்டாக்கி யிருக்கிறேனே?"

"அது வேறு விஷயம்"

"நான் நடந்துபோய்விட்டு வந்தால் உங்களுக்குத் திருப்தியாய் இருக்கும்!"

"ஓய்! வீண் கதை அளக்காதேயும். உம்மை யாரய்யா காபி சாப்பிடச் சொன்னது?"

அவன் உதடுகள் கோபத்தால், துடித்தன. தொண்டை அடைத்துக் கொண்டது. கண்கள் சிவந்தன.

"அதைப் பற்றி நீங்கள்...எனக்குத் தேவையிருந்தது...பசித்தது... சாப்பிட்டேன்"

"உமது தேவைகளை நிரப்ப பாங்கி தர்ம சத்திரமல்ல" என்று கத்தினர் அவர்.

"உங்களுடைய நண்பருக்காகத் தானே நான் சென்றேன். இது பாங்கி விஷயமல்லவே? மூன்றும் பேருக்குச் செய்யும் ஊழியம் தானே?..."

"அவர் மூன்றும் பேர்வழியல்லவோய்! எனது நண்பர். நமது பாங்கில் கணக்கு வைத்திருப்பவர். அவருக்காக நீர் உதவி செய்யவில்லை. எனக்காகச் செய்தீர். என் கட்டளையை நிறைவேற்றினீர்"

"உங்களது கட்டளைகளை ஆபீஸ் ஜோலியைவிட்டு, பசியும் பட்டினியும் கிடந்து நிறைவேற்ற வேண்டுமென்று பாங்கி விதிகளில் சொல்லப்படவில்லை" "போய்யா! நீ பிரமாத சட்டம் படித்தவன்!...மரியாதையில்லாமல் பேசினல்...ஹூம்...ஜாக்கிரதை!"

"மரியாதையுடன்தான் பேசுகிறேன்; நியாயத்தைத்தான் சொல்லுகிறேன்"

"அப்படியானல் நியாயமாய் மூன்றணவைப் பெற்றுக்கொள்ளும்"

"ஸார்! எனக்கு அந்த மூன்றணவும் தேவையில்லை! உங்களுக்கு உதவி செய்ததில் எனக்கு ஏழணு நஷ்டமானுலும் பரவாயில்லை!"

ஒரு ஏளனச்சிரிப்புடன் வெளியேறி தன் இடத்தில் உட்கார்ந்து வேலையைப் பார்க்கத் தொடங்கினன் அவன். ஆபீசையே அடித்துத் தூள் தூளாக்கிவிடலா மென்று கோபம் வந்தது. அத்துடன் கண்களில் கண்ணீரும் பொங்கியது.

மாலையில் அலுவல் முடிந்து ஏஜண்டு வீடு சென்றதும், எல்லோரும் அவனைச் சூழ்ந்துகொண்டு சமாசாரம் என்னவென்று கேட்டனர். நடந்ததைச் சொன்னன் அவன்.

"அடபாவி! நாலணவுக்கா இந்த தகருறு பண்ணினன் அவன்!"

"பாங்கி கற்பகவிருட்சமா என்று கேட்டானே, அவன் மட்டும் 'பார்ட்டி'களிடமிருந்து பணமாகவும் பண்டங்களாகவும் வாங்குகிருனே அது?"

"நமக்காவது எண்பது ரூபாய் சம்பளம். அவன் மாதம் ஐநூறல்லவா வாங்குகிருன்!"

"அதிருக்கட்டும். இவன் முன்பு ஒருதடவை துறைமுகம்வரை ஒரு 'பார்ட்டி'யைப் பார்த்து வர பத்து ரூபாய் டாக்ஸி பில் போட்டான். போகும்போது அங்கே டாக்ஸியில் போய்விட்டு, திரும்புகையில் பஸ்ஸிலே வந்துவிட்டானையா! இரண்டு மூன்று ரூபாய் டாக்ஸிச் செலவு போக பாக்கி இவன் ஜேபியிலே!"

"பாருமேன்! இவன் பொறுக்கித்தனத்தை!"

"கங்காதரனுக்கு இன்று ஐம்பதினுயிரத்தை உம் மூலம் கொடுத்து அனுப்பியிருக்கிருனே? இவன் மகள் சடங்கிற்கோ, மகன் பூணூலுக்கோ அவனிடமிருந்து வெள்ளிச் சாமானைப் பிடுங்கிவிடுவான்!"

இவ்விதம் பற்பல குரலில் அனைவரும் அவரை ஏசித்தீர்த்தனர்.

ஆனல், அவன் உள்ளம் ஒரு சுரண்டல்காரனுக்கு வீண் ஊழியம் செய்ததோடு, ஏழணவையும் இழந்தோமே என்று மிக வருந்தியது. தன் நோயாளிக் குழந்தைக்கு ஆரஞ்சு வாங்கக் கூடக் காசில்லையே என்றெண்ணும்போது தான்காபிகுடித்த முட்டாள் தனத்தை நினைத்து அவன் தன்னையே நொந்து கொண்டான்.

அவன் ஒருவரிடமும் விடைபெருமல் தன் பையை எடுத்துக் கொண்டு கோட்டை ஸ்டேஷனை நோக்கி நடந்தான்.

தெருவின் திருப்பத்தில் இருந்த ஆரஞ்சுப் பழக் கூடைக்காரி, "என்ன சாமி, பழம் வேணுமா?" என்று கேட்டாள். அவன் அவளை ஏறிட்டுப் பாராமல் விரைவாகநடந்தான். அவனது நெஞ்சு வெந்தது.

"அந்த ரிக்ஷாக் காரனிடம் இருக்கும் தைரியம் கூட என்னிடம் இல்லை! அந்தப் பயல் கழுத்திலே பிரியைச் சுற்றி இழுத்து நான் எழுணுவை வாங்கி இருக்கணும்...... ரிக்ஷாவில் சென்ற கனவானும் எனது ஆபீஸ் கனவானும் ஒரே ரகம் தான்...ஒரே வர்க்கம் தான்...ஆனல் நான் தான் ரிக்ஷாக்காரனின் துணிச்சல் இல்லாத கோழையாகி விட்டேன்..."

உடனே தானும் அந்த ரிக்ஷாக்காரனும் சேர்ந்துகொண்டு எழுணுவைப் பிடுங்குவதாக ஒரு கற்பனை. தனது கற்பனையை நினைத்து அவனுக்குச் சிரிப்பு வந்தது.

வீட்டிற்குள் நுழைந்ததும் குழந்தை அவனிடம் 'அப்பா' வென்று தாவினன்.

"என்னடா கண்ணு!" அவனை வாரியணைக்கும் போது அவன் குரல் தளதளத்தது. நெஞ்சிலே அனல் காற்றுபோல ஏதோவிசிறியடித்தது.

"இவனை வைத்துக்கொள்" என்று மனைவியிடம் கொடுத்துவிட்டு, முகம் கால் கழுவ கொல்லைபுறம் சென்று அங்கு தன் கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக்கொண்டான் அவன்.

அவன் திரும்பிவரும்போது மனைவி அவன் பைக்குள் கையைவிட்டு பழங்களைத் தேடிக்கொண் டிருந்தாள். அவள் கண்களில் ஏமாற்றமும் வருத்தமும் கவிந்திருந்தன.

"என்ன பழம் வாங்கி வரவில்லையா? குழந்தை காலையிலிருந்து கேட்டு அழுதானே?" என்றுள் ஆற்றுமையோடு.

"ஆபீஸ் ஓநாய் அதைத் தட்டிப் பறித்து விட்டது!" என்று சொல்லிச் சிரிக்க முயன்றுன் அவன்.

"ஆபீஸ் ஓநாயா? யார் அது?"

அவன் அவளுக்கு ஆதியோடந்தமாய் எல்லாவற்றையும் விளக்கி விட்டு, "ஆபீஸ் நாய்க்குப் போட்டது எழுணு எனக் கணக்கெழுதி விட்டேன்" என்றுன்.

"உங்களுக்கென்ன தர்மப் பிரபு!" என்றுள் அவள் சுருக்கமாக.

"பின் அந்த வெறி நாயுடன் என்ன செய்யச் சொல்லுகிருய்? இதற்குமேல் முறைத்தால் வேலையைத் தொலைத்து விடுவான்"

"அதற்காக அவன் அடிக்க அடிக்க முதுகைக் குனிந்து கொடுக்கப் போகிறீர்களாக்கும்!"

"இல்லை, இல்லை! அந்த ரிக்ஷாக்காரன் செய்தது போல் செய்துவிட வேண்டியது தான்!"

காலையில் தான் கண்ட காட்சியை விஸ்தாரமாக அவளுக்குக் கூறினன் அவன். அவள் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

"அந்த ரிக்ஷாக்காரன் தான் பிழைக்கத் தெரிந்தவன்! நான் மட்டும் உங்கள் ஸ்தானத்தில் இருந்தால்!"

"என்னத்தைக் கிழித்து விடுவாய்"

"உங்களைப் போலவா எழுணுவை வாங்காமல் வருவேன்?"

"உன்னேடு பேச முடியாது, தாயே! நீ ஆணுய் பிறந்திருக்க வேண்டியவள்!"

இது அவளைச் சுருக்கென்று தைத்து விட்டது. சிறிது நேரம் கழித்து அவன் சொன்னன்:

"ஆம். நீ சொல்வது ரொம்பசரி... நமக்கு இன்று எழுணுத்தான் முக்கியம். அதை ஒருவன் சுரண்டுவதைத் தெரிந்தும், மனமறிந்து விட்டுவிடக் கூடாதுதான்."

இந்திய சர்க்கார் விளம்பர இலாகாவின் அறிக்கையினுடைய சில பகுதிகளின் சாரம்.

கல்வி அபிவிருத்தி

ㅇ

பி. இ. பீ.

சுதந்திர இந்தியாவின் பல பிரச்னைகளில் கல்விப் பிரச்னை முக்கியமானது. அதைத் தீர்ப்பதற்கு இந்திய அரசாங்கமும் தன்னால் இயன்றவரையில் முயற்சி செய்கிறது.

மத்திய அரசாங்கத்தின் நேரடி அதிகாரத்தில் உள்ள பல பிரதேசங்களில் கல்வித் திட்டங்கள் முழு வெற்றியோடு கையாளப்பட்டு வருகின்றன. டில்லி மாகாணத்தில் உள்ள கிராமங்களில் இதுவரை 129 ஆதாரக் கல்வி பள்ளிகள் தொடங்கப் பெற்றிருக்கின்றன. ஏற்கெனவே உள்ள 150 ஆரம்பப் பள்ளிகளையும் ஆதாரக் கல்விப் பயிற்சி ஸ்தாபனங்களாக மாற்றியமைக்க ஏற்பாடுகள் நடை பெறுகின்றன.

அனேகமாக பெரும்பாலான மாகாணங்களில் கட்டாயக் கல்விச் சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்டங்களை அமலுக்குக் கொண்டு வரவும் திட்ட மிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் ஆரம்பப் பாடசாலைகளை ஆதாரக் கல்விப் பள்ளிக் கூடங்களாக மாற்றி அமைக்க முன் வந்திருக்கிறார்கள். ஆதாரக் கல்விப் பயிற்சி ஸ்தலங்கள் ஏற்படுத்தி ஏராளமான பெண்களுக்கும் ஆண்களுக்கும் பயிற்சி அளிக்கின்றனர்.

சென்னை மாகாணத்தில் பள்ளிக் கூடம் போகும் வயது வந்த பிள்ளைகள் சுமார் 70 லட்சம் இருக்கிறார்கள். ஆனால் ஆரம்ப பாடசாலைகளில் கல்வி பெறுகிறவர்கள் சுமார் 35 லட்சம் தான். பாக்கியுள்ள 35 லட்சம் பிள்ளைகளுக்கும் பள்ளிக்கூட வசதி செய்து கொடுக்க இரண்டு ஐந்து வருடத் திட்டங்கள் தயாரித்திருக்கிறார்கள். மாகாண முழுவதிலும் கட்டாயக் கல்வி முறையை அமலுக்குக்கொண்டு வருவது பற்றி ஆலோசனை செய்கிறது அரசாங்கம். இதற்கு முதல் படியாக 500 பேருக்கு அதிகமாக வசிக்கும் கிராமங்களிலும் பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்த உத்தேசித்திருக்கின்றனர். முதியோர் கல்வி சம்பந்தமாகவும் ஒரு திட்டம் தயாரித்திருக்கின்றனர். முதியோர் கல்விக்காக 100 குடிமைப் பயிற்சிப் பள்ளிக் கூடங்களும் 6 கிராமக் கல்லூரிகளும் ஏற்படுத்த மாகாண சர்க்கார் அனுமதியளித் திருக்கின்றனர்.

முதியோர் கல்வி வேலையில் ஈடுபடுகிறவர்களுக்கு 6 பயிற்சி ஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆதாரக் கல்வி போதனை முறையில் உபாத்தியாயர்களுக்குப் பயிற்சி யளிக்க 7 பயிற்சி கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

✲

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

★

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. **18,75,000**
ரிஸர்வ் நிதி ரூ. **10,00,000**

சென்னை நகரத்தில் ஆபீஸ்கள் :—

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோட் : தியாகராயநகர்
மயிலாப்பூர் ; பெரியமெட் ; திருவல்லிக்கேணி

கிளை ஆபீஸ்கள் :

அம்பாசமுத்திரம்	மதுரை	தென்காசி
ஆம்பூர் (வட ஆற்காடு ஜில்லா)	மருதேரு	திருநெல்வேலி டவுன்
அனகாபள்ளி	மாயவரம்	திருநெல்வேலி ஜங்ஷன்
சிதம்பரம்	நாகபட்டினம்	திருச்சிராப்பள்ளி
சித்தூர் (கொச்சி)	பாலக்காடு	தூத்துக்குடி
கடலூர் என். டி.	பரமக்குடி	வேதாரணியம்
கடலூர் ஓ. டி.	புதுக்கோட்டை	வேலூர்
ஈரோடு	ராமநாதபுரம்	விஜயபுரம்
காஞ்சிபுரம்	சீர்காழி	விழுப்புரம்
காரைக்குடி	தாடபள்ளிகூடம்	விருதுநகர்
கும்பகோணம்	தஞ்சாவூர்	விஜயநகரம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள்:
பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் **12** சென்னை

உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம் விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர் :

சக்தி பிரஸ் லிமிட்டெட்

115 E, மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.

டெலிபோன் : 8135

Regd. No. M. 4162. SHAKTI August, 1949

★ ★ ★ ★ ★ ★ ★

அழகும் மணமும் பொருந்திய
புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய
பாக்குத்தூள் "அசோகா"

★ ★ ★ ★ ★ ★ ★

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்